224240

Rathnakaran

A.K. Narayana Iyengar

1933

O111;2J5H;R
3IN33
224240

85 382

# "RATHNAKARAN"

(A drama in Tamil being an adaptation of Shakespeare's 'Romeo and Juliet'.)

BY
A. R. NARAYANA IYENGAR, B. A.,
(M. R. C. C. BK. MADURA.)

*With a foreword by*
*M. R. Ry. Rao Bahadur P. Sambanda Mudaliar Avl.,*
*B. A., B. L., Small Cause Court Judge (Retd).*

Printed at the
Sri Ramakrishna Press, Madura
1933.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1934
MADRAS

...reserved ...thor
First Edition
November, 1933.
Price per Copy As. 8.

224240

# “ ரத்[illegible]ன் ”

[illegible]த்தி ஷேக்ஸ்பியர் எழுதிய ரோமியோ அன்ட் ஜூலியட் என்னும் நாடகத்தின் மொழிபெயர்ப்பு.

(மகா-௱-ா-ஸ்ரீ ராவ்பகதூர் ப. சம்பந்தமுதலியார், பி. ஏ., பி. எல்.;
அவர்களால் முகவுரையுடன்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JAN 1934
MADRAS

அ. ரா. நாராயணய்யங்கார், பி. ஏ.,
(எம். ஆர். சி. சி. பாகு.)
அவர்களால் மொழிபெயர்க்கப் பெற்றது.

பதிப்புரிமை ஆசிரியருடன்

முதல் பதிப்பு
நவம்பர் 1933

விலை
ரு. 0—8—

2829
854·81/2

# PREFACE BY THE AUTHOR.

It has long been my cherished hope and ambition to attempt an adaptation in Tamil of some work of Shakespeare, but for various reasons I could not make a beginning till August 1931, when I began translating Shakespeare's "King Richard II". The choice was rather bad, in that Kind Richard II is an historic play not having much of dramatic interest in it and that it cannot be very easily adapted for the stage. I was quite conscious of it myself, but I had to make a beginning somewhere and I gave preference to this, since that was the first work of the author which I had studied in detail in my Intermediate course. The work was completed in September, 1931, and was handed over to M. R. Ry., Rao Bahadur P. Sambanda Mudaliar Avl., B. A., B. L., when he was here, for his kind perusal and opinion. He had the kindness to go through it, but his opinion of it was delayed, since he wrote to me to say that he will tell everything in person, when he would be going over to Madura, in connection with the Chitra festival in April, 1932. In the meantime, I began translating "Romeo and Juliet."

This work was begun on 16-10-31 and completed on 1-12-31. This was also handed over to M. R. Ry., Rao Bahadur P. Sambanda Mudaliar Avl., B. A. B. L., for his kind perusal and remarks and he, amidst his multifarious activities, found time to go through the work with a critical eye and had also the kindness to write out a foreword which is published in the next page. I always look upto him as my Guru, and I do

not hesitate to acknowledge the very valuable advice he gave me in the matter of rendering English verse in Tamil prose. I have, as he has remarked in his foreword, as far as possible, translated the idea instead of the mere verse. An appreciation from the pen of no less a person than M.R.Ry., Rao Bahadur P. Sambanda Mudaliar, who has himself produced many original dramas of a very high order, and who is known to all dramatists, both professional and amateur, as an exponent of the present-day histrionic talents, will, I am sure, induce all who come across this book to go through it once and see, for themselves what it is like.

I beg to acknowledge my indebtedness to two of my colleagues in office, Messrs. G. S. Subbaraya Aiyar and S. Tirumalachari, to the former for having transcribed the manuscript and to the latter for his invaluable help in the matter of proof-reading and bringing the work to its present form.

To conclude, I shall deem it a great honour done to me, if any amateur dramatic club would condescend to stage this play, but at the same time I would only request them to obtain my written permission beforehand.

Madura,
30th October '33.

Author.

# FOREWORD.

By M. R. Ry., Rao Bahadur P. Sambanda Mudaliar Avl., B. A., B. L.,

"Romeo and Juliet" is one of the difficult plays of Shakespeare to translate. My friend Mr. A. R. Narayanan has succeeded in this difficult task. I prefer this very much to a previous work of his, in the same line, namely an adaptation of "Richard the Second". I am glad that my friend instead of translating literally as some others have done, has followed my principle of translating the idea contained than the mere words; in short the present work of the author is what I call an "adaptation" on the right lines. I wish my young friend all encouragement in this work and pray that he may turn out adaptations of other works of the Great Dramatist as well.

Madura,
22—4—1932.

(Sd.) P. Sambandam.

# CAST OF CHARACTERS.

## நாடக பாத்திரங்கள்.

---

| | |
|---|---|
| இராஜேந்திரன் | ... புஷ்பபுரியின் அரசன். |
| கமலசேனன் | ... ஒரு பிரபு. இளவரசருடைய நெருங்கிய பந்து. |
| விசித்ரவீர்யன்<br>வீர்யவர்மன் | } இரண்டு பிரபுக்கள். ஒருவர்க்கொருவர் எப்பொழுதும் விரோதம். |
| ரத்னாகரன் | ... விசித்ரவீர்யனின் புதல்வன். |
| நித்யானந்தன் | ... இளவரசனுடைய பந்து. ரத்னாகரனுடைய சிநேகிதன். |
| குசுமாகரன் | ... விசித்ரவீர்யனுடைய பந்து. ரத்னாகரனுடைய சிநேகிதன் |
| ருக்மாங்கதன் | ... லீலாவதியினுடைய பந்து. |
| யோகாநந்தர் | ... ஒரு சந்நியாசி. |
| சுகுணசீலர் | ... மற்றொரு சந்நியாசி. |
| மித்திரகுப்தன் | ... ரத்னாகரனுடைய வேலையாள். |
| மானசாரன்<br>காந்தகன்<br>சோமதத்தன் | } வீர்யவர்மனின் வேலையாட்கள் |
| ரத்னோத்பவன் | ... விசித்ரவீர்யனின் வேலையாள். |
| கமலாவதி | ... விசித்ரவீர்யனின் மனைவி. |
| லீலாவதி | ... வீர்யவர்மனின் மனைவி. |
| சந்த்ரவதனி | ... வீர்யவர்மனின் புதல்வி. |
| அஞ்சனாவதி | ... சந்த்ரவதனியின் தோழி. |

இடம்:— புஷ்பபுரியிலும், ஒரு சமயத்தில் (ஐந்தாவதுபாகத்தில் ரத்னகிரியிலும்.

---



## இடம்:— புஷ்பபுரியில் ஒரு மைதானம்.

மானசாரனும், காந்தகனும், கையில் கத்தி, தடி சகிதமாய் ஒருவர்க்கொருவர் எதிர் பக்கத்திலிருந்து வருகிறார்கள் சந்திப்பு.

---

**மானசாரன்:**— அண்ணே! என்ன ஒங்களை ரொம்பநாளாகக் காங்கலே, வேலைரொம்ப அதினம்போலிருக்கு.

**காந்தகன்:**— ஆமாம். தம்பி நாளுக்குநாளு வேலை அதிகமாயிக்குண்ணே இருக்குது.

**மானசாரன்:**— என்னவேலை அண்ணே, அப்பிடி? எல்லாம் அடிதடிதானே.

**காந்தகன்:**— அல்லாட்டாக்கி வேறென்னவேலை நம்பள்கி இருக்குது! நித்தியம் நாலுசண்டை, இரண்டுமேஸ்ராட்டு இல்லாட்டாக்கி சோறுமண்ணுதானே.

**மானசாரன்:**— ஆமாம். அண்ணே உனக்கு நம்ப எஜமான்க விரோதி ஆளுகளெல்லாம் நல்லாத்தெரியுமா?

**காந்தகன்:**— எனக்காதெரியாது! ஆளுகளைமட்டுமா. தெருவிலேபோகலே நாய். அதுமுதல் எனக்கு நம்பது, நம்ப சண்டைகாரன்களது, இன்னு தெறியும். அல்லாடாக்கி முடியும் என்னைப்போல சண்டைபோட.

**மானசாரன்:**— ஆமாம். அண்ணே. நேத்துக்குபாரு. நான் தெருவிலே போயிக்கிணே இருந்தேன். எனக்கு எதிரே ஒருத்தன் வந்தான். அவனை நம்ப விரோதி ஆளு இன்றுக்கிட்டு திட்டினேன். அவன்கையிலே ஒரு தடி வெச்சிருந்தான். அதாலே என்னை இரண்டு நொக்குநொக்கினான் பாரு. என் முதுகு தடிச்சுப்போச்சு.

**காந்:**— தம்பி! ஆளுகளை நன்றாத்தெருஞ்சுக்கிடாமல் சண்டைக்குப்போகாதே. நானும் நம்ம எஜமான்கிட்டே வேலைக்கு வந்தபுதிசிலே அப்படித்தான் சண்டைபோட்டு நல்ல

உதை வாங்கியிருக்கேன். இப்போதான் இந்தவேலையில் நன்னுதேர்ந்துட்டேன்.

மான:— அண்ணே! அதோபார். நம்பவிரோதிங்க ஆளு இரண்டுபேர்வாராங்க. கத்தியைக் கெட்டியாய்ப்பிடிச்சுக்கோ ஒருகைபாக்கலாம்.

காந்:— ஆமாம். அடேதம்பீ! உஷாராகவிரு. நான் ஒனக்கு வேண்டிய ஒதவிசெய்கிறேன்.

மான:— அப்போஅண்ணே நீ ஒளிஞ்சிக்கிடப்போரையோ. நல்ல தைர்யம் சொல்லிக்கிட்டாய்.

காந்:— பயப்படாதே தம்பீ! நம்ப முதலே சண்டை ஆரம்பிக்கக்கூடாது. அவங்க ஆரம்பிக்கட்டும்.

மான:— அவங்கவரப்போ நான் முகத்தை சுளுக்கிறேன். வேணுமானு அவங்க சண்டையை முதலே ஆரம்பிக்கட்டும்.

காந்:— அதுபோதாது. அவங்களைப்பார்த்து என் மீசையை முறுக்குறேன். அத்தைப்பாத்தாவது சண்டைக்கு வாராங்களா பாப்போம்.

(ரத்னேத்பவனும் மித்ரகுப்தனும் பிரவேசிக்கிறார்கள்)

ரத்னேத்பவன்:— ஏனைய்யா! எங்களைபாத்தா மீசையைமுருக்குறாய்

காந்:— என்மீசையை முறுக்கிறேன்.

ரத்னே:— மீசையைமுறுக்குது தெரியுது எங்களைப்பாத்தா முறுக்குறாய் இண்ணு கேக்கறேன்.

காந்:— (மானசாரனைப்பார்த்து) ஆமாம் இண்ணு சொன்னு நம்ப பக்கம் நாயமிருக்குமா.

மான:— (காந்தகனைப்பார்த்து) இல்லை

காந்:— உங்களைபார்த்து மீசைமுறுக்கலே. ஆனு மீசைமுறுக்கறேன்.

மான:— என் ஐயா! சண்டைக்கா ஆரம்பிக்கிரே.

ரத்னே:— சண்டையா! ஒண்ணுமில்லை



காந்:— சண்டைக்குவரயானு நான்தயார் ஒனக்குச்சரியா நான் சண்டைபோடுவேன்

ரத்னே:— அம்பட்டுதானே. எனக்குமேலில்லையே

மான:— (காந்தகனைப்பார்த்து) உனக்கு மேனுண்ணு சொல்னு. அதோ நம்ப ஆளுவாராங்க. ஒரு கை பார்த்துடுவோம்

காந்:— (ரத்னேத்பவனைப்பார்த்து) உன்னைப்பாக்க நான் நல்லா சண்டைபோடுவேன்.

ரத்னே:— பொய்சொல்லாதே.

காந்:— தைர்யமிருந்தாக்கி சண்டைக்குவா. தம்பீ! காந்தகா! என்பக்கத்திலேயே இரு. (சண்டையிடுகிறார்கள்)

(குசுமாகரன் பிரவேசிக்கிறான்)

குசுமாகரன்:— யாரது? இங்கு சண்டையிடுவது? சீ. முறடர்காள்! விலகுங்கள். கத்திகளை உறையிற்போடுங்கள். (சண்டையைவிலக்க முயலுகிறார்)

(ருக்மாங்கதன் பிரவேசிக்கிறான்)

ருக்மாங்கதன்:— குசுமாகரா! உனது வீர்யத்தை இந்த பேடிகளிடம் காட்டிவிட்டாயோ! சீ. வா. என்னுடன் சண்டைக்கு, வீராப்பு கூறுகிறான், தனக்கு தாழ்ந்தவர்களிடம்.

குசுமா:— ஐயோ! இதென்ன விந்தையாகவிருக்கிறது? நான் இந்த முறடர்கள் சண்டைசெய்துகொண்டிருந்ததை விலக்கிக்கொண்டல்லவோ இருக்கிறேன். நீயும் என்னுடன் சண்டையைவிலக்கு. அது நியாயமாகும்.

ருக்:— கையில் கத்தியை ஓங்கி அடிப்பது சண்டையைவிலக்குவதாக அர்த்தமோ! மிகவும் நன்றாகவிருக்கிறது. வா. என்னுடன் சண்டைக்கு. (இருவரும் சண்டையிடுகிறார்கள்.)

விசித்ரவீர்யன், வீர்யவர்மன், இரண்டுபிரபுக்களைச் சேர்ந்தவர்களும் வந்து சண்டைசெய்கிறார்கள். ஊரிலுள்ள இதர ஜனங்களும், கம்புதடிகளுடன்வந்து இரு

புறமும் சேர்ந்து சண்டையை விலக்குகிறார்கள்.

---

**ஊரார்கள்:**— எங்குபார்த்தாலும் அடிதடி. எப்பொழுதும் கலகம்தான். இங்குவிசித்ரவீர்யன், வீர்யவர்மன் இவர்கள் இருவரும் உயிருடனிருக்குமளவும் இவ்வூரில் கலகம் தவிர நியாயம் கிடைக்கப்போகிறதில்லை. இரண்டு கக்ஷிகளைச் சேர்ந்தவர்களையும் பிடித்து உதையுங்கள் பார்க்கலாம்.

(வீர்யவர்மன் லீலாவதியுடன் பிரவேசிக்கிறான்)

**வீர்யவர்மன்:**— இதென்ன இறைச்சல் இங்கே. யாரடா அங்கே. என்னுடைய உடைவாளைக்கொண்டுவா.

**லீலாவதி:**— தங்களுடைய நிலைமையில் கையில் ஊன்றுகோலிருக்கவேண்டுமே ஒழிய உடைவாளேன்!

**வீர்ய:**— என் உடைவாளெங்கே! அதுதான் வேண்டும் எனக்கு இப்பொழுது. அதோபார் விசித்ரவீர்யன் என்னைப்பார்த்து கத்தியை ஓங்கி ஏளனம் பெசுகிறான்.

(விசித்ரவீர்யனும் கமலாவதியும் பிரவேசிக்கிறார்கள்)

**விசித்ரவீர்யன்:**— தடிப்பயல் அந்தவீர்யவர்மனெங்கே! ஐயோ! என்னை தடங்கல் செய்யாதே நான்போகட்டும்.

**கமலா:**— இந்தசமயத்தில் நீங்கள் ஓரடி கூட மேல் எடுத்து வைக்கக்கூடாது. உங்களைப்போகவிடேன்.

(மஹாராஜா வேலையாட்களுடன் பிரவேசிக்கிறார்)

**மஹாராஜா:**— இதென்ன அநியாயம்! எப்பொழுதும் சண்டைசச்சரவுதானா! இம்மாதிரி நீங்கள் இதற்குமுன் இரண்டு தடவை சண்டையிட்டுக்கொண்டு நாம் முதல் வெளிவந்து சண்டையை விலக்கும்படியாக நேரிடும்படி செய்திருக்கிறீர்கள். இப்பொழுது நடந்திருக்கிறது மூன்றாவது தடவையாகிறது. (விசித்ரவீர்யன், வீர்யவர்மன் இவர்களைநோக்கி) இம்மாதிரி ஏற்படும் கலகங்களுக்கு காரணம் உங்களிருவருக்கும் ஒருவருக்கொருவர் மேலி



ருக்கும் துவேஷம்தான் என்பதும் நமக்குநன்றாகத்தெரியும். இதுதான் கடைசிதடவை நான் உங்களையன்னிப்பது. (இதர ஜனங்களைப்பார்த்து) இனி இம்மாதிரி தெருவீதிகளில் நீங்கள்யாராவது சச்சரவிட்டால் உங்களுக்கு சிறைச்சேத தண்டனைவிதிக்கப்படும். தெரிகிறதா! எல்லோரும் அவரவர் இருப்பிடம்போங்கள். வீர்யவர்மா நீ என்னுடன் இப்பொழுது அரண்மனைவா. விசித்ரவீர்யா நீ இன்னும் இரண்டுமணி நேரம் சென்று நமது அரண்மனைக்கு வருவாய். உங்களுக்குள்ளிருக்கும் விரோதத்தை எவ்விதத்திலாவது ஒழிக்க வழிதேடவேண்டும்.

இளவரசர், வீர்யவர்மன் மற்றவர்கள் எல்லோரும் போகிறார்கள்.

**விசித்ர வீர்யன்:**— குசுமாகரா! இந்தச் சமயத்தில் இம்மாதிரி கலகம் ஏற்படவேண்டிய காரணம் என்ன? உனக்குத் தெரியுமா?

**குசுமாகரன்:**— எனக்கு அதெல்லாம் தெரியாது. நான் இங்கே வரும்பொழுது நமது ஆட்களில் ரத்னோத்பவனும் மித்ரகுப்தனும் நமதுவிரோதி ஆட்களில் மானசாரனும் காந்தகனும் சண்டைசெய்துகொண்டிருந்தார்கள். நான் அதைப்பார்த்து சண்டையை விலக்கலாமென்று வந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் பாருங்கள். ருக்மாங்கதன்கையில் கத்தியை ஓங்கிக்கொண்டு என்னுடன் சண்டைக்குவந்தான். நான் என்னாலானமட்டிலும் மற்றவர்களுடைய சண்டையைவிலக்குமாறு அவனிடம் மன்றாடினேன். அவன் அதல்லாமல் என்னுடன் சண்டைசெய்வதிலேயே மும்மறமாகவிருந்தான். நாங்கள் சண்டைக்கு ஆரம்பிக்கும்பொழுது அண்டையிலிருந்து ஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிவிட்டனர். அப்புறம் நீங்கள் வந்தீர்கள். கடைசியாக நமது அரசனும்வரும்படி நேரிட்டது. மற்றவிஷயங்களோ உங்களுக்கு நேரிலேயே தெரியுமாகையால் நான் சொல்லவேண்டியதில்லை.

கமலா:— அதெல்லாம்மிருக்கட்டும் ரத்னாகரனெங்கே? நீ அவனை இன்றயத்தினம் பார்த்தாயா? நல்லவேளை இக்கலகத்தில் அவனில்லாமலிருந்தது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

குசுமா:— அம்மணி! சூர்யோதயத்திற்கு ஒருமணிநேரத்திற்கு முன்பாகவே நான்படுக்கைவிட்டெழுந்து வெளியேசென்றேன். அப்பொழுது கூப்பிடுதூரத்திற்கப்பால் ரத்னாகரனும் தனிமையாகப் போய்க்கொண்டிருந்தான். அவ்வளவு அதிகாலையில் அவன் எழுந்திருந்து அம்மாதிரி தனியாகப்போவதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு சற்று வேகமாக நடந்து அவனைப் பின்தொடரலாமென்று சென்றேன். நான் அவ்விதம் வருவதை அவன்கவனித்து அங்குள்ள செடிமறைவில் மறைந்துவேறொரு பாதையில் போய் விட்டான். அதற்கப்புறம் நான் அவனைச் சந்திக்கவில்லை.

விசித்ர:—இம்மாதிரி அநேக தினங்ககளில் அவனைத்தனிமையாக அதிகாலையில் பார்த்ததாக ஜனங்கள் கூறுகின்றனர். சிலதினங்களில்தனது அறையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்து வெகுநேரம் வரையும் வெளிவராமல் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். அவன் மனதிலிருப்பதோ நமக்கொன்றும் தெரியவில்லை. யாராவது அவனுக்கு நல்லபுத்திசொல்லி நல்வழியில் திருப்பினால் தான் என் மனக்கிலேசம் தீரும்.

குசுமா:— மாமா! உங்களுக்கு அதன் காரணம் தெரியுமோ?

விசித்ர:— எனக்குதெரியவுமில்லை, ரத்னாகரனிடமிருந்து தெரிந்து கொள்ளலாமென்றாலும் அதுவும் கூடவில்லை.

குசுமா:—ஏன் தாங்கள் அவனிடம் கேட்டுப்பார்க்கிறதுதானே?

விசித்ர:— நான் என்ன இன்னும் கேட்கவில்லையென்றா நினைக்கிறாய்? நானும் கேட்டாய்விட்டது. அவன் தாயாரும் எவ்வளவோ கெஞ்சிக்கேட்டாய்விட்டது. எனது சிநேகிதர்கள் அனேகர் மூலமாகவும் கேட்டாய்விட்டது. ஒன்றும் பிரயோசனப்படவில்லை. உண்மையைக் கூறினாலல்லவோ



அவனுடைய வருத்தத்தை நீக்குவதற்குள்ள வழியை நாம் தேடலாம்.

குசுமா;— மாமா! ரத்னாகரன் அதோ வருகிறான் நீங்கள் இந்த மரங்களுக்கிடையில் மறைந்து அப்படியே வீட்டிற்குச் செல்லுங்கள். நான் அவனிடம் இது விஷயமாய்க்கேட்டுப் பார்க்கிறேன்.

விசித்ர:— மெத்தவும் சந்தோஷம். உன்னிடமாவது உண்மையைத் தெரிவிக்கிறானா பார்ப்போம். கமலா! வா நாம் போகலாம்.

(விசித்ரவீர்யனும், கமலாவும் போகிறார்கள்.)

(ரத்னாகரன் வருகிறான்.)

குசுமா:—வாடா, அப்பா ரத்னாகரா! உன்னை இவ்வளவு நேரம் காணவில்லையே. எங்கே போயிருந்தாய்?

ரத்னாகரன்:-- இப்பொழுது மணி என்ன இருக்கும்?

குசுமா:—மணி 10 ஆகிறது.

ரத்னா:—அப்படியா? அவ்வளவு நேரமா ஆகிவிட்டது! ஏதோ எனக்கிருந்த மனவருத்தத்தில் நாழிகை ஆனது கூடத் தெரியவில்லை. ஆமாம் சற்று முன்பு உன்னிடம் பேசிக்கொண்டிருந்து, திடீரென்று போனது எனது தகப்பனார் தானே?

குசுமா:—ஆம். அதிருக்கட்டும் சற்றுமுன்பாக ஏதோ வருத்தப்பட்டுக்கொண்டிருந்ததாகத் தெரிவித்தாயே! அதற்கு என்ன காரணம்?

ரத்னா:—காரணம் என்ன இருக்கக்கூடும்? நான் ஒரு வஸ்துவின் மீது ஆசைவைத்து, அந்தவஸ்து எனக்கு கிடைக்கவில்லையென்றால் வேறென்ன இருக்கக்கூடும்?

குசுமா:— நீ சொல்வது ஒன்றும் எனக்குப் புலப்படவில்லையே ஏதாவது...........கா..........தல்............சம்பந்தமாகவிருக்கக்கூடுமோ?

ரத்னா:— ஆம். நீ தான் தெரிந்து கொண்டுவிட்டாயே.

குசுமா:—அது சரி. அவ்விதம் காதல் கொண்டிருப்பவன் வருத்தப்பட்டுக்கொண்டிருக்க வேண்டிய காரணம் என்ன? சந்தோஷமாகவாகவல்லவோ இருக்கவேண்டும்.

ரத்ன:—உனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான்மட்டும் காதல் கொண்டால் போதுமா? நான் காதல் கொண்டிருக்கும் வஸ்து திரும்பி என்னிடம் பிரேமை காட்டினலல்லவோ, காதல் பலிதமாகும்! சரி இதைப்பற்றி வீணில் பேசிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்! ஆமாம் இங்கே மனிதர்களுடைய காலடிகள் அதிகமாகக்காண்கின்றதே! ஏதாவது சண்டை நடந்ததா என்ன? என்னபாரு! எங்குபார்த்தாலும் சண்டை சச்சரவுதான். எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை, நான் போகிறேன்.

(மெல்லப் போகிறான்)

குசுமா:—ரத்னகரா! என்னைமட்டிலும் தனியாகவிட்டு விட்டுப் போவது உனக்கு அழகோ? நானும் உன்னுடன் வருகிறேன்.

ரத்ன:—நீ என்னுடன் வரக்கூடாதென்று நான் போகிறேன்! ஏதோ இப்பொழுது எனக்கிருக்கும் மனோநிலைமையில் தனிமையாக விருத்தல் நலமென்று நினைத்தேன்.

குசுமா:—உனக்கு எப்பொழுதுமே தனியாகவிருப்பதில் தான் பிரியம். அதிருக்கட்டும். நீயார்மீது காதல்கொண்டிருக்கிறாயென்று என்னிடம் சொல்லவில்லையே.

ரத்ன:—பார்த்தாயா! மறுபடியும் என்னைத்தொந்திரவுசெய்கிறாயே! எல்லாம்உன்னிடம் சொல்லிமுடியுமா? யார்மீதுகாதல் கொள்ளக்கூடும்? எல்லாம் ஒரு பெண்மணியின் மீதுதான்

குசுமா:—"காதல்" என்று தெரிவித்த உடனேயே அது பெண்மணியின் மீதுதான் என்பதை நான் ஒருவாறு அறிந்து கொண்டேன். நீ காதல் கொண்டு அக்காதல் பலிதமாகாதென்று சந்தேகிக்கச்செய்யும் மாது சிரோண்மணி யாரோ?

ரத்ன:—கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளப்போகிறாய் போலிருக்கிறது? நான் ஒன்றுமே



சொல்லப் போகிறதில்லை. அந்தமாது ரொம்பவும் அழகு வாய்ந்தவள். ரதிதேவியை ஒத்தவள் என்றே சொல்லலாம் ஆனால் மன்மதபாணங்களுக்கு இடம் கொடாமலிருப்பவள் என்பது மட்டும் நிச்சயம்.

குசுமா:—என்? அப்பொழுது அம்மாதுக்கு விவாஹமே செய்து கொள்வதான அபிப்பிராயமில்லையோ?

ரத்ன:—அவ்விதம் தான் தெரிகிறது. குசுமாகரா! அம்மாது கன்னிகையாகவே தனது வாழ்நாட்களைக்கழித்து இறந்துவிட்டாளோ, இனிமேல் பூலோகத்தில் "அழகு" என்று சொல்லக்கூடிய அம்சமும் எடுபட்டுப் போகும் என்பதிற் சந்தேகமில்லை.

குசுமா:—அவ்வளவு முறண்டுடனிருக்கிற பெண்மணியின் மீது காதல் கொள்வதில் பயனென்ன? அவளைப்பற்றி நினையாமல் அவளை மறந்து விடப்பார்ப்போம்.

ரத்ன:—அதுதானே முடியவில்லை. அது எப்படிக்கூடும்? நீதான் சொல்லேன்.

குசுமா:—அவளையேத்யானம் செய்து கொண்டிருந்தால் தானே கஷ்டம். நாலு இடங்களுக்குப் போகிறது. இதர பெண்மணிகளையும் பார்க்கிறது. யார் மிகவும் லக்ஷணம் வாய்ந்தவள்; யார்உன்னிடம பரஸ்பராகாதலுடன் நோக்குகிறாளென்று கவனிக்கிறது; அவ்விதம் செய்கிறதுதானே.

ரத்ன:—நீ எந்தபெண்மணியை காட்டியபோதிலும் அவள் என்காதலியினுடைய பாத தூள் விலைபெறமாட்டாள். என்காதலிக்குசமானம், என்காதலிதான். நீ சொல்லுகிறவழியினால் என்காதலியின்பேரில் எனக்கு நினைவு அதிகமாகுமேயொழிய ஒருக்காலும் குறையப்போகிறதில்லை.

குசுமா:—உனக்கு எப்பொழுதுமே இந்தப்பிடிவாதம்தான். உன்னை, நீ தற்போது காதலிக்கும் பெண்மணியைத்தவிர வேறு எவளையாகிலும் விரும்பச் செய்யாவிட்டால் என் பெயர் குசுமாகரன் இல்லை. அதைப்பார்ப்போம்

(இருவரும் போகிறார்கள்).

அங்கம் 1. களம் 2.

## இடம்:— ஒருதெரு.

*வீர்யவர்மன், கமலசேனன், ஒருவேலையாள் இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.*

---

**வீர்யவர்மன்:—** இம்மாதிரி ஏற்படும் கலகங்களுக்கு விசித்ர வீர்யனும் ஜவாப் சொல்லவேண்டியதுதான். நான்மட்டும்தானா பொறுப்பு? என்னமோ? எங்களுக்கு இவ்வளவு வயதாகியும் எங்களுக்குள்ளிருக்கும் துவேஷத்தை ஒழிக்க முடியவில்லை.

**கமலசேனன்:—** உங்களைப்போலுள்ள பிரபுக்கள் இம்மாதிரி கலகம் செய்வது நன்றாகத்தானில்லை. அதிருக்கட்டும். அப்புறம் எனக்குப்பதில்ஒன்றும் தாங்கள் தெரிவிக்கவில்லையே.

**வீர்ய:—** ஏன்? முன்னமேயே தெரிவித்தாய்விட்டதே எனது அபிப்பிராயத்தை குழந்தை சந்த்ராவுக்கு இன்னும் உலகவியவகாரம் ஒன்றுமேதெரியாது. இப்பொழுது தான் அவளுக்குப் பதினைங்குவயதாகின்றது. இன்னும் இரண்டு வருஷங்களாவது சென்றபின்புதான் அவளுடைய விவாகத்தைப்பற்றிப்பேசக்கூடும்.

**கமல:—** தங்களுடைய பெண்ணைப்பார்க்கிலும் வயதிற்சிறியவர்கள் அனேகருக்கு விவாகம் ஆகியிருக்கிறதே.

**வீர்ய:—** அப்பேர்பட்டவர்கள் சீக்கிரத்திலேயே தங்களுடைய யௌவனத்தையும் இழந்துவிடுகிறார்கள். எனக்கு இருக்கக்கூடிய ஐச்வரியங்களுள் என் சந்த்ரா ஒருவளுக்குச் சமானமானது வேறு எதுவும்கிடையாது. அவளுடைய நீடூழிவாழ்க்கையை கவனித்துத்தான் நான் காரியங்கள் செய்யக்கடமைப்பட்டவன். கமலசேனா! இப்பொழுது என்ன தவறிப்போய்விட்டது? நீ தினம்தோறும் என் வீட்டிற்கு வந்துகொண்டிரு. குழந்தை சந்திராவிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்து, அவள் உன்னை



நேசிக்கிராளா வென்பதைக்கவனி. அவள் உன்பேரில் காதல்கொண்டால், அப்புறம் யாதொருதடையும் கிடையாது. அவளுக்குச் சம்மதமெதுவோ, அதுதான் எனக்கும்சம்மதம். ஏதோ உன்னிடம் சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன். (சற்று யோசித்து) ஆம். இப்பொழுது ஞாபகம்வருகிறது. இன்றுராத்திரி நமது பங்களாவில் ஒருவிருந்து ஏற்பாடுசெய்திருக்கிறேன். அதற்கு நம் புஷ்பபுரியிலுள்ள முதன்மையான பிரபுக்களை அழைத்திருக்கிறேன். உன்னையும் இப்பொழுது அழைக்கிறேன். கட்டாயம்வா. இன்றயத்தினம் நமது புஷ்பபுரியில் சௌந்தர்யவதிகளாக விளங்கும், மாது சிரோண்மணிகளில் பலரை நம் பங்களாவில் பார்க்கலாம். சரி. நேரமாகிவிட்டது. தாங்கள் போய்வாருங்கள். (வேலைக்காரனைப்பார்த்து) அடே! இந்தா. இந்தக்கடிதங்களை எடுத்துக்கொண்டுபோய் (கையில் ஒரு காகிதக்கட்டைக்கொடுக்கிறான்) அதில் எழுதியிருக்கும் பிரபுக்கள் வீட்டில்கொண்டு சேர்க்கவேண்டும். ஒரு கடிதமாவது தவறக்கூடாது. தெறிகிறதா? கவனமாகச்செல்.

*வீர்யவர்மனும், கமலசேனனும் வெவ்வேறுதிசைகளில் போகிறார்கள்.*

**வேலையாள்:—** எசமான்க, நம்பளைத் தபால்காரன்வேலை செய்யச்சொல்லிப்போட்டாங்க. நம்பள்கி, எழுதப்படிக்கத் தெறியாதுங்க. அத்தை நம்ப எசமான்கிட்ட சொல்லிப்போட்டாக்கி, நம்பள்கி பெண்ஜண்கொடுத்துடுவாங்க. இப்போ என்னசெய்யறதுண்ணு தெரியலே. இருக்கட்டும். எந்தப்பயலாவது கொஞ்சம் படிச்சவன் இங்கே வரமாட்டான்? அவன்கிட்டகாட்டி தெரிஞ்சுக்கினுவோம்.

*(குசுமாகரனும், ரத்னாகரனும் பிரவேசிக்கிறார்கள்)*

**குசுமா:—** இந்தா. நான்தான் அப்பொழுதே முதலே சொல்லியிருக்கிறேனே. நானு [illegible]போய்,

இதர பெண்மணிகளையும்பார்த்து பழகினாலல்லவோ, அழகில் சிறந்தவள்யாவள்; குலத்திற்சிறந்தவள்யாவள்; படிப்பிற்சிறந்தவள் யாவள்; என்பது தெறியவரும்.

ரத்னா:— நீ சொல்லிய குணங்கள்யாவும் பொருந்தியவள் ஒருவள் தான். அவளைத்தான் நான் காதலிக்கிறேன்.

குசுமா:—உனக்கு எப்பொழுதுமே இந்தமுரண்டுதான். சமயம் வரும். அப்பொழுது நான் சொல்லிக்காட்டுகிறேன் பார்.

ரத்னா:— தாராளமாகச் சொல்லிக்காட்டு. அதற்கு இப்பொழுது என்ன?

வேலையாள்:— எசமான் கும்பிடரேன். நம்பள்கி வாசிக்கத் தெரியும்.

ரத்னா:— அவரவர் அனுபோகத்தைக்கேட்டால், அவரவருடைய தலையெழுத்தை வாசித்துவிடுவேன்.

வேலை:— அந்தப்படிப்பிங்க, புத்தகமில்லாமலே தெரிஞ்சுக்கிடலாமிங்க. நம்பள்கி காகிதம் கொடுத்தாக்கிப் படிக்கிறான்.

ரத்னா:— அதிலெழுதியிருக்கும் பாஷை எனக்குத்தெரிந்ததாக விருந்தால் வாசிக்கக்கூடும்.

வேலை:— ரொம்ப சரியுங்க. நிஜம் சொல்லறான். நானு வர்ரேன். (மெல்லப்போகிறான்)

ரத்னா:— அடே! நில். நான் வாசிக்கிறேன். (கடிதங்களை வாங்கிப்பார்த்துப் படிக்கிறேன்.) "சூரசேனன், அவனுடைய மனைவி, பெண்கள்"; "புருஷோத்தமனும், அவன் சகோதரிகளும்"; "ராஜீவி," "க்ருஷ்ணராஜாவும், அவன் மருமகளும்"; "நித்யானந்தனும், அவன் சகோதரனும்," "மாமா கமலநாதன், அவர்மனைவி, பெண்கள்," "எனது சகோதரியும், அவள் மகள் சுபத்ராவும்"; "ருக்மாங்கதன்," "பத்மாவதியும், அவளுடையபெண் கிருஷ்ணவேணியும்".—சரிதான் நல்ல கூட்டம் (கடிதங்களைத் திரும்பக் கொடுக்கிறான்.) இவர்கள் எல்லோரும் எங்கே கூடப் போகிறார்கள்?



வேலை:— அங்கேதானுங்க.

ரத்னா:— அங்கேயென்றால் எங்கே?

வேலை:— எங்கவீட்டுக்கு வாராங்க. விருந்துக்கு.

ரத்னா:— உங்கவீடென்றால் யாருடையது?

வேலை:— எங்களஜமான் மங்களாவுக்கு.

ரத்னா:—சரிதான். நான் முதல் முதலாகவே அதைகேட்டிருக்க வேண்டும் உங்கள்யஜமான் யாரென்று?

வேலை:— இப்பொ கேக்காமலே சொல்லறேன். இந்த ஊரிலே வீர்யவர்மன் இண்ணு இருக்கலே. அவங்கதான் எங்க ஏசமான்க. நீங்க அவர் விரோதிஆளுங்களா. இல்லாட்டாக்கி எங்கமங்களாக்கு வரலாம். எசமான்கிட்ட உத்திரவு வாங்கிறேன். (போகிறான்.)

குசுமா:—பலே. நான் நினைத்ததற்கு அனுகூலமாகவே கார்யங்கள் நடைபெருகின்றன. இந்த வீர்யவர்மன் பங்களாவுக்கு உனது காதலி சுபத்ராவும், அழைக்கப்பட்டிருக்கிறாள். நீயும், நானும் இன்று இரவு அங்குபோவோம். அங்கே நான் உனக்கு ஒரு பெண் திலகத்தை காட்டுகிறேன். அவளைப்பார்த்த நிமிஷத்திலேயே உனது சுபத்ராவை நீ அலக்ஷ்யம் செய்யாவிட்டால் என் பெயரையே மாற்றிக் கொள்கிறேன்.

ரத்னா:—இந்தா. இந்தக்கதை எல்லாம் என்னிடம் அளக்காதே. இனிமேல் சுபத்ராவைப்பார்க்கிலும் ரூபத்தில் சிறந்தவளை பிரமதேவன் படைத்து ஆகவேண்டும். இருந்தபோதிலும் நீ சொல்கிறபடி அங்கு உன்னுடன் வருவதிற் தடையில்லை. ஏதோ நீ சொல்லுகிற ரதிதேவியைப் பார்க்கப் போகிறதை வ்யாஜமாகக்கொண்டு, எனது சுபத்ராவை யாவது கண்கள் குளிரப்பார்க்கலா மன்றோ!

(போகிறார்கள்.)

களம் 3.

## வீர்யவர்மன் வீட்டில் ஓர் அறை.

(லீலாவதியும், அஞ்சனவதியும் பிரவேசிக்கிறார்கள்,)

---

லீலா:—அஞ்சன! குழந்தை சந்த்ராவெங்கே? அவளைப்பார்த்து இங்கே கூட்டிக்கொண்டுவா.

அஞ்சனவதி:—எங்கேயோ போய்விடுகிறாள்! சந்த்ரா! அம்மா. சந்த்ரா! எங்கடிபோய்விட்டாய்?

(சந்த்ரவதனி பிரவேசிக்கிறாள்.)

சந்த்ரவதனி:—என்ன இந்தக்கத்துக்கத்துகின்றாய்? யார் கூப்பிடுகிறார்கள்?

அஞ்சன:—உன் தாயார்தான்.

சந்த்ரவதனி:—அம்மா, இதோ வந்துவிட்டேன். என்ன சமாசாரம்?

லீலா—இதோ சொல்லுகிறேன். கேள். அஞ்சன, நீபோகலாம். நாங்கள் சிறிது ரகசியம் பேசவேண்டியிருக்கிறது.—— (மெல்லப்போகிறாள்) அஞ்சன, நீ போகவேண்டாம். எங்களுடனிரு. ஏண்டி! குழந்தை சந்த்ராவுக்குப் பருவகாலம் வந்துவிட்டதில்லையா? நீ என்ன நினைக்கிறாய்?

அஞ்சன:—சற்றுஇருங்கள். யோசிக்கிறேன். அவளுக்கு என்ன வயதாச்சு.

லீலா:—அவளுக்கு இனிமேல்தான் பதினாறுபூர்த்தியாகப் போகிறது.

அஞ்சன:—நான் கணக்குப்பார்த்துதான் சொல்லுவேன். எங்கே. திருவாதிரைக்கு இன்னும் எத்தனை நாட்களிருக்கின்றன சொல்லுங்கள்.

லீலாவதி:— இன்னும் இருபது நாட்கள் இருக்கின்றன.

அஞ்சனவதி:— சந்திராவும், எனக்கு ஒன்று இருந்ததே, தலைச்சன், இரண்டுக்கும் நாலு நாட்கள்தானே வித்தியாசம். சந்திராவுக்குத் திருவாதிரை நக்ஷத்திரம். எனக்கு இருந்ததே கமலம், அதற்கு மகம். பாபம். எட்டுமாதத்தில் தான் என்ன நடை; என்ன ஓட்டம். ஜ்வரம்வந்த முந்தின நாட்கூட அது விளையாடின விளையாட்டிற்கு ஓர் அளவே யில்லை. (சற்று கண்ணீர் உதிர்க்கிறாள்)



லீலா:— போதுமடி! போனதைப்பற்றி யோஜித்துக் கொண்டிராதே என்று எத்தனை தடவைகள் சொல்வது?

அஞ்சன:— இல்லை அம்மா. இப்படி இருக்கும்பொழுது சில சமயத்தில் அதன் ஞாபகம் வருகிறது. அதிலே பாருங்கோ, அந்த ஜோரத்திலே ஒரு சிரங்கு வேரேவந்து ரொம்பவும் கஷ்டப்பட்டது குழந்தை. பாவம் என்ன செய்யாது? அவ்வளவுதான் கொடுத்து வெச்சது.

சந்த்ரவதனி:— அக்கா. அதையே நினைத்துக்கொண்டிராதே. பார்ப்போம்.

அஞ்சன:— போகட்டும் போ. நான் வளர்த்துவந்த குழந்தைகளில் நீயாவது நன்றாக விருக்கிறாயில்லையோ. அது ஒன்றுபோரும் எனக்கு. ஏதோ உனக்கு கல்யாணம் பண்ணிப்பார்க்க வேண்டுமென்கிற ஆசைதான் நாளுக்கு நாள் அதிகமாகிறது.

லீலா:— நன்றாகச்சொன்னாய். நானும் அவளுடைய கல்யாண விஷயமாகத்தான் வாயெடுத்தேன். நீ முந்திவிட்டாய் அம்மா சந்த்ரா! ஏண்டி! உனக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டாமா?

சந்த்ர:—அம்மா! அது ஒரு விஷயம் தான் நான் கனவிலும் கூட நினைக்காதபாக்யம் பெற்றிருக்கிறேன்.

அஞ்சன:—பாக்யமாமே! என்ன பாக்யமெல்லாம் அதற்குள் நீ கண்டுவிட்டாய்! சீ! அசடே! இந்த மாதிரியெல்லாம் உளராதே. நல்ல சமாசாரம் பேசும் பொழுது சும்மாவிருப்பாயா, அஸ்தம்பாடரையே.

லீலா:—குழந்தாய்! இதோபாரு. இந்த [illegible] உனக்கு இரண்டு வயதிற்குச்சிறிய பெண்களுக்கெல்லாம் கல்யாணமாகி, குழந்தையும் [illegible] உனக்கு [illegible]

மில்லையா? உன் வயதிலே நான் ஒரு குழந்தைபெற்று, இரண்டாவது உண்டாகியிருந்தேன். சரி. அதெல்லாம் எதற்கு? இங்கே கமலசேனன் இருக்கிறார்பார். அவர் உன்பேரில் விசேஷப்ரீதிவைத்திருக்கிறார்.

**அஞ்சனை:**—அடீ சந்த்ரா! நீ எப்பொழுதுமே நல்ல அதிர்ஷ்டக்காரி. இந்த மாதிரி ஆம்படையான் யாருக்கடீ கிடைக்கும்!

**லீலா:**—இந்த ஊரிலே அவருக்குச் சமானமானவர் வேறு ஒருவரும் கிடையாது.

**அஞ்சனை:**—தங்கமானவர்டீ! உன்னைரொம்பவும் ப்ரீதியாகவைத்துக்கொள்வாரடீ!

**லீலா:**—என்ன சொல்கிறாய் இதற்கு? உனக்கு அவரைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டம்தானா? வேண்டுமானால் இப்பொழுது விருந்துக்கு அவரும் இங்கே வருவார். நீயேநேரில் அவருடைய அழகு, தேஜஸ், முதலியதுகளைப் பார்த்துத்தெரிந்துகொள்ளலாம்.

**அஞ்சனை:**— என்ன உயரம்! உயரத்துக்கேத்தபருமன்! நல்ல நிறம்! தலைமயிர் எவ்வளவு! அம்மா, அவர் புருவத்தின் அழகைப் பார்த்திருக்கிறீர்களா? என்னமோ நம்ம. சந்த்ராவுக்கு அவர்கிடைத்தால் சந்தராரொம்பவும் அதிர்ஷ்டசாலிதான்.

**லீலா:**—சந்த்ரா! என்ன? எல்லாவற்றிற்கும் பதில் கூறாமல் நிற்கின்றாய்? உனக்குக் கமலசேனன் பேரில் ஆசையா, இல்லையா சொல்லேன்.

**சந்தர:**— அம்மா, நீ என்ன உலக நடபடிக்கை ஒன்றும் தெரியாதவள் போல் இருக்கிறாயே! எங்குபார்த்தாலும் பால்ய விவாஹத்தை கண்டனம்செய்து பேசுகிறது உங்களுக்குத் தெரியாதா என்ன? ஆடவர்க்கு 18 வயதிற்குள்ளாகவும். பெண்களுக்கு 14 வயதிற்குள்ளாகவும் நடக்கக்கூடிய விவாகங்கள் சட்டப்படி செல்லத்தக்கதில்லையென்று ஒரு புதுச்சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். அது என்னமோ, தற்கால நாகரீகத்திற்கு உகப்பாகத்தான் இருக்கிறது. விவாஹம் என்றால் என்ன, அதிலிருந்து ஏற்படக்கூடிய



பொறுப்புகள் யாவை; இவையெல்லாம் தெறியாமலிருக்கும் ஆண், பெண்களுக்கு விவாஹம் செய்துவைத்தல் மகத்தான பாதகமன்றோ! பால்குடி மாறாக்குழந்தைகளுக்கு கூட விவாஹம் செய்து வைத்தது உங்கள் காலத்திற்குச் சரியாகப்போய்விட்டது. இக்காலத்திற்கு அதெல்லாம் சரிப்படாது. அதிலும் முன்பின் தெறியாதவர்களை, பரஸ்பர ப்ரீதியும், காதலும் இருக்கிறதா வென்பதையும் தெரிந்து கொள்ளு முன்னதாக, விவாஹம் என்ற பேச்சு எவ்விதம் பேசுவது?

**லீலா:**— அஞ்சனை! பார்த்தாயா குழந்தை சந்த்ரா பேசுவதை! ஏதோ அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னாயே! தற்கால நாகரீத்தைப்பற்றி எவ்வளவு பேசுகிறாள் பார். தற்கால நாகரீகத்தில் ஒன்றுமட்டும் ஏற்பட்டிருக்கிறது. என்ன இன்னுங்கேளு! தாயார் தகப்பனார் பேச்சுக்களைக்கூட குழந்தைகள் தட்டிச்சொல்வதென்று ஏற்பட்டிருக்கிறது.

**சந்த்ர:**— ஏன் அம்மா! வருத்தப்படுகிறாய் அம்மா உனக்காக வேண்டுமென்றால் அவரிடம் ப்ரீதிவைத்தது போல் நடித் கொள்கிறேன்

(ஓர் வேலையாள் வருகிறான்)

**வேலை:**— அம்மணீ! விருந்தாளிங்க எல்லாம் வந்தூட்டாங்க; சாப்பாடு தயாரா வெச்சிருக்குங்க., ஒங்களைக்கூப்பிடறாங்க; சந்தர அம்மாவையும் தேடறாங்க; அஞ்சனைவதினையக் காங்கலே இன்னு எல்லாரும் வைபறாங்க; நம்பள்கு அங்கே வேலை அதிகமாயிருக்குதுங்க; நீங்க உடனே வாணுங்க.

**லீலா:**— சரிதான்டா; நீபோ. நாங்கள் இதோ வருகின்றோம். சந்த்ரா! விருந்தினர் எல்லோரும் காத்திருக்கிறார்களாம். வா சீக்கிரம். நாம் போவோம்.

**அஞ்சனை:**— போ அம்மா! எல்லாம் உனக்காகத்தானே இந்த ஏற்பாடு. நீ பெண்ணாம் பெரியமனுஷியாகப் போனால்

என்னையெல்லாம் எங்கேகவனிக்கப் போகிறாய்? (போகிறார்கள்.)

களம் 4.

## இடம்:— ஓர் தெரு.

(ரத்னாகரன், நித்யானந்தன், குசுமாகரன், இவர்களும், சில வேஷதாரிகளும், சில தீவட்டிக்காரர்களும், பிரவேசிக்கிறார்கள்.)

---

ரத்னா:— எல்லாம்சரி. இப்பொழுது எப்படி உள்ளேசெல்வது? வந்தது வரட்டுமென்று தைர்யமாக உட்புகுறலாமா?

குசுமா:-- பயப்படாதே. எதுவேண்டுமோ வரட்டுமென்று துணிந்து புகுறவேண்டியதுதான்.

ரத்னா:— என்னாலே அந்தக் கூட்டத்தில் வரமுடியாது. என்னிடம் ஒரு தீவட்டியை வாங்கிக்கொடு. நான் அதைப் பிடித்துக்கொண்டு ஓர் ஓரமாக நிற்கிறேன்.

நித்யானந்தன்:— அதெல்லாம் உதவாது. நீயும் அவர்களுடன் போய்க் கலகலப்பாய் யிருக்கவேண்டியதுதான்.

ரத்னா:— அதெல்லாம் என்னால் முடியாது. இதற்குமுதல் முறண்டுசெய்யாதே. பார்க்கலாம்.

நித்யா:— என்னடா; பெரியவீட்டுப் பிள்ளை, இந்தமாதிரி பயப்படுகிறான். அதிலும் தீவட்டியைப்பிடித்து நிற்கப் போகிறானமே. நல்லது.

குசுமா:— அந்த வீட்டிற்குப் போய்க் கதவைத்தட்டவேண்டும். கதவுதிறக்கப்பட்டதோ இல்லையோ; உள்ளே ஒரே பாய்ச்சலாகப்பாய்ந்து, ஒவ்வொருவனும் அவனவனுக்குத் தோன்றிய இடத்திற்குப் போய்விடவேண்டும்.

ரத்னா:— என்னமோ, எனக்கு ஒரு பக்கம் சந்தோஷமும், ஒரு பக்கம் வருத்தமும் இருந்து கொண்டேயிருக்கிறது,



இம்மாதிரி அழைப்பு இல்லாமல் ஓர் விருந்துக்குப் போவது நியாயமில்லாத காரியமாயிற்றே. இதைச் செய்யலாமா? என்னமோ என்னுடைய வாழ்நாட்களே இன்றிரவு நடக்கப்போகும் சம்பவத்தினால் மாறிவிடக் கூடுமோ என்று கூட நினைத்துக்கொள்ளுகிறேன். ஏதோ ஒரு காரியம் செய்யத்துணிந்தாய்விட்டது. இனிமேல் அதை முடிவுவரை நடத்திதானே தீரவேண்டும்.

குசுமா:—உனக்கு எப்பொழுதும் இந்தமாதிரி நினைவுதான், நல்லதையே நினைத்துக்கொண்டிரு. எல்லாம் நன்றாக நடைபெறும். கெடுதலைநினையாதே! நீ காதல்என்கிற சமுத்திரத்தில் மூழ்கியிருக்கிறாய். பைத்தியகாரர்களும் காதலர்களும் கவிகளும் ஒருவரையொருவர் ஒத்திருப்பதாக ஒருமகான் தெரிவித்திருக்கிறார். இல்லாதது இருப்பது போல் த்யானித்துக்கொண்டு வர்ணனைசெய்வது கவிகளது தொழிலாம்; எங்குபார்த்தாலும் பூதபைஸாசஸஞ்சாரம் செய்வது போல் நினைத்துக் கொள்வார்களாம் பைத்தியக்காரர்கள்; காக்கையை அன்னமென்றும், குரூபியைக் கட்டழகியென்றும் சொல்லி மனமேக்கமடைவது காதலர்கள் இயல்பாம்; நீ மேற்சொல்லிய மூத்தரப்பார்களுடைய குணங்களையும் ஒத்திருக்கிறாய். ஆகையால் இப்பொழுது உன்னைக்குற்றம் சொல்வதிற் பயனில்லை. நீ பேசாமல் எங்களுடன் வா. சரி. நாம்போவோம். (போகிறார்கள்)

களம் 5.

## இடம்:— வீர்யவர்மன் பங்களாவில் ஓர் அறை.

(வாத்யகாரர்கள் காத்திருக்கிறார்கள். வேலையாட்கள் பிரவேசிக்கிறார்கள்.)

---

முதல்வேலையாள்:— அவன் எங்கே காண்டி ஆபீஸ் ஆள்? அங்கே சமையலறையிலே இன்னும் என்ன வேலை? இங்கே இந்த தட்டுகளையெல்லாம் எடுக்கிறது யார்? எனக்கு பட்டுமா ஆத்திரம்?

**இரண்டாவது ஆள்:**— நான் அப்பொழுதே சொல்லவில்லையா! ஒரு அவசரசமயத்திலாவது கூட நாலு ஆள்களை வேலைக்கு போடவேண்டும். இல்லாட்டாக்கி எல்லாத்தையும் நம்பளாலே கவனிக்க முடியுமா!

**1-வது ஆள்:**— இனிமேல் அத்தைச்சொல்லி காரியம் என்ன? நம்பதான் எல்லாம் கவனிக்கணும். சரி. அந்தமேசை, நாக்காலிகளை ஒருபுரம் எடுத்துவை. தட்டுகளையெல்லாம் நானாவது எடுக்கறேன்.

**2-வது ஆள்:**— சரி அப்படித்தான் நடத்தணும்.

**1-வது ஆள்:**— இதோ வாரான்பார் கரண்டி ஆபீஸ். ஏண்டா? உன்னை எங்கேல்லாம் தேடரதுடா? நீ எங்கே பூட்டாய் இந்தச்சமயத்திலே.

**3-வது ஆள்:**— நான ஒருத்தன் ஒரே சமயத்திலே எங்கெல்லாம் இருக்கமுடியும்?

**2-வது ஆள்:**— சரி. இங்கே கொஞ்சம்பிடி. இந்த மேசை நாக்காலிகளை ஒரு பக்கம் ஒதுக்குவோம். (எல்லோரும் போகிறார்கள்.)

(வீர்யவர்மன், சந்த்ரவதனி, மற்றவிருந்தினர்கள் நடிகர்கள் இவர்கள் பிரவேசிக்கிறார்கள்.)

**வீர்ய:**— கனவான்களே! சீமாட்டிகளே! உங்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். ஏதோ நமது குழந்தை சந்த்ரவதனி நம்மூரிலுள்ள பெரிய குடும்பத்தைச்சேர்ந்த பெண்மணிகளைப் பார்க்க வேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தாள். அதற்காகவே ஓர் விருந்து ஏற்பாடுசெய்து தங்களெல்லோரையும் அழைக்கலானேன். குழந்தைகாள்! நீங்கள் ஒரு பக்கமாகப் போயிருந்து பின்னல் கோலாட்டம் போடுங்களேன் அல்லது ராஸக்கிரீடை விளையாடலாமே. இங்கிருக்கும் வாலிபர்களுக்கும் அது உற்சாகமாகவிருக்கும். அது தான் நல்லது. எனக்கோ வயதாகிவிட்டது. இல்லாவிட்டால் நானும் உங்களுடன் சேர்ந்துகொள்வேன்.



(வாத்யம் முழங்குகின்றது. எல்லோரும் ராஸக்ரீடையில் சேர்ந்து விட்டார்கள்.) அடே! தீவட்டித்தடியன்களா! ஒரு பக்கம் ஒழுங்காய் நில்லுங்கள். தீவட்டிச்சுடர் இங்கு ஒருவர்மேலும் விழாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அதோபார். உன் தீவட்டி அணைந்துவிடும் போலிருக்கிறது. அதற்கு எண்ணை ஊற்றிக்கொண்டு வா. ஏன் மாமா! நீங்கள் இம்மாதிரி ராஸக்ரீடையில் சேர்ந்து எவ்வளவு காலமிருக்கும்?

**மாமா:**— அடே அப்பா. முப்பது வருஷங்களுக்குமேல் ஆகிறது.

**வீர்ய:**— இல்லை மாமா. உங்களுக்கு ஞாபகம் இல்லையோவிருக்கிறது. அந்த சந்த்ரசேகரனுடைய விவாஹத்தன்று நாம் ராஸக்ரீடைசெய்தோமல்லவா? அதாவது சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னதாக விருக்கலாமென்று நினைக்கிறேன்.

**மாமா:**—அவன் குமாரன் சூரசேனனுக்கே இப்பொழுது வயது முப்பது ஆகிறதே. நீ என்னமோ இருபத்தைந்து வருடமென்று மிகவும் ஞாபகமாகச் சொல்லுகிறாயே.

**வீர்ய:** — சூரசேனனுக்கு முப்பது வயது ஆகிவிட்டதா? பார். வாணாட்கள் நமக்குத் தெரியாமலே இவ்வளவு சீக்கிரம் கழிகின்றன. அவனை நான்கு வருஷங்களுக்கு முன் அவன் வீட்டிலொரு தரம் பார்த்தேன். அதற்கப்புறம் இன்று தான் பார்க்கிறேன்.

**ரத்ன:**— வேலையாளைப்பார்த்து ஏனப்பா! அதோ அந்தவாலிபனுடன் கைகோர்த்துப் போகிற மாதுயார்? உனக்குத் தெரியுமா? என்ன அழகு!

**வேலை:**— எனக்குத்தெரியாது. சார்.

**ரத்ன:**— என்ன ஸௌந்தர்யம்! ஜெகத்ஜோதியாய் விளங்குகிறாளே! இவள்முன் இதர பெண்மணிகளெல்லாம் அன்னத்தைச் சுற்றி அண்டங்காக்கைகளிருப்பதுபோல் தோன்றுகிறதே. தெய்வலோகத்தில் ரம்பை, ஊர்வசி,

திலோத்தமை, என்று அழகில் சிறந்தவர்களிருப்பதாகச் சொல்லக் கேள்வி. இப்பூலோகத்திலும் அம்மாதிரிய மாது ஒருவளிருக்கிறாளே! சரி. அம்மாது எப்பொழுதாவது ஒரு சமயம் இப்பக்கம் வருவாளன்றோ! அப்பொழுதாவது மெல்ல அவளைத்தொட்டு விடுகிறேன். அப்பொழுதுதான் இந்த ஜன்மம் பலிதமாகும். ஆமாம். இதுகாறும் என் மனதில் "காதல்" என்று சொல்வதோர் விகாரம்ஏற்பட்டதுண்டா? கிடையாது. இன்றையத்தினம் தான் "உண்மையான காதல்" ஏற்பட்டிருக்கிறது.

ருக்மா:— இந்தக்குரல் எங்கேயோ கேட்டிருக்கிற ஞாபகம் இருக்கிறதே! (சற்று யோசித்து) சரிதான்! நம்மவிரோதியைச்சேர்ந்தவன். என்ன போக்கிரித்தனம், இவனுக்கு இங்கே வருவதற்கு! யாரடா அங்கே! எனது உடைவாளைக் கொண்டுவா. அந்த முரடனை ஒரே வெட்டாய் வெட்டி விடுகிறேன்.

வீர்ய:— என்னப்பா! என்ன சாமாசாரம்! ஏன் இந்தத் தடபுடல்?

ருக்மா:— மாமா! இவன் நம்முடைய விரோதியைச் சேர்ந்தவன். இங்கே வந்து நம்முடைய சந்தோஷத்தைக் கெடுக்க வந்திருக்கிறான்.

வீர்ய:— ரத்னாகரன்மாதிரி யிருக்கிறதே! அவன்தானா அது?

ருக்மா:— ஆம் மாமா. அந்த முரடன் தான், மாமா, அவன். அவன் சுத்த அதனப்பிரசங்கி.

வீர்ய:— ருக்மா! சப்தம் போட்டு தடபுடல் செய்யாதே. அவன் ஒழுங்காகத்தானே இருக்கிறான். நம்மூரில் அவனுடைய குணத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசாதவர் கிடையாது. நமது வீட்டிற்குள்ளிருக்குமளவும் அவனை யாரும் ஒன்றும் செய்யக்கூடாது. ஏதாவது உபசாரம் செய்து நல்ல வார்த்தைகள் சொல்லவேண்டியதாகவிருக்க கோபம் கொள்வது மகா தவறு.



ருக்மா:— என்ன மாமா! ஒரு விரோதி நமது வீட்டிற்கு அழைக்கப் படாமல்வருவது, நாமும் சும்மா விடுவது! மிகவும் நன்றாக விருக்கிறது! அது ஒருநாளும் முடியாது.

வீர்ய:— என்னடா! மேன்மேலும் பேசிக்கொண்டே போகிறாய்! இந்த வீட்டிற்கு அதிகாரி நீயா,நானா? சும்மா விருந்தாலாயிற்று. அதல்லாமற் சப்தம் செய்து நமது விருந்தினரை அவமானப்படுத்தினால் உன்னை என்ன செய்வேன் தெரியுமா? உஷார்.

ருக்மா:— என்ன மாமா! உங்களுக்கே வெட்கமில்லையா!

வீர்ய:—போடா! அதிகப்பிரசங்கி. சும்மா கத்திக்கொண்டிராதே. உன் வேலையைப் பார்த்துக்கொண்டுபோ— (தீவட்டிக்காரர்களைப்பார்த்து) என்னடா! தீவட்டிக்களைச்சரியாகப் பிடிக்கத்தெறியலே, கொஞ்சம் உயர்த்திப்பிடியுங்களடா!

ரத்னா:—இவ்வளவு ஸௌந்தர்யவதியான நீ உனது அந்தஸ்திற்கும் யௌவனத்திற்கும் ஸௌந்தர்யத்திற்கும் ஏற்ற ஆடவரைக்கைப்பற்ற வேண்டியது நியாயமல்லவா? இந்தக் கையைப் படைத்திருக்கிறானே! உனது கரங்களில்படாத இந்தக்கைகள் இருந்துதான் யாதுபயன்! எனது கரத்தின் ஸ்பரிசத்தினால் உன்னை அசுத்தப்படுத்திவிட்டதாகக்கருதினால் அதற்கு அபராதமாக எனது அதரங்களினால், அவ்விடத்தை துடைத்துவிட சித்தமாக விருக்கிறேன்.

சந்த்ர:— இவ்வளவு விநயத்துடன் பேசுகிற இந்த ஆடவர் யாரோ தெரியவில்லையே! இருந்தாலும் அவரைப்பேச்சிற்கு இழுப்போம். (ரத்னாவைப்பார்த்து) தாங்கள் ஏன் மிகவும் தாழ்மையுடன் பேசுகிறீர்கள்? தங்கள் கரங்கள் என் மேல்பட்டு விட்டால் என்ன குற்றம்! அதனால் ஒன்றுமில்லை. அதுவும் நான்செய்தபாக்கியமென்றுகருதுகிறேன்.

ரத்னா:—இம்மட்டிலும் உனது சம்மதத்தைப் பெற்றதே நான் பூர்வ ஜன்மத்தில் செய்த சுகிருதம் என்றே கருதுகிறேன். உன் ஸ்பரிசமே இவ்வளவு இன்பத்தைக்கொடுக்க கூடியதானால், உனது அதரங்களிலிருந்து ஒரு முத்தம் கிடைத்

தால் என்னைப் போல பாக்கியசாலி இப்பூவுலகில் வேறு யாரும் இருக்கமாட்டார்கள். (முத்தமிடுகிறான்)

அஞ்சனா:—சந்தரா! உன்னை அம்மா கூப்பிடுகிறார்கள். ஒரு வார்த்தை பேசவேண்டுமாம்.

ரத்னா:—அந்த அம்மணியின் தாயார் யாரோ?

அஞ்சனா:—இந்த வீட்டிற்குயஜமானியாரோ, அந்த அம்மா தான் தாங்கள் இப்பொழுது பேசிக்கொண்டிருந்த மாதினுடைய தாயார் அந்தமாதை வளர்த்து வந்தது நான். அந்தமாதைக் கல்யாணம் செய்து கொள்பவன் யாராக விருந்த போதிலும், அவன் என்னிடம் மிகவும் நன்றியறிதல் உள்ளவனாகவிருக்க வேண்டும்.

ரத்னா:— என்ன! வீர்யவர்மனின் புதல்வியுடனா நான் சற்று நேரத்திற்கு முன்னால் பேசிக்கொண்டிருந்தேன்! ஐயோ நான் காதலிக்கும் மாது என் விரோதியைச் சேர்ந்தவளாயிற்றே! நான் எவ்வாறு அவளை அடைய முடியும்?

குசுமா:— சரி, வா. நாம் போவோம். நாழிகை ரொம்பவும் ஆகிவிட்டது.

ரத்னா:—இப்பொழுதே புறப்படவா வேண்டும்? என்மனது சமாதானப்படவில்லையே!

வீர்ய:—இப்பொழுதேயா புறப்படுகிறீர்கள்? ஆனால் இரவில் வெகு நேரம் ஆகிவிட்டது. வாஸ்தவம் தான் பிரபுக்காள்! சீமாட்டிகளே! தாங்கள் இன்றிரவு இங்குவந்து விஜயம் செய்து என்னைக் கௌரவப்படுத்தியதற்குத் தக்கவாறு நான் எவ்விதம் தங்களுக்குப் பிரத்தியுபகாரம் செய்யப் போகிறேனோ தெரியவில்லை. நேரம் அதிகம் ஆகிவிட்டது. தாங்கள் சற்றுகளைப்பாறிவிட்டு வீட்டிற்குச்செல்லலாம்.

(கூட்டம் கலைந்து போகிறார்கள்,)

சந்தர:—அக்கா! அதோ போகிற புருஷர் யார்?

அஞ்சனா:—அவர் தான் சூரசேனன் என்று சொல்லப்படுபவர்.

சந்தர:—அதோ கதவண்டை நிற்கிறாரே அவர்யார்?



அஞ்சனா:—புருஷோத்தமன் என்று சொல்லுகிறார்கள். அவராகத்தானிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

சந்த்ர:— நீ பார்த்தாயா! அதோ மூன்று பேர்கள் நிற்கிறார்களே! அவர்களில் மத்தியில் இருப்பவர் யார்? அவர் ராஸக்ரீடையில் கூடசேர மாட்டேனென்று மறுத்துவிட்டார்.

அஞ்சனா:—அது யாரென்று எனக்குத் தெரியவில்லை.

சந்த்ர:—இந்தா! நீ ஓடிப்போய் அவருடைய பெயரை கேட்டுத் தெரிந்துகொண்டு வாயேன். (அஞ்சனா போகிறாள்) அவர் போய்விடப்போகிறார்—ஐயோ! அவருக்கு கல்யாணம் ஏற்கனவே ஆகியிருந்தால் என்கதிஎன்ன வாகும்?

அஞ்சனா:—(திரும்பிவந்து) அவர் பெயர் ரத்னாகரனாம். உங்களுடைய விரோதி விசித்ரயவீர்யன் இருக்கிறாரே. அவருடைய ஏக புத்திரனாம்.

சந்த்ர:— ஆ! தெய்வமே! இதுகாறும் எனக்கு காதல் இன்னதென்பதே தெரியாமலிருந்ததினால் ஒருவருத்தமும்இல்லாமலிருந்தேன். இப்பொழுது திடீரென்று ஒரு புருடனைப் பார்த்து என்னை அறியாமலே காதல் கொண்டு விட்டேன்! இப்பொழுது அவர் என்விரோதியென்று சொல்லுகிறாளே! நான் என்னசெய்வது? ஜெகதீசா!

அஞ்சனா:— குழந்தாய்! எதைப்பற்றி இவ்வளவு யோசனை? ஏன் முகம் வாடியிருக்கின்றது?

சந்தர:—ஒன்றுமில்லை தூக்கம் விழிப்பினால் முகம் வாடியிருக்கலாம். (உள்ளேயிருந்து யாரோ சந்த்ராவைக் கூப்பிடுகிறார்கள்.)

அஞ்சனா:— சந்த்ரா! வா. நாமும் படுக்கப்போகலாம். விருந்தினர் எல்லோரும் திரும்பிப் போய்விட்டார்கள்.

(போகிறார்கள்.)

களம் 2.

## வீர்யவர்மனின் பூந்தோட்டம்.

---

(ரத்னாகரன் பிரவேசிக்கிறான்,)

ரத்னா:—ஆகா! காதலின் பாக்யத்தைத்தான் என்னென்றுரைப்பேன் (சந்த்ரவதனி, மாடியில் அறை ஜன்னல்வழியாகவெளியில் தலையை நீட்டுகிறாள்.) அதென்ன திடீரென்று ஓர் ப்ரகாசம் தோன்றியது? சூர்யகோடிப்ரகாசம் மாதிரியன்றோ இருக்கிறது? அவள் தான் என் காதலி என்பதிற்தடையில்லை. ஏதோ பேசுகிறாப் போல் தோன்றுகிறது. சற்று நிதானித்துக் கேட்போம். ஆஹா! அந்தக்கண்களினுடைய லக்ஷணம் தான் என்ன? நீலோற்பலங்கள் போலல்லவோ இருக்கின்றன. செவ்வதரங்களும், முத்துக்கோர்த்தாற்போல் பற்களும், சந்த்ரவதனி என்ற பெயர்க்கு ஏற்றாற்போலுள்ள முகத்தின் வடிவழகையும் யாரால் தான் வர்ணிக்கமுடியும்!

சந்த்ர:—தெய்வமே! என்னை எம்மட்டில் சோதிக்கப் போகிறாயென்று தெரியவில்லையே.

ரத்னா:—(தனக்குள்) ஏதோ பேசுகிறாள். என்ன சொல்லுகிறாள் என்றுகேட்கிறேன். அந்தகாரமாயிருந்த இவ்விடம் உனது வதனத்தை நீட்டிய மாத்திரத்தில் நடுமத்தியானம் போல் வெளேரென்று ஆகிவிட்டதே!

சந்த்ர:— ரத்னாகரா! ரத்னாகரா! உன்னையே நினைத்து நான் வருந்துகிறேன்! தெய்வமே! உனது கொடுமையைத்தான் என்னென்றுரைப்பது? நான் அன்புடன் நோக்கக்கூடிய ஒரு ஆடவர் எனது விரோதிவம்சத்தினராகவும் இருக்க வேண்டுமோ! காதலின் கொடுமையோ இது! உண்மையான காதலுக்கு நேர்வழிகிடையாதென்ற சாபம் யதார்த்தம் என்பதில் தடையில்லை.



ரத்னா:—(தனக்குள்) நான் என்னை யாரென்று தெரிவித்துக் கொள்ளலாமா? அல்லது, சற்று பொறுத்து இன்னும் என்ன தெரிவிக்கிறாள் என்று கவனிக்கலாமா? இருக்கட்டும்; சற்று பொறுத்துத்தான் பார்க்கலாம்.

சந்த்ர:— தெய்வமே! "ரத்னாகரன்" என்ற பெயர் பூண்டதற்காகவா நான் உன்னை அடையமுடியவில்லை. ஒரு பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாப் புஷ்பத்தை, மல்லிகை என்றால் என்ன, அல்லது அப்பைப்பூ என்றால் என்ன, அல்லது குருக்கத்திப்பூ வென்று சொன்னால் தானென்ன, இவைகளினால் ரோஜாப்புஷ்பத்தினுடைய நருமணம் அதைவிட்டு அகன்று விடுமா? அகலா தன்றோ! அம்மாதிரியாகவே நீ வேறு ஏதாவது பெயரை வைத்துக்கொண்டால் என்ன! அப்பொழுதும் எனக்கு உன்பேரிலிருக்கும் காதல் குன்றப்போகிறதில்லை. உன்னை உனக்காகவே நேசிக்கிறேனே யல்லாது, உன்பெயருக்காக நேசிக்கவில்லை.

ரத்னா:— (பகிரங்கமாக) கண்மணி! நீ சொல்வது யதார்த்தம் தானா? அப்படியாயின், என் பெயரை இந்த நிமிஷமே மாற்றிக்கொண்டு விடுகிறேன். உன்மனதிற்கு உகப்பான பெயரை நீ எனக்கு நாமகரணம் செய்வாய்!

சந்த்ர:— யாரது? இந்த நேரத்தில் இங்கு தோட்டத்திற்குள்ளிருந்து என்னுடைய பேச்சைக்கேட்டுக் கொண்டிருந்தது?

ரத்னா:— அன்பே! நான் எவ்விதம் என்னைச்சொல்லி அழைப்பது? எனக்குப்பெயர் ஒன்றும் தெரியவில்லையே! என் யதார்த்தமான பெயரைச்சொன்னால் நீ என்னை விரோதியாகக் கருதுவாய். உண்மைதைச்சொல்லி உனது [illegible] [illegible] [illegible]யைச் [illegible] திப்பதில் பயன் என்ன?

சந்த்ர:— (தனக்குள்) இந்த இனிமையான குரலை நான் முன்னமேயே கேட்டிருக்கிறேன் அன்றோ! சுமார் பத்து வார்த்தை [illegible] [illegible] [illegible] கேட்காவிட்டாலும் அந்த இனிமையான [illegible] [illegible] அசாத்தியமன்றோ!

(உறக்க) தாங்கள்தானே விசித்ரவீர்யருடைய ஏகபுத்திரர்; "ரத்னாகரன்" என்ற நாமதேயம் பூண்டவர்?

ரத்ன:— "ஆம்" என்று சொன்னால் நீ என்னை விரோதியாகக் கருதுவாய். "இல்லை" யென்று சொன்னால் நான் பொய்யனாகிறேன். நான் என்ன சொல்வதென்று எனக்குப் புரியவில்லை.

சந்த்ர:— தாங்கள் இந்நேரத்தில் இங்குவரவேண்டிய காரணம் என்ன? இங்கு எப்படிவந்தீர்களென்றுகூடப் புலப்படவில்லையே! தோட்டச்சுவர்களோ மிகவும் உயரமாகவிருக்கின்றன. ஏறிக்குதிப்பதும் அசாத்தியம் தவிர, உங்களுடைய ஜன்மவிரோதியினுடைய தோட்டத்தில் இந்நேரத்தில் உங்களை எமது ஆள்களில் யாராவது கண்டால் உமது கதி என்ன? இவ்விதமான அபாய நிலைமையில் தாங்கள் இங்கு வரவேண்டிய காரணத்தைச் சற்று தெறிவிக்கலாகுமோ?

ரத்ன:— பெண்ணே! நீ கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடை ஒன்றுதான். "காதல்" என்று சொல்லுகிறார்களே! அதுதான் காரணம். அதற்குக் கண்ணுமில்லையாது. காதும் கிடையாது. காதலர்களுக்கு எப்பொழுதுமே ஒரு பிரத்தியேகமான பலம் அவர்களைத் தெறியாமலே ஏற்படுகிறது. ஏதோ உன்னை எப்படியாவது பார்க்கவேண்டுமென்ற ஓர் ஆத்திரத்தில் இந்த சுவர் ஏறிக்குதித்தேன். அந்த ஆத்திரம் இருக்குமளவும், உன் இனத்தார் யார் என்னை இங்கு கண்டபோதிலும் எனக்கு அக்கரையில்லை.

சந்த்ர:— ஐயோ! நீங்கள் ஒன்றும் அறியாதவர்கள்போலும்! எமது ஆள்கள்யாராவது உங்களை இங்கு பார்த்தால் உங்கள் உயிருக்கல்லவோ அபாயம்!

ரத்ன:— மாதே! நீ உன் கண்களால் என்னை ஒருதரம் ஏறிறங்கப் பார்ப்பாயாகில் அவைகளிலிருந்து நான் எனக்கு வேண்டிய பலத்தைத் தேடிக்கொள்வேன். உனது ஆட்



களில் இருபதுபேர்களை ஒரேதடவையில் அடித்து விரட்டக்கூடிய சக்தி உன்கண்களிலிருக்கின்றது.

சந்த்ர:— என்னமோ! யாரும் தங்களை இங்கு பார்த்துவிடக்கூடாதே என்கிறகவலைதான் எனக்குமேலிடுகிறது.

ரத்ன:— இந்த இருட்டில் என்னை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் நீ என்னை அன்புடன் பார்க்காமலும், உன் காதலைத்தெறிவிக்காமலுமிருப்பாயாகில், அதைப் பார்க்கிலும் உனது ஆட்களால் வெட்டுண்டு இறப்பதே மேல்.

சந்த்ர:— தங்களுக்கு இவ்விடத்தை யார் காண்பித்தது.

ரத்ன:— "காதல்" என்று சொல்லக்கூடிய ஓர் தீபந்தான் வழிகாட்டியது. நீ ஏழேழு சமுத்திரங்களுக்கப்பால் இருந்தாலும்கூட எனக்கிருக்கக்கூடிய காதல் உன்னிடம் என்னைக்கொண்டு சேர்த்துவிடும்.

சந்த்ர:— அதெல்லாம்சரி. நானும் ஏதோ இந்நேரம்வரை தங்களிடம் வாதாடிவிட்டேன். தாங்கள் யதார்த்தமாக என்பேரில் காதல் கொண்டிருக்கிறீர்களா என்பதைக் கேட்க மறந்துவிட்டு, ஏதேதோ பேசிக்கொண்டிருந்துவிட்டேன். தாங்கள் என்பேரில் உண்மையாகவே காதல் கொண்டிருக்கிறீர்களென்று ஒருசமயத்தில் தோன்றுகிறது. ஆனால் எங்கே என்னை மிகவும் லேசாக அடைந்துவிட்டால் என்பேரிலுள்ள அன்பு நாளுக்குநாள் குறைந்துவிடக்கூடுமோவென்றபயமும் அதிகரிக்கிறது. தாங்கள் என்னை எவ்விதம் நேசிக்கிறீர்களென்று தெரிவிக்கவேண்டும்.

ரத்ன:— சந்த்ரவதனா! அதோதெறிகிறதேபார், சந்திரன். அதன்பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் கேள்.

சந்த்ர:— தாங்கள் சந்திரன்பேரில் ஆணையிடவேண்டாம். [illegible] ஸித்தியன்ன [illegible] வளர்ந்து [illegible] ஒரு [illegible] தாங்கள் [illegible]

கொண்டும், பாக்கி பதினைந்து நாட்களில் தேய்ந்து கொண்டிருக்கக்கூடியவன்பேரில் ஆணையிடாதீர்கள்.

ரத்னு:— வேண்டாம்! பின் யார்மீது ஆணையிட்டுச் சொல்லச் சொல்லுகிறாய்?

சந்த்ர:— ஆணையிடவே வேண்டாம். அப்படி வேண்டுமென்றால் என்பேரிலேயே ஆணையிட்டுச் சொல்லுங்களேன்.

ரத்னு:— சரி. அவ்விதமே சொல்லுகிறேன்!

சந்த்ர:— சற்று பொருங்கள். நாம் எல்லாவற்றையும் இன்றிரவே முடித்துவிடக்கூடாது. எதற்காக இந்த அவசரம்? சற்று நிதானமாகச் செய்தால்த்தான் நமக்கு ஆத்திசமு மிருக்கும்; காதலும் அதிகரித்துக்கொண்டிருக்கும்; அதுவேசரி யென்று எனக்குத்தோன்றுகிறது.

ரத்னு:— இப்பொழுது நீ இந்தமாதிரி அறைகுறையாகவா விட்டுவிடப்போகிறாய்.

சந்த்ர:— தாங்கள் வேறென்ன கேட்கிறீர்கள்!

ரத்னு:— நான் எனது காதலைத் தெரிவித்துவிட்டேன். நீ மட்டும் உனது உள்ளத்தைத் தெறிவிக்காமலிருப்பது நியாயமாகுமா?

சந்த்ர:— தாங்கள் கேட்குமுன்னதாகவே எனதுள்ளத்தைத் தெறிவித்து விட்டேனே.

ரத்னு:— இன்னும் ஒருதடவைதான் சொன்னால் என்ன! அதனால் என் உள்ளம் பூரிக்குமன்றோ!

சந்த்ர:— எனக்கும், உங்கள் பேரிலிருக்கும் காதலுக்கு அளவே இல்லை. சமுத்திர ஜலத்தையாவது அளக்கலாம். எனக்குத் தங்கள் மீதிருக்கும் காதலை அளவிடமுடியாது. (அஞ்சனவதி கூப்பிடுகிறாள்) உள்ளிருந்து யாரோ என்னைக் கூப்பிடுகிறார்கள். சற்று இருங்கள். நான் போய்விட்டு இதோ வருகிறேன். (உள்ளே போகிறாள்.)

ரத்னு:— என்ன பாக்கியம் பெற்றேன்! இது இரவு அன்றோ. நான் கண்டதும், கேட்டதும், கனவாக விருக்கக்கூடுமோ!



ஓ! இல்லை. அதோ சந்த்ராவே வந்துவிட்டாள். (சந்த்ரவதனி மறபடியும் வருகிறாள்.)

சந்த்ர:— ஸ்வாமீ! இன்னும் இரண்டொருவார்த்தை தங்களிடம் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன். தாங்கள் என்னை முழுமனதுடன் காதலிப்பதாக விருந்து, மனப்பூர்வமாக என்னிடம் அந்தரங்கப்ரீதி வைக்கும்பக்ஷத்தில், தாங்கள் நாளையதினமே விவாஹம் செய்துகொள்வதற்குவேண்டிய வழிகளைத் தேடுங்கள். எங்கே, எந்தநேரத்தில். என்கிற விஷயங்களை எல்லாம் நான் ஓர் தூது அனுப்புவேன்; அவள்மூலம் தாங்கள செய்தி சொல்லியனுப்பலாம். தாங்கள் என்னை விவாஹம் செய்துகொண்டு விட்டால், நான் அந்த நிமிஷம் முதல் தங்களுடைய அடிமை; தங்களுடைய சித்தம்போல் நடக்கவும் தங்களுடன் எங்கு வேண்டுமோ கூடவாவும் கடமைப்பட்டவளாகிறேன்."

அஞ்சனு:—(உள்ளிருந்து) சந்த்ரா!

சந்த்ர:—இதோவந்துவிட்டேன். என் கத்துக்கிறாய்! (ரத்னகரனைப்பார்த்து) என்னை விவாஹம் செய்து கொள்வதான அபிப்பிராயம் இல்லாவிட்டால் இனி என்னை வந்துபார்க்க வேண்டிய அவசியமில்லை. தெறிகிறதா? நாளை நான் ஒரு தூதை அனுப்பலாமா?

ரத்னு:—தாராளமாக அனுப்பலாம்.

சந்த்ர:—மெத்தவும் சந்தோஷம். நான் போய் வருகிறேன்.

(உள்ளே போகிறாள்).

(மறுபடியும் தலையை வெளியேநீட்டி) ரத்னு! என் பிரியமுள்ள ரத்னு! எங்கே போய்விட்டீர்கள்! என்னை இவ்விதம் இங்கு அடைத்துப் போட்டிருக்கிறதே! இல்லாவிட்டால் உங்களை இந்த நிமிஷமே அடைந்து விடுவேனே!

ரத்னு:—என் நாயகி மறுபடியும் ஏதோ பேசுகிறாள். குயில் மாதிரி இக்குறலுடன் வேறு ஒருமாதினுடைய தொனியையும் நான் கேட்டதில்லை.

சந்த்ர:— ரத்னு!

ரத்னு:—கண்மணி!

சந்த்ர:—நாளை எந்நேரத்திற்குத் தங்களிடம் தூது அனுப்பலாம்?

ரத்ன:—பகல் ஒன்பது மணிக்கு அனுப்புகிறது தானே?

சந்த்ரா:—கட்டாயம் அனுப்புகிறேன். எதற்காகவோ தங்களைக் கூப்பிட்டனே; அதற்குள் மறந்துவிட்டேன்.

ரத்ன:— உனக்கு ஞாபகம் வருகிறவரை இங்கேயே நின்றுகொண்டிருக்கிறேன்.

சந்த்ர:— உங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் எனக்கு வேறொன்றிலும் யோசனை போகப்போகிறதில்லை. வெள்ளி முளைக்கும் நேரம் ஆகிவிட்டது. தாங்கள் மெல்லச்செல்லுங்கள். தங்களை மறுமுறை பார்க்குமளவும் நான் எவ்விதம் காலத்தைப் போக்கப்போகிறேனோ. நான் உள்ளே செல்கிறேன். (உள்ளே போகிறாள்.)

ரத்ன:— ஒரு பெரியகாரியம் முடிந்தது. இனி பாக்கியும் எவ்விதம் கைகூடப்போகிறதோ, தெரியவில்லை. நமது சுவாமிகள் யோகாநந்தரிடம் சங்கதிகள் யாவையும் தெரியப்படுத்தி அவருடையக்ருபையையும் உதவியையும் நாடவேண்டும். (போகிறான்.)

**களம் 3.**

**யோகாநந்தர் ஆசிரமம்.**

(யோகாநந்தர் கையில் ஒரு புஷ்பக்குடலையுடன் பிரவேசிக்கிறார்)

யோகாநந்தர்:— இவ்வளவு அதிகாலையிலேயே எழுந்திருந்து சென்றால் மட்டிலும் தான் நான் தேடக்கூடிய பூண்டு கிடைக்கவழியுண்டு. கடவுளுடைய வல்லமையை தான் என்னென்றுசொல்வது? புல், பூண்டுகளில் முதல் சில விசேஷ குணங்களை அமைத்து, ரோகங்களை நிவாரணம் செய்யக்கூடிய தன்மையும் ஏற்படுத்தியிருக்கின்றார். அமிருத சஞ்சீவி என்பது கூட ஏதோ பச்சைஇலையிலிருந்து எடுப்பதாக வல்லவோ சொல்கிறார்கள்! நேற்றையதினம் தெய்வானுகூலத்தினால் தாமரபஸ்பம் செய்யக்கூடிய வழியைக்கண்டுபிடித்துவிட்டேன். அதற்கு வேண்டிய மூலி



கைகள் இருக்குமிடமும் தெரிந்துகொண்டேன். இனிமேல் ஸ்வர்ண பஸ்பம் ஒன்றுசெய்யவேண்டியது மட்டுமே பாக்கி. எனக்குத்தெரிந்திருக்கும் வைத்யமுறைகளை என் ஆத்மார்த்தமாகக் கொள்ளாமல், வியாதியால் பிடிக்கப்பட்டு, வியாதியைச் சிகிச்சை செய்வதற்குக் கையில் பணமில்லாமல், அவஸ்தைப்பட்டுத் தத்தளிக்கும் அந்தப்பாம ஏழைகளின் நிமித்தம் இலவசமாகக் கொடுத்துக் காப்பாற்றிவருவதால் பகவான் என்பேரில் க்ருபைகூர்ந்து மேன் மேலும் வைத்ய சாஸ்திரத்தில் எனக்குவிசேஷ ஊக்கத்தையும், புத்தியையும் கொடுப்பாரென்பதிற் சந்தேகமில்லை·(ரத்னாகரன் பிரவேசிக்கிறான்)

ரெத்ன—ஸ்வாமீ! தாஸன்; ரத்னாகரன்; நமஸ்கரிக்கிறேன்.

யோகா:—தீர்க்காயுஷ்மான்பவ; எழுந்திரு. ரத்னாகரா! என்ன ஆச்சர்யம்! இவ்வளவு அதிகாலையில் நீஇங்கு வரவேண்டிய காரணம் தெரியவில்லையே. என்ன இப்படி கண்களெல்லாம் கலங்கி, சிவந்து இருக்கின்றனவே. காரணம் என்ன? இரவில் நித்திரை சரியாகவில்லையா? அல்லது நேற்றிரவில் உறங்கவே இல்லையா?

ரத்ன:—தாங்கள் இப்பொழுது சொல்லியதுதான் வாஸ்தவம்.

யோகா:— தூக்கமில்லாமலிருக்கக் காரணம் என்ன? சுபத்ரா வீட்டிற்குச் சென்றிருந்தாயா?

ரத்ன:—ஸ்வாமீ! சுபத்ராவா! அந்தப் பெயரை நான் மறந்து வெகு நாட்களாயினவே.

யோகா:—பார்த்தாயா! இப்பொழுது தான் நீ நல்லபையன்; அது சரி, நீ எங்கு போயிருந்தாய்?

ரத்ன:—ஸ்வாமீ! சில நாட்களுக்கு முன் எங்கள் விரோதி வீர்யவர்மனுடைய வீட்டிற்கு மாறுவேடம்தரித்து ஒரு விருந்திற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது—

யோகா:—என்ன திகைக்கின்றாய்? என்ன விழுங்கி விழுங்கிப் பேசுகிறாய்? தாராளமாய்ச் சொல்லேன்.

ரத்ன:—ஸ்வாமீ! தங்களிடம் சொல்லாமல் நான் வேறுயாரிடம் தெறியப்படுத்தப்போகிறேன்? இத்தகையசமயத்தில் தாங்களல்லாமல் எனக்கு வேறுயாராலும் உபகாரம் செய்ய முடியாது. விருந்திற்குப்போனதாகத் தெறிவித்தேனே? அவ்விடத்தில் வீர்யவர்மனுடைய பெண்ணைப்பார்க்கலாயினேன். பார்த்ததுதான் பரஸ்பரம் எங்களுக்குக் காதல் ஏற்பட்டுவிட்டது. எங்கள் இருவருக்கும் அக்னிசாக்ஷியாக விவாஹம் ஆகவேண்டியது ஒன்றுதான் பாக்கி. தாங்கள் தான் தயைகூர்ந்து எங்கள் கோறிக்கையை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

யோகா:—இதென்ன ஆச்சர்யம்! நீ இது காறும் சுபத்திரையைக் காதலித்திருந்ததும், இப்பொழுது திடீரென்று அவளை மறந்துவிட்டு வேறொரு பெண்மணியைக் காதலிப்பதாகச் சொல்வதையும் கவனிக்குங்கால், சிறுவர்களினுடைய காதல் வெளிப்படையாக உள்ளதே அல்லாது, அந்தரங்கமானதல்ல என்பது வெளியாகிறது. நீ இதே இடத்தில் உட்கார்ந்து கொண்டு சுபத்திரையின் கொடூர சிந்தையை நினைத்துக் கண்ணீர் உதிர்த்த நாட்கள் எவ்வளவோ! இம்மாதிரியாகிய சபலபுத்தி ஆடவர்களுக்கு இருப்பது அழகில்லை. கண்களுக்கு எந்த எந்த சமயத்தில் யார் யார் ரூபவதியாகத்தோன்றுகிறார்களோ அவர்களையெல்லாம் காதலிப்பது என்பது உன்கொள்கையா? அதுதானா 'காதல்' என்னும் பொருளுக்கு நீ கொடுத்திருக்கக்கூடிய தாத்பர்யம்? சீ! இதுமிகவும் கேவலம். ஸ்திரீகள்பேரில் அத்யந்த ஆசைவைப்பதே ஒரு பாபம். மண்ஆசை, பெண்ஆசை, பொன்ஆசை, ஆகிய இம்மூன்றுவித ஆசைகளையும் விட்டொழிக்க வேண்டுமென்று நம் பெரியோர்கள் முறையிட்டிருக்கிறார்கள். இருக்கட்டும்; அவைகள் எங்களைப் போலொத்த சந்நியாசிகளுக்குத்தான் அவசியம் என்றுவது வைத்துகொள்வோம், இருந்தாலும், உன்னைப் போலொதத மனிதர்கள் இம்மாதிரி பார்த்த பெண்டுகள் பேரிலெல்லாம் மனதைக்கவரவிடுவது, காதல் கொள்வது. இதெல்லாம் சரியில்லை. உன் நினைவைவிட்டுவிடு. ஏதோ



நீ சொல்லியதிலிருந்து சுபத்திராவைநினைத்துத்துக்கிக்கும் வழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்தப்போகிறாயென்றல்லவோ நினைத்து நான் சந்தோஷப்பட்டேன். அப்படியிருக்க கிணறுவெட்ட பூதம் புறப்பட்டாற்போல் புதிதாக ஒரு கதை சொல்ல ஆரம்பித்துவிட்டாயே.

ரத்ன:— நான் சுபத்திராவை அதிகமாக நேசிக்கிறதைப்பற்றி தாங்கள் அனேகம் தடவைகளில் என்னைக் கோபிக்கவில்லையா?

யோகா:—நேசித்ததற்கில்லை; அவளையே சதா நினைத்து நினைத்து ஏங்கி, ஆகாரம், நித்திரையின்றி மனமுருகிக் கொண்டிருந்தாயே! அதற்காகத்தான் நான் உன்னைக் கோபித்தேன்.

ரத்ன:— ஸ்வாமீ! எனக்கு அதெல்லாம் தெரியாது. நான் சற்று முன் சொல்லிய மாதின்பேரில் எனக்கென்னமோ காதல் விழுந்துவிட்டது. அவளும், சுபத்திரையைப் போலல்லாமல் என்பேரில் பூரணமாக காதல் கொண்டிருக்கிறாள். இது போதாதா?

யோகா:—எனக்கென்ன? இது விஷயத்தில் எனக்கு அதிகமான திருப்திதான். ஒரு வேளை இந்த சம்பந்தத்தின் மூலமாகவாவது உங்கள் இருகுடும்பத்திற்கும் உள்ள பகையை நிவர்த்திக்கலாமன்றோ! இருக்கட்டும், பகவான் இருக்கிறார் எல்லாம் சரிவர நடக்கும். பயப்படாதே.

ரத்ன:—தன்யனானேன். எனக்குமிகவும் அவசரம். நான் போய் வருகிறேன்.

யோகா:—அவசரமில்லை. நிதானமாகச் சென்றுவா.

(போகிறார்கள்.)

## களம் 4

இடம்—ஒரு தெருவு.

(குசுமாகரனும். நித்யாநந்தனும் பிரவேசிக்கிறார்கள்.)

நித்யாநந்தன்:— எங்கேயடா போனான், இந்த ரத்னாகரன் நேற்று ராத்திரி வீட்டிற்கு வந்திருந்தானா?

குசுமா:—வீட்டிற்கு வரவில்லையாம்; வேலையாளை விசாரித்ததில் அவன் அவ்விதம் தெரியப்படுத்தினான்.

நித்யா:—அந்த சுபத்ராவை நினைத்து நினைத்தே இந்தப்பயல் உருகுகிறான்.

குசுமா:—அதெல்லாமிருக்கட்டும். உனக்கு ஒரு சங்கதி தெரியுமா? அந்தப்பயல், நம்மவிரோதிப்பயல், ருக்மாங்கதன் இருக்கிறான்பார். அவன் நம் ரத்னாகரனுக்கு ஒரு காகிதம் அனுப்பியிருக்கிறானாம்.

நித்யா:—ஏதாவது கலகத்தைப்பற்றித்தானோ?

குசுமா:—எதைப்பற்றியானால் என்ன? ரத்னாகரன்தான் அதற்குப் பதில் தெரிவிக்கவேண்டும்.

நித்யா:—ஏன்? எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் பேசுகிறது போல் சொல்கிறாயே! நீ இல்லையா; நான் இல்லையா; நம்முள் யாராவது பதில் அனுப்பினால் போகிறது. இதற்கெல்லாம் ரத்னாகரனை எதிர்பார்த்தாலா முடியும் கார்யம்?

குசுமா:—பதில் அனுப்புகிறதைப் பற்றி ஒன்றுமில்லை. அந்த ருங்மாங்கதனுக்கு ஜவாப்சொல்வதைப் பற்றியல்லவா இப்பொழுது பேச்சு. அது ரத்னாகரன் தான் செய்ய வேண்டும்.

நித்யா:—ஐயோ! இதென்ன கஷ்டமாகவிருக்கிறது? ஏற்கனவே ஓர் பெண்மணியை நினைத்து உருகி பாதி உயிரில்லையே! இந்த நிலைமையில் இந்த இழவு சண்டைக்குக்கூப்பிடுவதைப்பாரேன்!

குசுமா:—ஏன்? அவ்வளவு மூர்க்கனா ருக்மாங்கதன்?

நித்யா:—சரிதான் மூர்க்கனா வென்றாகேட்கிறாய்? ருக்மாங்கதன் என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்தில் எனது உடலெல்லாம் நடுங்குகின்றது அவன் உயரமென்ன? பருமன்என்ன? அவனுக்கு நம்கக்ஷியில் யார்தான் கத்திச்சண்டையில் சரிசமான மானவர்கள் இருக்கிறார்கள்? ஒருவரும்கிடையாது.

(ரத்னாகரன் பிரவேசிக்கிறான்.)

குசுமா:—இதோ ரத்னாகரனே வந்துவிட்டான், அப்பா!



நித்யா:—ஆள்தான் என்னமாக மாறிவிட்டான்? அடையாளமே தெரியவில்லையே. ஏன் அப்பா, ரத்னாகரா; இந்த மாதிரியாகவா எங்களைத்திண்டாடவிட்டுவிட்டு நீ போய்விடுவது?

ரத்னா:—இரண்டு பேருக்கும் வந்தனம். ஏன் இந்தப்புகார்? நேற்று என்ன நடந்தது?

நித்யா:—ஏன் அப்பா? கதையா அளக்கிறாய்? நேற்று ராத்திரி எங்களை நடுச்சந்தியில் விட்டு விட்டு நீ போய்விட்டது ஞாபகமில்லையோ?

ரத்னா:—ஓகோ! அதையா சொல்லுகிறாய்? எனக்கு மிகவும் அவசரமான வேலையிருந்தது. அந்தச்சமயத்தில் மற்ற விஷயங்களையெல்லாம் கவனிக்கவா முடியும்?

நித்யா:—ஏன் அப்பா! இது தான் நல்லவனுக்கு அடையாளமோ? தகவல்படுத்தாமல் போய்விடுவது? மிகவும் நன்றாகவிருக்கின்றது; நல்லயோக்யதைதான்.

குசுமா:—இன்னும் சிறிது நாட்கள் வரை அந்தமாதிரி தான். சப்தம்போடுவதில் பிரயோஜனமில்லை.

ரத்னா:—அதற்கென்ன; உங்களிடம் எப்படிச் சொல்லிக்கொள்ளாமற் போனேனோ, அதேமாதிரி சொல்லாமலே திரும்பவும் வந்து விட்டேனே. அவ்வளவுதானே வேண்டும்!

நித்யா:—உனக்கென்ன? நீ எதுவும் செய்யலாம்! எல்லாவற்றிற்கும் சமாதானம் எளிதில் கூறிவிடுகிறாய். உன் தாய்தகப்பனாருக்கு ஜவாப் சொல்லும் போதல்லவோ இருக்கிறது கஷ்டம். ஆனால், நாங்கள் எக்கேடுகெட்டுப்போனால் உனக்கு என்ன கவலை. ஏதோ ஒரு அடங்காப்பிடாரியை நினைத்துக்கொண்டிரு. எல்லா வேலையும் நடந்துவிடும். நானும் சொல்லவேண்டாமென்று பார்த்தேன். ஆனாலும் பொறுக்க முடியவில்லை.

நித்யா:—அதோபார் ஒருபூதம் நம்மைப்பார்த்து நகர்ந்து வருகிறது.

(அஞ்சனாவதியும், சோமதத்தனும் பிரவேசிக்கிறார்கள்.)

அஞ்சனா:— அடே! சோமதத்தா! எங்கேயடாபோனாய்? பின்னாலேயேவரத்துக்கென்ன கொள்ளை?

சோம:—இதோ உங்களுடன் தானே வருகிறேன்.

அஞ்சனா:—விசிறி எங்கேயடா?

சோம:—இதோ இருக்கிறது.

அஞ்சனா:—இதோ நிற்கிறது யார்? உங்களுக்கு வந்தனம்.

நித்யா:—அம்மா! உங்களுக்கும் வந்தனம். சின்ன சரீரம்! தாங்கள் வந்தவேகத்தில் அடித்தகாத்தில் இதோ என் சிநேகிதன் தள்ளாடிக் கீழேவிழப்போனான். நான் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளாவிடில் கீழேவிழுந்து பெருத்த காயம் பட்டிருக்கும். அம்மணீ! நீங்கள் நெல்லூர் அரிசிவாங்கி சாப்பிடுகிறதோ? அல்லது தெனாலிஸ்பெஷலோ?

ரத்னா:—அடே! சும்மாவிரு. அந்தம்மாளுக்கு இன்னும் பெருமூச்சு நிற்கவில்லை.

அஞ்சனா:—இப்பொழுது கொஞ்ச நாளாகவே உடம்பில் வியாதி பீடிக்கிறது. சாப்பிடுகிறசோறையெல்லாம் வாந்தியெடுத்து விடுகிறேன். உடம்புகூடச்சிறிது இளைத்திருப்பதாகத்தான் எல்லோரும் சொல்லுகிறார்கள். கடை அரிசி ஒத்துக்கவேயில்லை.

நித்யா:—உடம்பு இளைத்த பருவமோ இது? சரிதான்.

அஞ்சனா:—இங்கே உங்களில் யாருக்காவது ரத்னாகரன் எங்கிருக்கிறான் என்று சொல்லமுடியுமோ?

ரத்னா:—சொல்ல முடியும்.

அஞ்சனா:—அவன் எங்கிருக்கிறான்? சொல்லுங்களேன்.

ரத்னா:—அவன் இதோ இருக்கிறான் (தன்னைச் சுட்டிக்காட்டுகிறான்.)

அஞ்சனா:—நீங்கள் தானா? சரி. உங்களிடம் தனிமையாக ஒரு செய்தி சொல்லவேண்டியிருக்கிறது.



நித்யா:—சரிதான். வேறு எங்கேயோ விருந்து போலிருக்கிறது. நல்ல வேட்டைதான்.

குசுமா:— ஏண்டா? இந்த அம்மா பால் குனிந்து பரிமாற முடியுமா?

ரத்னா;—அம்மணீ! இங்குவாருங்கள். தாம் கொண்டுவந்திருக்கும் செய்தி என்ன?

அஞ்சனா:—நான் சந்த்ரவதனியிடமிருந்து வருகிறேன்.

ரத்னா:—அப்படியா? உட்காருங்கள். அடே! விசிறியை இங்கு எடுத்துவா. நான் விசிறுகிறேன். சற்று களைப்பாறுங்கள். சந்த்ரா சௌக்கியமாயிருக்கிறாளா? என்னசெய்தி சொல்லியனுப்பியிருக்கிறாள்? எல்லாம் நல்லது தானே?

அஞ்சனா:—அதோ, உங்களுடைய பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாரே! அவருக்கு மரியாதைஎன்பது கொஞ்சம் கூடத் தெரியவில்லை. என்னை ஒரு குலுமை என்று நினைத்தார் போலிருக்கிறது.

ரத்னா:—அப்படித்தவறான எண்ணம் அவன்கொள்கிறவனில்லை. நீங்கள் கொண்டு வந்திருக்கும் செய்தியைத்தெரிவியுங்கள்.

அஞ்சனா:— என்னமோ உங்களிடம் தெரிவித்திருக்கிறாளாம். அது இன்னதென்று என்னிடம் சொல்லவில்லை. தாங்கள் பதில் ஏதாவது சொல்லியனுப்புவதாகச் சொல்லியிருந்தீர்களாம். அதைத் தங்களிடமிருந்து கேட்டுத்தெரிந்து வரும்படி என்னை அனுப்பியிருக்கிறாள்.

ரத்னா:—அம்மணீ! நான் இப்பொழுது தங்களிடம் தெரிவிக்கப்போவது பரமரகஸ்யம். அதைச் சந்த்ரா ஒருவளிடம் மட்டுமே தெரிவிக்கவேண்டும். அப்படிச் செய்வாயா?

அஞ்சனா:—அதற்கென்ன சந்தேகம்? (சற்று பெருமையுடன்) நான் தான் குழந்தை சந்த்ராவை நாலுமாத குழந்தை முதல் வளர்த்து வந்திருக்கிறேன்.

ரத்னா:—இதோ பாருங்கள்! என் வேலையாள் ஒருவனை ராத்திரி பதினொன்றுமணிக்கு அங்கேஅனுப்புவேன். நீங்கள் உங்கள் வீட்டுத்தோட்டத்தின் கதவைத்திறந்து வைக்கவேண்டும்.

அஞ்சனா:— கொஞ்சம் மெதுவாகச் சொல்லுங்கள். என் புத்திக்குச் சிறிது சிறிதாகத்தான் ஊட்டவேண்டும்.

ரத்னா:— அவன் ஓர் நூலேணிகொண்டு வருவான். அதை வாங்கிக்கொண்டு உன் சந்த்ராவிடம் கொடுத்து அதை அவளுடைய அறையின் ஜன்னலில் கட்டுவித்து, அதைப் பிடித்துக்கொண்டே சந்த்ராவை கீழேஇறங்கிவரச்சொல்.

அஞ்சனா:—ஹூம். அப்புறம்.

ரத்னா:—தோட்டத்திற்குப் பின் வாசல் வழியாக வெளிவந்தால் நான் அங்கேகாத்துக் கொண்டிருப்பேன். அவளைக் கூட்டிக்கொண்டு ஒரு மைல் தூரத்திற்கப்பால் "யோகானந்தர்" என்று இருக்கும் ஓர் சந்நியாசியினுடைய ஆசிரமத்திற்குப்போய், அங்கு அவளை அக்கினிசாக்ஷியாக விவாஹம் செய்துகொள்வதாகத் தெரிவிப்பாய்.

அஞ்சனா:—சரி. நீங்கள் அனுப்புகிற ஆள் நம்பிக்கையானவன் தானா?

ரத்னா:— அம்மணீ! தாங்கள் சந்த்ராவுக்கு எப்படியோ, அதே மாதிரி தான் நான் அனுப்பப்போகிற ஆள் எனக்கு.

அஞ்சனா:—அப்போ, நான் போய்வரவா?

ரத்னா:—ஆமாம். சந்த்ராவை மிகவும் கேட்டதாகச் சொல்லுங்கள். இந்தாருங்கள்; தாம் எடுத்திருக்கும் சிரமத்திற்கு இதை நன்கொடையாகக் கொடுக்கிறேன்.

( கையில் ஒரு பணப்பையைக் கொடுக்கிறான். )

அஞ்சனா:—(வாங்கிக்கொண்டே) இதெல்லாம் எனக்கு எதற்கு? இருந்தாலும் தாங்கள் கொடுக்கிறதைப்பெற்றுக்கொள்ளாமலிருக்கக்கூடாது. (போகிறார்கள்.)

## களம் 5.

வீர்யவர்மனின் உத்யானவனம்.

(சந்த்ரவதனி பிரவேசிக்கிறாள்.)

சந்த்ரா:—இன்னும் ஏன் அஞ்சனா திரும்பிவரவில்லை? காலை ஒன்பது மணிக்கு இதைவிட்டுப்புறப்பட்டாள். அரைமணிநேரத்தில் திரும்பிவருவதாகச் சொல்லிப் போயினளே! மணி பனிரெண்டு ஆகியும் இன்னும் திரும்பிவரக்காணோமே! எங்கே போயிருப்பாள்? எனது காதலனைக்கண்டு பிடிக்கமுடியயாமல் எங்கேயாவது திரிந்து கொண்டு இருக்கிறாளா? போகட்டும். இவ்வளவு நேரமாகக் காணவில்லையென்றாலும் காரியத்தையாவது சரிவரச் செய்து வருவாளோ, என்னமோ, தெரியவில்லையே! ஐயோ! என்மனம் என்னபாடுபடுகிறது? எனக்கு இப்பொழுது இருக்கும் ஆத்திரம் அவளுக்கு எவ்விதமிருக்கும்? அதுமட்டுமா? சரீரமாவது கொஞ்சம் மெலிந்திருக்கிறதா? ஏதோ ஓர் இடத்திற்குப்போனாள் உடனே வந்தாள், என்று சொல்லக்கூடிய நிலைமையில்? ஒரேபருமனாக ஆலிபூதம் மாதிரிப் பருத்துவிட்டாள். வீட்டு நிலைகளைக்கூட இன்னும் கொஞ்சகாலத்தில் மாற்ற வேண்டியது தான் வரும் போலிருக்கிறது. போதாக் குறைக்குத்தான் இளைத்துவிட்டதாகவும், உடம்புபருமனாகமருந்து சாப்பிடவேண்டுமென்றும் சொல்கிறாள் ஐயோ பாபம்! இந்த வீண் எண்ணமெல்லாம் எனக்குத்தோன்றுவானேன்? நான் என்ன, அவளைச்சுமந்து கொண்டிருக்கிறேனா? அல்லது சுமக்கப்போகிறேனா? ஒன்றுமில்லையே! என்னமோ! எனக்கு இருக்கக்கூடிய ஆத்திரத்தில் இம்மாதிரி எல்லாம் அவளைப்பற்றிக்குறைவாக நினைக்கிறேன். ஆகா! அதோ வருகிறது, அஞ்சனா மாதிரிஇருக்கிறதே! அவள் தான் அது. சரிதான்;ஒருமட்டிலும்வந்துவிட்டாள். சமாசாரம்! என்ன கொண்டு வந்திருக்கிறாளோ தெரியவில்லை.(அஞ்சனாவும், சோமதத்தனும் பிரவேசிக்கிறார்கள்.) அக்கா அஞ்சனா! என்ன செய்தி கொண்டுவந்திருக்கிறாய்? போன காரியம் பழம்தானே! பதில் சொல்லேன்!

அஞ்சனா:—சோமதத்தா! விசிறியை இங்கே கொண்டுவா. நீ போகலாம். (சோமதத்தன் போகிறான்.)

சந்த்ரா:—அக்கா! என்ன முகம் வாட்டமடைந்திருக்கிறதே! போன காரியம் ஒன்றும் கைகூடவில்லையா? சீக்கிரமாக பதில் சொல்லேன்!

அஞ்சனா:—தொந்திரவுசெய்யாதே! போய்வந்தசிரமம் உனக்குத் தெரியுமா? எனக்குத் தெரியுமா? நன்றாகச் சாப்பிட்டுத் தூங்கி எழுந்திருக்கிறவர்களுக்கு என்ன கவலை? காலை எட்டு மணிக்குப் புறப்பட்டு, பனிரெண்டு மணிவரை வெயிலில்நடந்து, அலைந்து திரிந்து, நாலுபேர்களிடம் வார்த்தை கேட்கிறவர்களுக்கன்றோ வருத்தம் தெரியும்!

சந்த்ர:— என்ன அக்கா! உன்னுடைய சிரமம் எனக்குத் தெரியாமலா விருக்கிறது? ஆத்திரக் கோளார்தான் இந்த மாதிரி கேட்கச் சொல்கிறது.

அஞ்சனா:— ஏண்டீ! எனக்கு மூச்சுவாங்குகிறது தெரியவில்லையா?

சந்த்ர:—என்னுடன் இவ்வளவு வாதாடியிருந்ததற்குள் எனக்கு நீ சங்கதிகளைத் தெரிவித்திருக்கக் கூடாதா?

அஞ்சனா:— உனக்கு என்ன வேண்டுமென்கிறாய்? ஐயோ! என்ன, தலைவலி இந்த மாதிரி மண்டையைப் பிளந்து தள்ளுகிறதே—நீ நல்ல ஆம்படையானைத்தான் சம்பாதித்துவிட்டாய்—இந்தா கொஞ்சம் விசிறு—ஒத்த நாடிதான்—உன் ஆம்படையானாவது உனக்கும் சேர்த்துப் பருமனாக விருப்பானோவென்று பார்த்தேன்—அதைக் காணவில்லை.

சந்த்ர:— அதெல்லாம் எனக்கு முன்னமேயே தெரியுமே. விவாஹத்தைப்பற்றி ஏதாவது தெரிவித்தாரா இல்லையா? அதை மட்டும் சொல்; கேட்கிறேன்.

அஞ்சனா:— உன் அம்மா எங்கே? இவ்விடத்தில் காணோம்?

சந்த்ர:—என்ன அக்கா! எனக்குவேண்டிய சமாசாரம் நீங்கலாக மற்றக்கதையெல்லாம் சொல்லுகிறாயே!

அஞ்சனா:— அம்மா! இந்தமாதிரிக் கட்டுப்பாடுபண்ணுவதாக விருந்தால் நீயே உன் காதலனைப்பார்த்து சங்கதிகளைக் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். எனக்கு ஒன்றும் தெரியாது. நான் சொல்லவும் மாட்டேன்.

சந்த்ரா:— கோபிக்காதே அக்கா! சங்கதியைச் சொல்லேன். என்னை ஏன் தவிக்கவைக்கிறாய்?



அஞ்சனா:—சரி. சங்கதியைச் சுருக்கமாகச்சொல்லி விடுகிறேன்; கேள். இருட்டுகிற சமயத்தில் நீ உன் அறையிலிருந்து ஜன்னல் வழியாகக் கீழே இறங்கவேண்டும். அதற்கு ஓர் நூல் ஏணிவரப்போகிறது. அது வழியாக இறங்கி பூந்தோட்டத்துப்பின் பக்கத்துக் கதவை திறந்து வெளியிற் செல்லவேண்டும். தெரிகிறதா?

சந்த்ர:— ஆம்; அப்புறம்?

அஞ்சனா:— அடி அம்மா? என்ன உற்சாகம்! அங்கே உன் காதலர் உனக்காகக்காத்துக் கொண்டிருப்பார். உன்னைக் கூட்டிக்கொண்டு யோகாநந்த ஸ்வாமி ஆசிரமத்திற்குச் சென்று அவிடத்தில் விவாஹம் செய்து கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். முகத்தைப்பார். இப்பொழுது தாமரைப் புஷ்பம் மாதிரி விகஸித்து சிவந்திருப்பதை. சற்று நேரத்திற்கு முன் இந்த முகத்தில் ரக்தமேயில்லாமலிருந்ததே. இப்பொழுது எப்படி திடீரென்றுவந்தது? சரி; போ; எனக்கு சிரமமாகவிருக்கிறது. கொஞ்சம் படுத்து நித்திரை செய்கிறேன்.

சந்த்ர:— தெய்வமே! இதுவரை எல்லாம் என்மனோபீஷ்டப்படியே நடந்துவிட்டது. மீதமுள்ளதும் அவ்விதம் நடக்க வேண்டுமாய் அருள்புரிவாய்! (போகிறார்கள்.)

**களம் ஆறு.**

யோகாநந்தர்—ஆசிரமம்.

(யோகாநந்தரும், ரத்னாகரனும், சந்த்ரவதனியும் பிரவேசம்)

யோகா:—எல்லாம் தெய்வானுகூலத்தினால் அநுகூலமாக முடிந்தது. உங்களுக்கு ஈஸ்வரனுடைய அநுக்கிரஹம் பூர்ணமாகவிருக்குமாக. ரத்னாகரா! அம்மா சந்த்ரவதனா! நீங்கள் ஒருவர்க்கொருவர் அந்தரங்க பிரீதியுடன் நடந்து வந்து இரண்டு உடலும், ஒரு உயிருமாகவிருக்கவேண்டும். உங்களிருவர்க்கும் விவாஹமாகியிருக்கிற மூலமாகவாவது உங்கள் இரண்டு குடும்பங்களுக்கும் சமாதானம் ஏற்படட்டும். இங்கேவாருங்கள். அதோ பகவானைப் பூஜையில்

வைத்திருக்கிறேன். நீங்கள் இருவரும் அவர் முன் ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து அவருடைய அனுக்கிரகத்தைப்பெற்றுக்கொண்டு வீடுபோய்ச்சேருங்கள். பகவான் சந்நிதியிலிருக்கும் உங்கள் இருவருடைய மோதிரங்களையும் எடுத்துக்கொண்டு, ஒருவருடையதை மற்றவர் தரித்துக்கொள்ளுங்கள். (இருவரும் பகவானை ஸேவித்துவிட்டு, யோகாநந்தரையும் ஸேவிக்கிறார்கள்.) தீர்க்காயுஷ்மான்பவ! தீர்க்கசுமங்கலீபவ! உத்தமமான குழந்தைகளைப்பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக. சரி நேரம் ஆகிவிட்டது. நீங்கள் போய்வரலாம். (போகிறார்கள்.)

## ஆக்ட் 3

### களம் 1.

புஷ்பபுரியில் ஒரு தெரு:

(நித்யானந்தன், குசுமாகரன், வேலையாள் எல்லோரும் ப்ரவேசம்)

குசுமா:—நித்யானந்தா! இன்றையதினம் இருக்கக்கூடிய மாதிரியிலும், வெய்யில் அடிக்கிறகொடூரத்தையும் கவனித்தால், எனக்கு என்னமோ வெளியில் போவதற்கே பயமாகவிருக்கிறது. தவிரவும், வீர்யவர்மனுடைய ஆட்களெல்லோரும் கலகத்தை ஆஸ்பதமாகக்கொண்டு வெளிக்கிளம்பியிருக்கிறார்களாம். நாமும் வெளிக்கிளம்பினால், கலகம் வருவது நிச்சயம்.

நித்யா:— நீ மிகவும்தைர்யசாலி! வீர்யவர்மன் வீட்டுப் பூனையைப் பார்த்தால் கூட அடுப்பங்கறைக்குப் போய்விடுகிறாயில்லையா? உனது தைர்யத்தை மெச்சி வீரசங்கிலி ஒன்று போடப்போகிறார்களாமே!

குசுமா:— சரிதானடா! நான் ஒன்று சொன்னால் அதனுடைய தாத்பர்யத்தைக் கவனியாமல் குதிக்கிறாயே. சரி. இப்படிப்போவோம். கலகம் ஏதாவது நேர்ந்தால் நான் பார்த்துக்கொள்கிறேன். நீ பயந்து ஓடிவிடாதே.

(ருக்மாங்கதன் இதரஜனங்களுடன் பிரவேசிக்கிறான்)



ருக்மா:— என் பின்னாலேயே வாருங்கள். நீங்கள் ஒன்றும் பேசவேண்டாம். நானே எல்லாம் பேசித்தெரிந்து கொள்கிறேன்—ஐயா! உங்களுடன் ஒருவார்த்தை பேசவேண்டும்.

நித்யா:— எங்களிருவரிடமும் சேர்ந்து ஒருவார்த்தையா? அல்லது எங்களில் ஒருவரிடம் ஒருவார்த்தையா? அல்லது ஒருவரிடம் ஒருவார்த்தையும், மற்றவரிடம் ஒரு உதையுமா?

ருக்மா:— உங்களுக்கு எப்படியெல்லாம் தோன்றுகிறதோ அப்படியெல்லாம்தான். அதிருக்கட்டும். நித்யானந்தா! நீ ரத்னாகரனுடன் சேர்ந்துகொண்டு அவனுக்கு அனேக காரியங்களில் ஒத்தாசையாக இருக்கின்றாய். அதனால் உனக்கு இடையூறு அனேகம் வரப்போகிறதென்பதை இப்பொழுதே எச்சரிக்கை செய்கிறேன்.

நித்யா:— தம்பி! உன்னுடைய எச்சரிக்கை யெல்லாம் இங்கு ஒருவருக்கும் தேவையில்லை. நீ சற்று நிதானமாகவிருந்தால் போதுமானது.

குசுமா:—சரி. நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உறக்கப் பேச ஆரம்பித்து விட்டீர்கள். இன்னும் சற்றுநேரத்திற்குள் கலகத்திற்குப்பிடிகை போட்டுவிடுவீர்கள் போலிருக்கிறது ஒரு காரியம் செய்யுங்கள். இது பப்ளிக் ரஸ்தாவாகவிருக்கிறது. இந்த ஒதுக்குப்புறமாக விருக்கும் சோலைக்குள் போய்விட்டால் நம் வழக்குகளைச்சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம். போகிற ஜனங்களும் வருகிற ஜனங்களும் நம்மை உற்றுக்கவனிக்கிறார்கள்.

நித்யா:—யார் பார்த்த போதிலும் அக்கரையில்லை. விவகாரத்தைத் தீரப்பேசாமல் நான் இதைவிட்டு அசையமாட்டேன்.

(ரத்னாகரன் பிரவேசிக்கிறான்.)

ருக்மா:—சரி ஐயா! சப்தம் போடாதீர்கள். இதோ நான் எதிர்பார்த்த ஆசாமி வந்துவிட்டான். ரத்னாகரா! எனக்கு உன் பேரிலிருக்கும் ஆக்ரகத்திற்கு ஒரு அளவில்லை. உன்னைப் போல கொடிய துஷ்டன் நான் இதுவரை கண்டதில்லை.

ரத்ன:—ருக்மாங்கதா! இருக்கலாம். இதுவரை என்னைப்பற்றி உனக்கு நன்றாகத்தெறியவில்லை யென்றால் அது என் குற்றமன்று.

ருக்மா:—சீ! என்ன சொன்னாய்?

ரத்ன:—ருக்மாங்கதா? துள்ளிவிழாதே. சற்று நிதானமாகவே பேசு. இப்பொழுது சிலசந்தர்ப்பங்களினால் நீ என்ன சொல்லியபோதிலும், நான் அவற்றையெல்லாம் மன்னித்து, மறக்கவேண்டிய நிலைமையிலிருக்கிறேன். வீணில் சச்சரவிடாதே. நீ வந்தவழியாகவே திரும்பப் போய்விடு.

ருக்மா:—முட்டாள்! பேடித்தனமாக உளராதே. தைரியமிருந்தால் வா என்னுடன் கத்திச் சண்டைக்கு. நீ எனக்குச் செய்திருக்கும் தீங்கிற்கு உனது உயிரைவாங்கினாலொழிய என் கொதிப்பு அடங்கப்போகிறதில்லை.

ரத்ன:—ருக்மாங்கதா! நான் உனக்குயாது தீங்கும் செய்தவனல்லன். அது மட்டுமல்ல. நான் உன்னை என்பனப்பூர்வமாக நேசிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். அவ்விதமே நேசிக்கிறேனென்பதிலும் தடையில்லை. உனக்கு ஒரு வேளை அதற்குக்காரணம் தெறியாமலிருக்கலாம். அதனாலென்ன? நான் சொல்வதை நம்பு. சண்டை செய்யாமல் அப்படியே போய்விடு.

நித்யா:— ரத்னாகரா! என்ன நீ கூட இம்மாதிரி கோழைத்தனமாகப் பேச ஆரம்பித்து விட்டாய்? அவன் அரைமணி நேரமாகக் கலகத்திற்கு ஆரம்பிக்கிறான். நம்பிடம் ஆண்மைத்தனமில்லையா; இம்மாதிரி பயப்படுவதற்கு? ருக்மாங்கதா! வா, என்னுடன் சண்டைக்கு.

(கத்தியை ஓங்குகிறான்.)

ருக்மா — நானும் இதற்காகத்தானே எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். (இருவரும் சண்டை செய்கிறார்கள்.)

ரத்ன:—நித்யாநந்தா! வேண்டாமடா. கத்தியை உறையில் போட்டுவிடு.

நித்யா:— போடா! உன்னைப்போல் என்னாலே அவமரியாதையான பேச்சுக்களைத் தாங்கமுடியாது.



ரத்ன:—குசுமாகரா! நீயாவது என்னுடனிருந்து இக்கலகத்தை விலக்கு. இதென்னகொடுமை. வீணில் ஒருவர்க்கொருவர் சண்டை செய்கிறார்களே. நமது புஷ்பபுரியில் இம்மாதிரி கலகம் ஏற்படாமல் இருப்பது எக்காலமோ, அறியேன். ருக்மாங்கதா! நிறுத்து சண்டையை. நித்யானந்தா! நீ சும்மாவிருக்கமாட்டாய்?

(ருக்மாங்கதனும், அவனைச்சேர்ந்தவர்களும் போகிறார்கள்.)

நித்யா:—ஐயோ! என்னைக்குத்தி விட்டுப் போய்விட்டானே அந்தப்பாபி ருக்மாங்கதன்—அவனெங்கே இப்பொழுது? ஓடியாபோய் விட்டான்? இந்த இரண்டு வம்சத்தினர் தலை மீதும் இடிவிழாதா? இவர்களுக்காக நானா இம்மாதிரி வெட்டுண்டு உயிர்துறக்கவேண்டும்?

குசுமா:—ஆ! என்ன! உனக்குக்காயமா பட்டுவிட்டது?

நித்யா:— காயம் பட்டுவிட்டதா வென்றுகேட்கிறாய்? காயம் ஒன்றுமில்லை. ஒரு சிறு பிளவுதான் ஏற்பட்டிருக்கிறது. அடா! பாபி! இந்தச்சமயத்தில் இம்மாதிரி விளையாடுகிறாயே. ஓடிப்போய் ஒரு வைத்தியரைக் கூட்டிக்கொண்டு வாடா. (குசுமாகரன் தன்வேலைக்காரனை அனுப்புகிறான்.)

ரத்ன:—நித்யானந்தா! நீ அதைர்யப்படாதே. உன் காயம் மிகவும் லேசானதுதான்.

நித்யா:— நீ ஏன், சொல்லமாட்டாய், காயம் லேசுதான் என்று? கிணறவ்வளவு ஆழமிருந்தால்தான் காயம் போதும்! நாளை இந்நேரத்திற்குள் நான் எங்கிருப்பேனென்பது உனக்குத்தெரியாது. உன்னால்தானே எனக்கு இந்தக் காயம் ஏற்பட்டது? நாங்கள் சண்டைசெய்யும் பொழுது நீ ஏன் குறுக்கே விழுந்தாய்?

ரத்ன:— நான் சண்டையை விலக்கத்தானே [illegible].

நித்யா:—நன்றாய்ச் சண்டையை விலக்கினாய்! இந்த மாதிரியே மத்தியஸ்தர்கள் தான் வேண்டும் இல்லாவிட்டால் சண்டையில் அடிபட்டு [illegible] யம்.

ஹூம். இனி அதைப்பற்றிப் பேசி என்ன பயன்? என் விதியை நொந்துகொள்ளவேண்டியது தான். அதெல்லாம் சரி. என்னை எனது வீட்டிற்காவது கொண்டு சேர்க்கக் கூடாதா! நான் அனாதியாக இந்த வீதியிலேயேதானா உயிர்துறக்கவேண்டும்? குசுமாகரா! நீதான் என்னை அழைத்துச்செல்லவேண்டும்.

(குசுமாகரன் நித்யாநந்தனை அழைத்துச்செல்கிறான்.)

ரத்னா:— நாளுக்கு நாள் நமது ஊரில் நடக்கப்பட்ட அநியாயத்திற்கு ஒரு அளவில்லாமலே போய்விட்டது! இந்த நித்யாநந்தன்; எனது ஆப்தசிநேகிதன்; மஹாராஜாவினுடைய பந்து; இப்பேர்ப்பட்டவன் எனது முந்நிலையில், நான் காரணமாகவிருக்கும் நிலைமையில் இம்மாதிரி அபாயமான குத்து வாங்கியிருக்கிறான். இனிமேல் இந்த அபாயத்தினின்றும் அவன் தப்பிவெளிவருவது சந்தேகம். அப்படியிருக்க அவனைக் குத்திக்காயப்படுத்திய படுபாவி அந்த ருக்மாங்கதன் உல்லாசமாகவிருக்கிறான். ஆஹா! இதென்ன! நான் கூடப்பேடியாகவிருந்துவிட்டேன்! அந்தப்பாபியினுடைய உயிரைப்பழிக்குப் பழியாக வாங்காவிட்டால் நான் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? (தனது ஆருயிர் நாயகியை நினைத்துக்கொண்டு) சந்த்ரா! அந்தப் பாபி ருக்மாங்கதன் உன்னுடைய பந்துவாக விருந்ததினாலல்லவோ நான் அவனிடம் தயவாகப் பேசும்படி ஏற்பட்டுவிட்டது? அதன் காரணமாக எனது ஆப்தசிநேகிதனும் காயம் கொண்டான்?

(குசுமாகரன் வருகிறான்.)

குசுமா;—ரத்னாகரா! காலத்தின் கொடுமையை என்னென்றுரைப்பேன்! நம்முடைய சிநேகிதன்—நித்யானந்தன்—உயிர்—துறந்து விட்டான்.

ரத்னா:—ஆ! தெய்வமே! இம்மாதிரியும் எங்களைப்பரிசோதிக்கலாகுமா? நித்யானந்தன் உயிர்பிழைப்பது அசாத்தியமென்று எனக்கு முன்னமேயே தெரிந்தாலுங்கூட, எப்படி



யாவது தெய்வாதீனத்தினால் பிழைக்கக்கூடாதாவென்ற எண்ணமும் ஒரு பக்கத்தில் குடிகொண்டிருந்தது. என்னமோ! இன்றையதினம் விடிந்தவேளையைத்தான் சொல்லவேண்டும் இந்தக்கொடுமையெல்லாம் இத்துடன் நிற்கவாபோகிறது. இப்பொழுதுதான் ஆரம்பமாகியிருக்கிறது. இன்னும் எத்தனை சண்டையோ! எத்தனை குத்தோ! எத்தனை சாவோ! ஈசன்தான் அறிவார்.

(ருக்மாங்கதன் வருகிறான்.)

குசுமா:—நித்யானந்தனைக்கொன்ற அந்தப்பாபி ருக்மாங்கதன் அதோ வருகிறான்.

ரத்னா:—அடாபாபி! ருக்மாங்கதா! நித்யானந்தனுக்கு முன்னதாகவே நீ உயிர் துறந்திருக்கவேண்டும். அப்படியிருக்க நீ அவனைக் கொன்றுவிட்டு குதூகலமாகவே சுற்றித்திரிகின்றாய். நித்யாநந்தனின் ஆவி அவனுடலைவிட்டுப் பிரிந்து வெகுநேரமாகவில்லை. உனது ஆவிக்காக இங்கேதான்சுற்றித்திரிந்துகொண்டிருக்கிறது. நீயும்நித்யாநந்தனுடைய கதியையே அடைவாய். வா; என்னுடன் சண்டைக்கு, இப்பொழுது.

ருக்மா:—இதோ தயார். (இருவரும் சண்டை செய்கிறார்கள். ருக்மாங்கதன் காயப்பட்டு கீழேவிழுகிறான்.)

குசுமா:—அப்பா! எனது உள்ளம் ஒருவாறு குளிர்ந்தது. ருக்மாங்கதனைக் கொல்லாவிட்டால் நீயும் நானும் நித்யாநந்தனுக்குச் சிநேகமாயிருந்து என்ன பயன்? ரத்னாகரா! ருக்மாங்கதனைக்கொன்றுவிட்டாய். இப்பொழுதே ஊரில் கலவரை ஏற்பட்டுவிட்டது. ஜனங்கள் திரண்டுவருகிறார்கள். இன்னும் சற்றுநேரத்தில் மஹாராஜாவும் வந்துவிடுவார். அவர் வரும்பொழுது நீ இங்கு காணப்படுவாயாகில் உன் கதி என்ன? நீயும் உயிர்துறக்கவேண்டியதுதான். ஆகையால் இப்பொழுதே நீ இங்கிருந்து ஓடி எங்கேயாவது ஒளிந்துகொள்.

ரத்னா:—நான் எங்கு ஓடுவது? எங்கு ஒளிந்து கொள்வது? ஒன்றும் தெரியவில்லையே?

குசுமா:—எங்கேயாவது போ, நிற்காதே! தாமதம் செய்யாதே

(ரத்னாகரன் போய்விடுகிறான்.)

(ஜனங்கள் பிரவேசிக்கிறார்கள்.)

ஒரு ஆள்:—நித்யானந்தனைக் கொன்றது யார்? அந்தப்பாபி எங்கேபோய் ஒளிந்துகொண்டிருக்கிறான்?

குசுமா:—அதோ கீழேகிடக்கிறான் பார்? அவன்தான் நித்யாநந்தனைக்கொன்றவன்.

முந்தின ஆள்:—வா ஐயா! நீர் என்னுடன் மஹாராஜா அரண்மனைக்கு வாரும். உமக்குத்தெரிந்ததையெல்லாம் அங்கு தெரிவிப்பீர்.

(மஹாராஜா, விசித்ரவீர்யன், வீர்யவர்மன், கமலாவதி, லீலாவதி முதலியோர் பிரவேசிக்கிறார்கள்.)

மஹாராஜா:—இந்தக் கலகத்தை ஆரம்பித்தது யார்?

குசுமா:—அரசே! எனக்கு இங்கு நடந்ததெல்லாம் நன்றாகத் தெரியும். அதோ கிடக்கிறானே ருக்மாங்கதன், அவன் தான் முதல் முதலில் கலகத்தை ஆரம்பம் செய்தான். நித்யாநந்தனைக்காயப்படுத்திக்கொல்வித்தவனும் அவனே. நித்யாநந்தனைக் கொன்றதற்குப் பழிக்குப் பழியாக ருக்மாங்கதனுடைய உயிரை வாங்கவேண்டுமென்ற ஆத்திரம் ரத்னாகரனுக்கிருந்தது. அதற்குத்தகுந்தாற்போல் ருக்மாங்கதன் வெகு ஆத்திரத்துடன் ரத்னாகரனையும் குத்திக் கொன்றுவிடுகிற நோக்கத்துடன் அவனுடன் சண்டைக்கு வந்தான். அதனுடைய பயனாகத் தானே வீழ்ந்து மடியும்படி நேரிட்டது; பாருங்கள்.

லீலாவதி:— ருக்மாங்கதா; என் அருமை ருக்மாங்கதா! உன்னை யுத்தத்தில் கொன்றுவிட்டு ஒருவன் உயிருடன் தப்பி ஓடிவிடுவதை நம் புஷ்பபுரியில் எல்லோரும்பார்த்துக்கொண்டு சும்மாகத்தானே இருக்கிறார்கள். அரசே! இதென்ன கொடுமை! என்வம்சத்தில் ஒருவனை இம்மாதிரி கொன்ற மட்டிலும், எனது எதிரிகக்ஷியில் எவருடைய சிரஸையாவது பழிவாங்கா விட்டால் இந்தப்பாபம் எல்லாம் உங்கள் ராஜ்ஜியத்தைச் சேருமென்பதிற் சந்தேகமில்லை.

**அரசன்:**— குசுமாகரா! இந்தக்கலகத்தை ஆரம்பித்தது யார்! சற்று நிதானமாகச் சொல்.

**குசுமா:**— முதலில் கலகத்திற்கு ஆரம்பமே ருக்மாங்கதன்தான். ரத்னாகரனும் கலகத்தில் இங்குவந்து தன்னால் கூடிய மட்டிலும் ருக்மாங்கதனிடம் நல்ல வார்த்தைகள் கூறி கலகத்தைத்தடுத்தான். அப்படிச் சண்டையை விலக்கிக்கொண்டிருக்கும் பொழுதே ருக்மாங்கதன் திருட்டுத்தனமாக பின்புறம் வந்து நித்யாநந்தனை வலுவாகக் குத்திவிட்டான். அதற்கப்புறம் நடந்தவற்றை நான் தெரிவித்தாய்விட்டது. ருக்மாங்கதன் கெட்ட எண்ணத்துடன் ரத்னாகரனிடமும் சண்டைக்கு வந்தான். ஆனால் ரத்னாகரனுடைய பராக்ரமம் எங்கே; ருக்மாங்கதன் பராக்ரமம் எங்கே! இரண்டிற்கும் அஜகஜாந்தரமாயிற்றே! சண்டையில் ருக்மாங்கதன் அடிபட்டுக் கீழேவிழுந்து உயிர்துறந்தான். அவன் கீழே விழுந்தவுடன் ரத்னாகரன் எங்கேயோ ஓடிப்போய்விட்டான். நடந்தது எல்லாமே இவ்வளவுதான் அரசே. எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி தெரிவித்தாய்விட்டது.

**லீலா:**— அரசே! விசித்ரவீர்யனுக்கு வேண்டிய ஆள் இந்த குசுமாகரன். ஆகையால் இவன் சொல்லியது பூராவாக நிஜமாகவிராது. எனக்கு நன்றாகத்தெரியும். இங்கு இருபது ஜனங்கள் சண்டை செய்து கொண்டிருந்தார்கள். இருபது பேர்கள் ஒரு பக்கத்திலும், ஒருவன் மட்டும் மற்றொருபக்கத்திலும் சண்டைசெய்தால், அந்த ஒருவனைக்கொன்றுவிடுவது அசாத்தியமான காரியமா? இல்லை. எனக்கு அதெல்லாம் தெரியாது. என் தமையன் பிள்ளையை இந்த ரத்னாகரன் கொன்றுவிட்டான். ஆகவே அந்த ரத்னாகரனுடைய உயிரைப் பழியாக வாங்கவேண்டும்.

**அரசன்:**— நித்யானந்தனை ருக்மாங்கதன் கொன்றான்; ருக்மாங்கதனை ரத்னாகரன் கொன்று விட்டான். [illegible] தானே முடிந்திருக்கிறது. இப்பொழுது [illegible] பதென்று புலப்படவில்லையே.

விசித்ர:—மஹாராஜா! ரத்னாகரனுடைய செய்கை மிகவும் நியாயமாகத்தான் தெறிகிறது. தாங்கள் நியாயமாக ருக்மாங்கதனுக்கு என்ன தண்டனை விதித்திருப்பீர்களோ அது தானாகவே நடைபெற்றுவிட்டது. ஆகவே ரத்னாகரனை தண்டிப்பது நியாயமில்லை என்று தெறிகிறது.

அரசன்:—நியாயமின்னது அநியாயம் இன்னதென்பது எனக்கு நன்றாகத்தெரியும். இது விஷயத்தில் நான் உன்னிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதொன்றுமில்லை. இதுகாறும் உங்களிருவருக்குமுள்ள விரோதத்தினால் எங்குபார்த்தாலும் சண்டைசச்சரவும், இறைச்சலும், ஏற்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது மனிதனுடைய உயிருக்கே ஆபத்துவந்து விட்டது. ஆகையால் இனிமேலும் நான் சும்மாவிருக்கும் பக்ஷத்தில் ஜனங்களுக்கு மேன் மேலும் அநீதி நடக்கவும், எனக்கு அபகீர்த்தி ஏற்படவும் நேரிடும். மேலும் இக்குற்றத்தைச் செய்த ரத்னாகரனைத் தண்டியாது விடுவது நியாயமில்லை. உங்களுக்கும் ஒரு வித அறிவுகூடு போடவேண்டியது அவசியமாகிறது. ஆகவே ரத்னாகரனுக்கு தீபாந்திர சிக்ஷை விதிக்கப்படுகிறது. அவனை எங்கிருந்தாவது கண்டுபிடித்து நமது ராஜ்யத்து ராஜத்துரோகிகளை அனுப்பியிருக்கும் தீவிற்கு அனுப்பவேண்டியது. இனிமேல் ரத்னாகரனுடைய தலையைப் புஷ்பபுரியில் காண்பது கூடாது. சேவகர்காள்! நான் சொல்லிய கட்டளை ஞாபகமிருக்கட்டும். (எல்லோரும் போகிறார்கள்.)

## களம் 2.

### வீர்யவர்மன் வீட்டில் ஓர் அறை.

(சந்த்ரவதனி பிரவேசிக்கிறாள்.)

சந்த்ர:—இப்பொழுது மாலை மணி 5ஆகிறது. இன்னும் சூர்யாஸ்தமனத்திற்கு 1 மணி நேரமிருக்கின்றதே. தெய்வமே! எப்பொழுது இரவு வந்து எங்கும் இருள்மூடிக்கொள்ளுமென்ற ஆத்திரம் எனக்கு மேலிடுகிறதே. எனது நாயகனை இருட்டில்லாமல் பகலில் சந்தித்து சல்லாபிக்கக்கூடிய



பாக்கியம் நான் பெறவில்லையே. அது போனால் போகட்டும்; பகல் வேளையாவது சீக்கிரம் தொலையக்கூடாதா? நம் முன்னோர் காலத்தில் "நளாயினி" தனது பதிவ்ராதா தர்மத்தினால் பொழுது விடியாமலிருக்கக்கடவது என்று ஒரு சந்தர்ப்பத்தில் சபித்ததாகவும், அவ்விதமாகவே சில நாட்கள் இருந்ததாகவும் சொல்லுகிறார்களே! அம்மாதிரியாக இப்பொழுதும் நடக்கக் கூடாதா? பதிவ்ரதா தர்மத்தில் நான் சிறிதும் குறைந்தவளில்லையே! இருந்தாலும் இக்கலிகாலத்தில் பதிவ்ரதை ஏது? தர்மமேது! இருக்கட்டும். இது வரை பொறுத்தாய்விட்டது. இன்னும் இரண்டு மூன்றுமணி நேரம் பொறுத்தால் எனது நாதன் வந்து விடுவார்! அதுவரை அவருடைய படத்தையாவது பார்த்துத்தேறுதல் அடைகிறேன். அதோ எனது அக்கா அஞ்சனா வருகிறாள். அவள் ஏதாவது என்னுடைய நாயகனைப்பற்றிச் சொல்லிக்கொண்டேயிருப்பாள். இப்பொழுது என்னசெய்தி கொண்டுவந்திருக்கிறாள் என்று கேட்கிறேன்

(அஞ்சனா நூல் ஏணி சகிதம் நுழைகிறாள்.)

அக்கா அஞ்சனா! என்ன சமாசாரம்! இது புது நூல் ஏணியாகவிருக்கிறதே! இதுவேறே எனது நாயகன் எனக்காக வாங்கிக் கொடுத்தனரா?

அஞ்சனா:— நூலுமாயிற்று, ஏணியுமாயிற்று (நூல் ஏணியைக் கீழே எறிகிறாள்.)

சந்த்ர:—என்ன அக்கா! கையைக்கையைப் பிசைகிறாயே! என்ன சமாசாரம்?

அஞ்ச:—ஐயோ! இந்த அநியாயம் எங்கேயாவது நடந்ததுண்டா? அவனுக்கு இந்த மாதிரி போக்காலம் வருமென்று யார் நினைத்தார்கள்? என்ன அல்ப ஆயிசு?

சந்த்ரா:—என்ன! தெய்வத்திற்கும் அது சம்மதமாகவா இருந்தது?

அஞ்ச:—தெய்வத்திற்குச் சம்மதமில்லாவிட்டால் ரத்னாகரனுக்குச் சம்மதமாகவிருந்தது அது போதாதா? ஐயோ!

ரத்னாகரா! நீகூட இம்மாதிரிக் கதிக்கு வருவாயென்று நான் நினைத்தவளில்லையே.

சந்த்ர:—என்ன அக்கா! எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே! எனது ரத்னாகரனுக்கு என்ன வந்து விட்டது? அவருடைய உயிருக்கு யார்என்ன தீங்கிழைத்தார்கள்? அல்லது தானே தனக்கு அழிவைத்தேடிக்கொண்டு விட்டாரா? அவர் அப்படிச்செய்யப் பட்டவரில்லையே! என்னை ஏன் இந்த மாதிரி விஷயத்தைத் தெரிவிக்காமல் வதைக்கின்றாய்? அவர் உயிருடனிருக்கிறாரா, இல்லையா?

அஞ்சனா:— ஐயையோ! நீ மறுபடியும் என்னை என்ன சொல்லச் சொல்லுகிறாய்? நானே நேரில் பார்த்தேனடி அந்தக் காயத்தை, மார்புக்கு நேராகக் குத்துப்பட்டிருக்கிறது. கீழே எவ்வளவு ரத்தம் பெருகியிருக்கிறது? அந்த கோரத்தைப் பார்த்தவுடனேயே எனக்கு மூச்சுப்போய்விட்டது.

சந்த்ர:—தெய்வமே! இதென்ன கொடுமை! எனது நாதன் இறந்தபிறகு நான் உயிருடனிருப்பது தவறல்லவோ! எனது பிராணனையும் உனக்கு அர்ப்பணம் செய்து விடுகிறேன்.

அஞ்சனா:—ருக்மாங்கதா! நீ செத்து நான் பார்க்கும்படியும் ஒரு காலம் வந்து விட்டதேயடா? இதென்ன பாபமோ தெரியவில்லையே!

சந்த்ர:—அக்கா! இதென்ன அநியாயம்! எனது நாதன் குத்துண்டது மட்டுமல்லாமல், ருக்மாங்கதன் வேறு இறந்து போய்விட்டானா! இதென்ன நமது நாட்டைப்பிடித்திருக்கிறது துரிதம்?

அஞ்சனா:—ஐயோ! ருக்மாங்கதன் இறந்து விட்டான். ருக்மாங்கதனைக்கொன்ற ரத்னாகரனுக்கு தீபாந்திரசிக்ஷையும் விதித்தாகிவிட்டது?

சந்த்ர:—ஆஹா! என்ன சொன்னாய்? ருக்மாங்கதனா இறந்து விட்டான்? எனது நாதன் உயிருடன்தானே இருக்கின்றார்? இவ்வளவு நேரம் எனது மனதை எம்மட்டிலும் புண்படுத்தியிருக்கிறாய்? ஆமாம். எனது நாதனா ருக்மாங்கதனைக் கொன்றவர்?



அஞ்சனா:— ஆமாம் அம்மா, ஆமாம். ரத்னாகரன் தான் அக்கொடுமையைச் செய்தவன்.

சந்த்ர:— இதென்ன ஆச்சர்யம்! ரத்னாகரனைப் போல் குணத்திலும் அழகிலும் சிறந்தவன் வேறொருவருமில்லையென்று நினைத்தல்லவோ நான் அவர்மீது காதல்கொண்டு பின்னர் அவரை மணந்தேன். இப்பொழுது அவருடைய நடத்தையிலிருந்து நான் என்ன நினைப்பது? பசுவின் தோல் போர்த்திய புலியாகவல்லவோ விளங்கிவிட்டார். வெளித்தோற்றத்திற்கு என்ன அமரிக்கை! என்ன குணம்! உள்ளம் பூராவாக ஆலகாலமல்லவோ குடிகொண்டிருந்திருக்கிறது! அகத்தினழகு முகத்திற்தெறியு மென்பார்களே! இவருடைய சம்பந்தமாக அந்த ஆன்றோர்வாக்கியம் பொய்யாகி விட்டதே!

அஞ்சனா:— சீ! இதென்ன உலகம்! எங்குபார்த்தாலும் கலகம். எங்குபார்த்தாலும்பொய், பிரட்டு, சூது நடபடிக்கைகள் தான். யாரைத்தான் இந்த காலத்தில் நம்புவது. என் வேலைக்காரனெங்கே? அடே! அந்த விசிறியைக்கொண்டு வந்து சற்று விசிறிக்கொண்டிருடா! அந்தப்பாபி ரத்னாகரனைப்பற்றி நினைத்தாலும் சோறுகிடையாது. அவன் தலையில் இடி தான் விழவேண்டும்.

சந்த்ர:—என்ன சொன்னாய்? அவர் தலையில் ஏன் இடி விழவேண்டும்? வேறு எத்தனையோ பாபிகளிருக்கிறார்கள். அவர்கள் தலையில் தான் இடி விழவேண்டும்.

அஞ்சனா:—ஏனடி சந்த்ரா! உன்னுடைய நெருங்கியபந்துவைக் கொன்றானே. அவனிடம் உனக்கென்ன அவ்வளவு அநுதாபம்!

சந்த்ர:—அப்படியா? எது எப்படியிருந்த போதிலும் அவர் எனது நாதனில்லையா? பதியேயல்லாமல் ஸ்திரீகளுக்கு வேறோர் தெய்வமில்லை என்பார்களே. அந்த மாதிரி

எனக்கு என் நாதன் ஒருவர் நீங்கலாக வேறுயார் இருக்கிறார்கள்? நானும் ஏதோ முன் பின் யோசனை செய்யாமல் எனது நாதனைப்பற்றி தூஷித்துவிட்டேன். இப்பொழுது என்னநடந்திருக்கிறது? எனது நாதன் உயிருடனிருக்கிறார். அவரைக் கொல்லவேண்டுமென்று கெட்ட எண்ணம் குடிகொண்டிருந்த ருக்மாங்கதன் அவர்காலின் கீழே விழுந்து உயிர்துறந்தான் அதனாலென்ன? எனது நாதனைக் கொல்லவந்தது யாராயிருந்தாலென்ன? அவர்கள் தண்டனைக்கு ஆளாகவேண்டியது நியாயம்தானே. ஆகவே நான் இதுவிஷயத்தில் சந்தோஷப்பட வேண்டியதைத் தவிர துக்கப்படவேண்டிய காரணத்தைக் காணேனே. அப்படியிருக்க நான் ஏன் அனாவசியமாக இவ்வளவு கண்ணீர் உதிர்த்தேன்? ஆம். இப்பொழுது ஞாபகம் வருகிறது. "ருக்மாங்கதன் இறந்துவிட்டான்" என்று சொல்லியது மட்டுமல்லாமல், அவனைக்கொன்ற எனது நாதன் "தீபாந்திரசிக்ஷை" விதிக்கப்பட்டார் என்று எனதக்கா சொன்னாளன்றோ! அந்தக் கொடியவார்த்தை "தீபாந்திரசிக்ஷை" என்றதைக் கேட்டதுமுதல் எனதுள்ளம் பதைத்துக் கொண்டிருக்கின்றதே. ருக்மாங்கதன் மட்டுமில்லை; எனது தாய், தந்தையும்கூட இறந்துபோய் விட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டால் எனக்கு இப்பொழுதிருக்கும் அளவு துக்கம் ஏற்படாதே! ஐயோ! நான் என்னசெய்வேன்? எனது நாயகனை இனி எப்பொழுது காண்பேன்? எப்படித்தான் காணமுடியும்? அக்கா அஞ்சனா! எனது தாய், தந்தையர் எங்கேயிருக்கிறார்கள்?

அஞ்சனா:— எங்கேயிருப்பார்கள்? ருக்மாங்கதன் வீட்டில் அழுதுகொண்டிருக்கிறார்கள். ஏன்? நீயும் வருகிறாயா? உன்னை அங்கே கூட்டிக்கொண்டு போகிறேன்.

சந்த்ர;—ஒன்று வேண்டாம். எதற்காக ருக்மாங்கதன் சாவைப் பற்றி நான் துக்கிக்க வேண்டும்? எனக்கு என் நாதனுடைய சிக்ஷையைப்பற்றிய துக்கம் ஒன்று போதாமலா இன்னும் வேறு துக்கமும் வேண்டும்? சரி. சரி. இந்த



நூலேணி எதற்கு? என் நாதன் இங்கில்லாமலிருக்கும்பொழுது நூலேணிமட்டும் ஏன்? எனது நாயகனை வெளியிலிருந்து எனதறைக்கு தூக்கிவிடக்கூடிய ஏணி இனி எனது கழுத்தைத்தான் தூக்கப் போகிறதென்று நினைக்கிறேன். அக்கா நீ ஏன் கார்த்துக்கொண்டிருக்கிறாய்? நீ போ. நானும் எனதறைக்குப் போய் என் படுக்கையில் வீழ்கிறேன். எனக்கு இனிமேல் யாருடைய துணையும் வேண்டியதில்லை. கடவுளோ கைவிட்டுவிட்டார். யமதர்மராஜனாவது கருணைபுரிந்து என்னை அழைத்துச் சென்றால் நலமாகவிருக்கும்.

அஞ்சனா:—சந்த்ரா! நீ கவலைப்படாதே. உனது புருஷன் எங்கிருக்கிறாரென்பது எனக்கு நன்றாகத்தெரியும். யோகானந்தருடைய ஆசிரமத்தில் ஒளிந்திருப்பதாகக் கேள்வி, நான் எப்படியாவது அவரைத் தேடிப்பிடித்து, உன்னிடம் சேர்ப்பித்து; உனக்கு ஆறுதல், செய்விக்கச்செய்கின்றேன்; பார்.

சந்த்ர:—அக்கா! அப்படியாவது செய்யடி! நீ என்னிடம் மிகவும் ப்ரீதிவாய்ந்தவள். நீ இல்லாவிட்டால் எனக்கு இம்மாதிரித் தருணத்தில் யார்தான் உதவி புரிவார்கள். இந்தா, இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு, அதை அவரிடம் காண்பித்து, கட்டாயம் இன்றையதினம் இரவு என்னைக்கடைசி முறையாகவாவது சந்தித்து விட்டுப் போகச் சொல். (இருவரும் போகிறார்கள்;)

## களம் 3.

### யோகானந்தர் ஆசிரமம்.

(யோகானந்தர் பிரவேசிக்கிறார்.)

யோகா:— ரத்னாகரா! வாடா வெளியிலே அப்பா என்னமோ உனக்குக் காலம் மிகவும் போதாமலிருக்கிறது. மேன்மேலும் கஷ்டங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. நாம் என்ன செய்ய முடியும்? தெய்வசம்மதமே அவ்விதமிருக்கின்றது போலிருக்கிறது.

(ரத்னாகரன் வெளியில் வருகிறான்.)

ரத்ன:—ஸ்வாமீ! மஹாராஜா எனக்கு என்ன தண்டனை விதித்திருக்கிறாரென்று கேட்டுத் தெரிந்தீர்களா?

யோகா:— என்னமோ! நான் என்ன சொல்லப் போகிறேன். நல்ல சங்கதி ஏதாவதிருந்தால்லவோ சந்தோஷமாக வாய் திறந்து சொல்லக்கூடும்.

ரத்ன:—ஏதிருந்தாலும் சொல்லித்தானே தீரவேண்டும். நீங்கள் உங்களுக்குத் தெரிந்தவற்றைத் தெரியப்படுத்தாமலிருப்பது எனக்கு மிகவும் ஆத்திரத்தை உண்டுபண்ணுகிறது.

யோகா:— மஹாராஜா கொடூரமான தண்டனை ஒன்றும் விதிக்கமாட்டாரென்று கருதியிருந்தேன். உனது உயிருக்கு ஒன்றுமில்லையே ஒழிய, சரீரத்திற்கு சிக்ஷை விதித்து விட்டார். தீபாந்திரசிக்ஷை உனக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.

ரத்ன:— என்ன! தீபாந்திரசிக்ஷையா! ஐயோ அதைப்பார்க்கிலும் எனது உயிரைப் பழிக்குப்பழியாக வாங்கினால் மேலாகுமே.

யோகா:— நமது புஷ்பபுரியை விட்டு நீ உடனேயே வெளியேறி விடவேண்டுமாம். இன்னும் 24 மணி நேரங்களுக்குள் நீ போகாமல் உன்னை இங்கு எவராவது பார்ப்பாராகில் உனது தலையைச் சேதம்செய்து விடலாமாம். இதுதான் மஹாராஜாவின் ஆக்ஞை. என்ன செய்யலாம்? மனத்தை ஒரு விதமாக சமாதானம் செய்துகொள். உலகமோ மிகவும் விசாலமானது. எங்கேயாவது போய்ப் பிழைக்கலாம்.

ரத்ன:—ஸ்வாமீ! நமது புஷ்பபுரியேயல்லாமல் வேறு எங்கு செல்வதைப் பார்க்கிலும், என்னைக்கொன்று விடுவதே மேன்மை. ஒரு மனிதனைக் கொல்லப்போவதாக ஒரு தண்டனை விதித்தால், அந்த மனிதனுக்கு தங்கக் கத்தியால் கொல்வதாகவிருந்தாலென்ன, இரும்புக் கத்தியாகவிருந்தாலென்ன? சாவு நிண்ணம்தானே! அதேபோல் எனக்கு தீபாந்திரசிக்ஷை விதித்த பின்னர், உயிர்ப்பிச்சைகொடுத்திருக்கிறாரென்பதில் சிறிதும் த்ருப்தியில்லை.



யோகா:— என்னடா அப்பா! நீ செய்திருக்கக்கூடிய காரியத்திற்கு நியாயமாக உனக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்படவேண்டும். ஆனால் மஹாராஜா சற்று கருணைகாட்டியவராய் உனக்கு தீபாந்திர சிக்ஷை விதித்திருக்கின்றார். ஆகவே நீ இம்மாதிரி துக்கப்படுவது நியாயமில்லையே.

ரத்ன:— என்னஸ்வாமீ! தாங்களும் இம்மாதிரி பேசுகின்றீர்கள்? எனது உயிருக்குயிராகிய சந்த்ரவதனி இங்கிருக்க நான் இதைவிட்டு வேறு எங்காவது போவதென்றால் என் மனம் எப்படிச் சகிக்கும்? ஈ; எறும்பு; நாய்; பூனை இம்மாதிரிய வாயிலா ப்ராணிகள் முதல் எனது சந்த்ராவைப் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய பாக்கியம் பெற்றிருக்கின்றனவே. அப்படியிருக்க நான்மட்டும், அவளைப் பார்த்து ஆனந்திக்கக்கூடிய பாக்கியம் பெறவில்லையே. இதையும்விட வேறு என்ன தண்டனை எனக்கு விதிக்கவேண்டும்? ஸ்வாமீ! தங்களிடம் ஏதும் கொடூரமான பாஷாணமில்லையா? ஏதும் உடைவாளில்லையா? நான் எவ்விதத்திலாவது என்னுடைய உயிரைப் போக்கி அதுடன் எனது தெளர்பாக்கியத்தையும் ஒழித்துவிடுகிறேன்.

யோகா:—அதெல்லாமிருக்கட்டும். நான் ஒரு வார்த்தை சொல்கிறேன், கேள்.

ரத்ன:—எனக்கு ஒன்றும் வேண்டாம். எனக்கு இனிமேல் யாராலும் ஆறுதல் சொல்ல முடியாது.

யோகா:—வீணில் முரண்டுசெய்யாதே. சில உபதேசங்கள் செய்கிறேன். அவைகளைக்கேட்டால் உனக்கு ஒரு நிம்மதி ஏற்படும்.

ரத்ன:—ஸ்வாமீ! தாங்கள் என்னைச்சற்று மன்னிக்கவேண்டும். இந்த இளம் வயதிலேயே நான் இம்மாதிரியான கஷ்டங்களுக்குப் பாத்திரனாகும்படி நேரிட்டுவிட்டது. என்றாலும் உலகப்பற்றுதலை விட்டொழிப்பது என்பது [illegible] போன்ற பாலியர்களால் முடியுமா? அது அழகா? [illegible] சற்றுநேரம் தனியாக விட்டு விட்டுச் செல்லுங்கள்; [illegible]

விதியை நினைத்து நான் தூக்கித்துக்கொண்டிருக்கிறேன். அழுது கொலைத்தாலன்றியில் எனது துக்கமும் குன்றப் போகிறதில்லை.

(கதவை தட்டும் சப்தம் கேட்கிறது.)

**யோகா:**—யாரோ கதவைத் தட்டுகிறார்கள். ரத்னா! நீ ஒரு பக்கம் ஒளிந்துகொள். நான் கதவைத் திறந்து யாரென்று பார்த்துவிட்டு வருகிறேன்.

**ரத்னா:**— நான் எங்கும் போய் ஒளிந்துகொள்ளப் போகிறதில்லை. என்னை யார் வேண்டுமானாலும் பார்க்கட்டும். மஹாராஜாவிடம் தெரியப்படுத்தி என் சிரஸைச் சேதிக்கச் செய்யட்டும். எனக்கு அதனால் வருத்தமொன்றுமில்லை. எனக்கு என் உயிரில் பற்றுத லிருந்தால்தானே ஓடி ஒளிந்து மறைந்து கொள்ளவேண்டும்.

(மறுபடியும் சப்தம் கேட்கிறது)

**யோகா:**—அதோ பார், மறுபடியும் தட்டுகிறார்கள். அது யார் அங்கே?—ரத்னா! எழுந்திரு. நான் இதோ உன்னிடம் வந்துவிடுகிறேன். (மறுபடியும் சப்தம் கேட்கிறது) இந்தா. ஓடிப்போய் எனது யோகாப்பியாச அறைக்குள் சென்று கதவை தாளிட்டுக்கொள்.—இதோ வருகிறேன் (மறுபடியும் தட்டுதல்) யாரது, இம்மாதிரி கதவையுடைத்துத் தகர்ப்பது? எங்கிருந்து வந்திருக்கின்றாய்? யார் சொல் முதலில்.

(கதவை மெல்ல திறக்கிறார்.)

**அஞ்சனா:**—தயவுசெய்து என்னை உள்ளே விடுங்கள். நான் இங்குவந்த சமாசாரத்தைத் தெரியப்படுத்தி விடுகிறேன். என்னை சந்த்ரவதனி இவ்விடம் அனுப்பியிருக்கிறாள்.

**யோகா:**—அப்படியா! மெத்தவும் சந்தோஷம். உள்ளே வரலாம். (அஞ்சனாவதி உள்ளே பிரவேசிக்கிறாள்)

**அஞ்சனா:**– ஸ்வாமீ! எனது பிரபு ரத்னாகரன் எங்கே இருக்கிறார்?

**யோகா:**—அதோ பார் அந்த அறையில். கீழே படுத்துக் கொண்டு அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக இருப்பதை.



**அஞ்சனா:**— ஐயோ! இதேமாதிரிதான் சந்த்ராவும் அங்கே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

**யோகா:**–அப்படியா! காலத்தின் கொடுமையைத்தான் என்னென்றுரைப்பது?

**அஞ்சனா:**—இந்த மாதிரிதான் கீழே படுத்துக்கொண்டு அழுது கொண்டிருக்கிறாள். யார் என்ன சொல்லியும் அழுகையை விட்டபாடில்லை. ஆஹாரம் வேண்டாமென்கிறாள். உடம்பு முன் இருந்ததற்கு இப்பொழுது பாதியில்லை. (ரத்னாகரன் அருகில் போய்)பிரபு! இதென்ன! ஸ்திரீகள் தான் கோழை நெஞ்சம் படைத்தவர்களென்றால் தங்களைப்போலொத்த ஆடவர்களும் இம்மாதிரியிருப்பது அழகாகுமோ! தயவு செய்து எழுந்திருங்கள்.

**ரத்னா:**–யாரது? அஞ்சனா குறல்மாதிரி இருக்கின்றதே. அஞ்சனா?

**அஞ்சனா:**– ஸ்வாமீ! எழுந்திருங்கள்; என்ன செய்யலாம்? இதெல்லாம் நாம் பூர்வ ஜன்மாவில்செய்த வினையின் பயனேயாகும்.

**ரத்னா:**—அஞ்சனா! எனது சந்த்ரா எங்கிருக்கிறாள்? என்னைப் பற்றி ஏதாவது உன்னிடம் தெரிவித்தாளா? என்னைக் கொலைபாதகனென்றுதானே மதித்திருப்பாள்! ஹாம்! நான் அவளுடைய நெருங்கிய பந்துவின் உதிரத்தைப் பெருகவிட்ட பின்னர் அவள் என்னை வேறெவ்விதமாக நினைக்கக்கூடும்? என் காதலி என்பேரிலுள்ள அன்பைப் பற்றி வேறு ஏதாவது தெரிவித்தாளா?

**அஞ்சனா:**— அவள் ஒன்றுமே பேசமாட்டேனென்கிறாள். சதா அழுதுகொண்டேயிருக்கிறாள். சிலசமயத்தில் திடீரென்று எழுந்திருந்து "ருக்மாங்கதா" என்று சொல்லுகிறாள். மற்றும் சில சமயங்களில் தங்களுடைய நாமதேயத்தைச் சொல்லுகிறாள். மறுபடியும் படுக்கையில் விழுந்து புலம்புகிறாள். பைத்தியம் பிடித்தவள்மாதிரிப் பிதற்றுகிறாள். இம்மாதிரி இன்னும் சில நாட்களிருந்தால் போதும்; பைத்தியம் பிடித்துவிடுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

ரத்னா:— என்னைக் கொலைகாரனென்று நினைத்து இழிவாக எண்ணித்தான் என்பெயரைச் சொல்லுகிறாளோ என்னமோ! "ரத்னாகரன்" என்ற பெயர் பூண்டவனுடைய கைதான் தன்னுடைய உறவினரைக் கொலைசெய்திருக்கிறது என்று அவள் நினைக்கிறாள்போலும். ஆனால் யதார்த்தத்தில் நடந்தவையெல்லாம் அவள் எவ்விதம் அறிந்திருக்கக்கூடும்? ஆகவே அவள் என்னைப்பற்றித் தவறாகவும், இழிவாகவும் நினைத்திருந்தாலும் அவள் பேரில் குறைகூற இடமில்லை. அவள் மனது புண்படக்கூடிய நிலைமையில் நான் நடந்தபிறகு இனி உயிர்வைத்துக் கொண்டிருப்பதிலும் யாது பயனுமில்லை. ஆகையால் என் உயிரை மாய்த்துக் கொள்வதுதான் சரியான யுக்தி. (உடைவாளை உருவிக் கையிலெடுக்கிறான்.)

யோகா:— (ரத்னாகரனுடைய கையைப் பிடித்துக்கொண்டு) சீ! என்னகாரியம் செய்யத்துணிந்தாய்? நீயும் ஒரு ஆடவன் என்று சொல்லிக்கொள்கிறாயே! உனக்கு வெட்கமில்லையா? முன் பின் யோசனை செய்யாமல், அவசரமாகவும், ஆத்திரமாகவும் காரியம் செய்வது உன்னைப்போலொத்த படித்தவர்களுக்கு அழகாகுமா! அப்படியானால் மிருகத்திற்கும் உனக்கும் என்ன வித்தியாசம்? ஏதோ உன்னை மிகவும் அடக்கமுடையவனென்று நினைத்தேன். அது தவறென்று இப்பொழுதுதான் தெரிகிறது. இப்பொழுது தற்கொலை புரிந்துகொள்ளும்படியாக என்ன நடந்துவிட்டது? எந்தப் பெண்மணியை விட்டுப் பிரிய மனமில்லையோ, அந்தப் பெண்மணி உயிருடனிருக்கிறாள்; உனக்காக அவளும் துக்கப்பட்டு வருந்துகிறாள்; அவள் பொருட்டாவது நீ பிழைதிருக்க வேண்டாமா? எவன் உன்னைக்கொல்ல வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் உன்னிடம் சண்டைக்கு வந்தானோ, அவனை, அந்த ருக்மாங்கதனை, நீ குத்திக் கொன்று வெற்றிபுரிந்தாய். இது சந்தோஷிக்கத்தகுந்த காரியமில்லையா? மேலும், பழிக்குப்பழி வாங்கவேண்டியதான ஒரு பெரியகுற்றம்செய்த உனக்கு தீபாந்திர சிக்ஷை



மட்டுமே விதிக்கப்பட்டிருக்கிறது. ஏன் அதை நினைத்துத் தேறுதல் செய்துகொள்ளக்கூடாது? எல்லாவற்றையும் விட்டுவிட்டு உனது உயிரையே மாய்த்துக்கொள்ளத் துணிந்துவிட்டாயே! சாஸ்திரங்களில் "தற்கொலை"யைப்போல் மஹாபாதகமான செய்கை வேறொன்றுமில்லையென்று சொல்லியிருக்கின்றனவே. அது உனக்கு தெறியாததா? சீ; இனி இம்மாதிரியான ஹீனத்தொழிலைச் செய்யத் துணியாதே. இதோ பார். நான் சொல்வதைக் கேள் இன்றையதினம் இருட்டினதும் ரகசியமாகச்சென்று, வீர்யவர்மன் நந்தவனத்திற்குட் புகுந்து, நீ கொடுத்தனுப்பிய நூலேணிவழியாக உனது நாயகியின் அறையிற் சென்று, உனது வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் சந்த்ராவைச் சமாதானப்படுத்து. அது விஷயத்தில் உன்னுடைய சாமர்த்தியத்தையெல்லாம் காட்டினால் நன்றாகவிருக்கும். விடியுமுன்னதாகவே திரும்பி வந்துவிடவேண்டும். அப்படியானால்மட்டும்தான் புஷ்பபுரியைவிட்டு காலாகாலத்தில் வெளியேற முடியும். சிறிது காலம் நீ இங்கில்லாமலிருக்கவேண்டியது அவசியம்தான். அதற்குள் நான் என்னால் கூடுமானவற்றைச் செய்து மஹாராஜாவை சாந்தப்படுத்தி உனக்கிட்டிருக்கும் கட்டளையை மாற்றச் செய்கிறேன். அதற்குப் பிறகு உங்களுக்கு ரகசியமாக நடந்திருக்கும் விவாஹத்தைப் பகிரங்கமாக நடத்தச்செய்வதற்குள்ள வழிகளைத்தேடி உங்கள் இரண்டு குடும்பங்களுக்கும் சமாதானத்தைச் செய்யக்கூடும். அஞ்சனா! நீ முன்னதாகப்போய் சந்த்ராவிடம் இங்கு நடந்தவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி இரவில் வேலையாட்களை சீக்கிரம் உறங்கப்போகும்படி செய்யச்சொல். தெரிகிறதா! கட்டாயம் ரத்னா இன்றிரவு அங்கு வருவான்.

அஞ்சனா:— ஸ்வாமீ! அவ்விதமே அவளிடம் தெரியப்படுத்துகிறேன். பிரபு. நான் சென்று வரவா?

ரத்னா:— சரி. நான் நிச்சயமாக வருவேனென்பதைத் தெரியப்படுத்துவாய்.

**அஞ்சன:**— அப்படியே ஆகட்டும் பிரபு! ஒரு சங்கதி மறந்து விட்டேன். உங்களிடம் கொடுக்கும்படியாக ஓர் மோதிரம் கொடுத்தாள். இந்தாருங்கள்; (மோதிரத்தைக் கொடுக்கிறான்.) நாழிகையாய்விட்டது. நான் போய் வருகிறேன்.

(போகிறான்.)

**ரத்ன:**— ஸ்வாமீ! ஆகவே இன்னும் உயிரை வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனமிருக்கிறதென்று தெரிவிக்கிறீர்கள்?

**யோகா:**— அதற்கென்ன சந்தேகம்! நேரமாகிவிட்டது. நீ இப்பொழுது உன் காதலியின் வீட்டிற்குச்செல். அங்கிருந்து விடியுமுன்னதாகவே கிளம்பி நமது புஷ்பபுரியை விட்டு கீழ்திசையாக புறப்பட்டுப்போய் இங்கிருந்து 15 மைல்களுக்கப்பாலுள்ள எனது சிஷ்யர் ஒருவருடைய இருப்பிடத்திற்குச் சென்று அங்கு ஒளிந்துகொள். அவருக்கு நான் கொடுத்ததாக இந்தக்கடிதத்தைக்கொடு. (ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார்). அவர் உன்னை அன்புடன் வரவேற்பார். இங்கு நடக்கிற செய்திகளைப்பற்றி அடிக்கடி நான் உனக்கு ஒரு ஆள் மூலம் சொல்லியனுப்புகிறேன். இந்தா போய்வா. தெய்வத்தினுடைய அநுக்ரஹம் பரிபூர்ணமாக உன்னிடமிருக்குமாக!

**ரத்ன:**— தங்கள் அநுக்ரஹம். நான் போய் வருகிறேன்.

(போகிறார்கள்)

## களம் 4.

(வீர்யவர்மன் வீட்டில் ஒரு அறை)

(வீர்யவர்மன், லீலாவதி, கமலசேனன் பிரவேசிக்கிறார்கள்.)

**வீர்ய:**— என்ன செய்யலாம்? இந்தமாதிரி யெல்லாம் வரப்போகிறதென்று யார் நினைக்கக்கூடும்? இந்த ருக்மாங்கதன் இறந்து போன வருத்தத்தினால், எனக்கு சந்த்ராவிடம் இந்த விவாஹத்தைப்பற்றிப் பேசப்பிரியமில்லாமலிருந்து விட்டேன். சந்த்ராவுக்கு ருக்மாங்கதனிடம் விசேஷப்ரீதி. இப்பொழுது இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. நாளை



வந்தால் மிகவும் நலமாக விருக்கும். ஏன்? அப்படிச்செய்கிறது தானே.

**கமல:**— வாஸ்தவம். இப்பொழுதிருக்கும் ஸந்தர்ப்பத்தில் கல்யாணப்பேச்சு எவ்விதம் பேசுவது? சரி. நான் போய் வருகிறேன். சந்த்ராவை நிரம்பவும் விசாரித்தாகத்தெரிவியுங்கள்.

**லீலா:**— அப்படியே ஆகட்டும்; தாங்கள் கவலை ஒன்றும் கொள்ளவேண்டியதில்லை. நாளை காலையிலேயே சந்த்ராவைக்கண்டு பேசி அவளுடைய அபிப்பிராயம் இதுவிஷயத்தில் என்னமாகவிருக்கிறதென்பதைக் கேட்டுத்தெரிகிறேன். இன்றையதினம் என்னமோ அவள் முகம் மிகவும் வாடியிருக்கின்றது. வருத்தத்தினால் சோர்வடைந்து இருக்கிறாள்.

**வீர்ய:**—பிரபு கமலசேனா! தாங்கள் ஏதை நினைத்தும் யோசிக்க வேண்டியதில்லை. சந்த்ரா நான் சொல்வதற்கு மாறாக ஒன்றும் செய்யமாட்டாள். மேலும், ஒருவேளை சற்று மாறாகச் சொன்னாலுங்கூட, அவளை அடக்கி ஆளக்கூடிய சக்தி எனக்கு இல்லையா? நான் நிச்சயமாக அவளை உங்களுக்கே விவாஹம் செய்து தருகிறேன். லீலா! நீ இன்றைய ராத்திரியே சந்த்ராவைக் கண்டு அவளிடம் நமது பிரபுவிற்கு இருக்கக்கூடிய பிரேமையைத்தெரிவிப்பாய். இப்பொழுது வருகிற புதன்கிழமையன்று—ஆமாம்; இன்றையதினம் என்ன கிழமை?

**கமல:**— இன்றைக்கு திங்கட்கிழமை.

**வீர்ய:**— என்ன? திங்களா! அப்பொழுது புதன்கிழமை என்றால் மிகவும் சமீபமாயிற்றே! ஆகையினால் வெள்ளிக்கிழமைதான் சரியாகத் தோன்றுகிறது. லீலா! இதோ பார்! வெள்ளிக்கிழமையன்று கலியாணம் நடத்துகிறதாக அபிப்பிராயப்பட்டிருக்கிறேன். என்பதையும் குழந்தையிடம் தெரியப்படுத்து (கமலசேனனைப் பார்த்து) 'பிரபு! உங்களுக்கு வெள்ளிக்கிழமையன்று முகூர்த்தம் நடத்துவதில்

ஆக்ஷேபணையில்லையே. நாம் அதிகமான ஆடம்பரமொன்றும் வைத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால் ருக்மாங்கதன் இறந்துபோன சில நாட்களுக்குள்ளாகவே அதிக ஆடம்பரமாக கல்யாணத்தை நடத்தினால் ஜனங்கள் பலர் பலவிதமாக அவதூர்கள் சொல்லக்கூடும். ஆகையால் ஏதோ சில முக்கியமான சினேகிதர்களை மட்டும் வரவழைத்து கல்யாணத்தை நடத்துவோம். தங்களுக்கு இதில் சம்மதம்தானே? வெள்ளிக்கிழமை நடத்துவதில் தங்களுக்கு சௌகர்யந்தானே?

கமல:—வெள்ளிக்கிழமையா! நாளையதினமே வெள்ளிக்கிழமையாக விருக்கக்கூடாதா? இன்னும் மூன்று தினங்கள் எவ்விதம் கழிக்கப்போகின்றேன்?

வீர்ய:—நிரம்பவும்சரி. வெள்ளிக்கிழமையன்று ஊர்ஜிதம். லீலா! குழந்தை சந்த்ராவைப் போய்ப்பார்! அவளிடம் மிகவும் சாமர்த்தியமாகப்பேசி அவள் மனதைக் கவரவேண்டும். யாரடா அது! படுக்கை போட்டாய் விட்டதா?—பிரபு! நேரம் நிரம்பவும் ஆகிவிட்டது. தாங்கள் போய் வாருங்கள். நானும் நித்திரைக்குச் செல்லுகிறேன்.

**களம் 5.**

**சந்த்ரவதனியின் அறை.**

(ரத்னாகரனும், சந்த்ரவதனியும் பிரவேசிக்கிறார்கள்.)

சந்த்ர:—நாதா! என்ன அதற்குள் போகவேண்டுமென்கிறீர்களே! இப்பொழுது தானே இங்கு வந்தீர்கள். இன்னும் விடியற்காலத்திற்கு நேரம் அதிகமிருக்கிறது. அது வரையாவது தாங்கள் என்னிடம் இருக்கவேண்டாமா?

ரத்னா:—சந்த்ரா! உன்னுடன் இருப்பதைவிட எனக்கு வேறு எங்கு போவதிலும் விருப்பமில்லை. இருந்த போதிலும் மஹாராஜாவின் கட்டளைக்காகத்தான் நான் பயப்படுகிறேன். அதோ பார்! வெள்ளி முளைத்துவிட்டது!

சந்த்ர:—நாதா! அது வெள்ளி அல்லவே. வேறு ஏதோ பிரகாசமான நக்ஷத்திரம். தாங்கள் புஷ்பபுரியை விட்டு வெளி



யேறப்போகிறீர்களல்லவா; அப்பொழுது உங்களுக்கு வழிகாட்டுவதற்காக தெய்வமே அதை உற்பத்திசெய்திருக்கிறார் போலிருக்கிறது. சற்றுநேரம் இங்கு இருந்துவிட்டுப் புறப்படலாம்.

ரத்னா:—இந்த மாதிரி வேறு யார் எனக்கு உபசாரம் செய்யப்போகிறார்கள்! நான் இங்கேயே இருக்கிறேன். அப்படியே பொழுது விடிந்து விட்டாலும் கூட அக்கறையில்லை. எனக்கு எவ்விதத்திலாவது உனது தரிசனம் கிடைத்தால் போதும். அது விஷயத்தில் என் உயிர் போவதானாலும் கூட எனக்கு கவலையில்லை. நான் உன்னுடனே இருக்கப் போகிறேன்.

சந்த்ர;...நாதா! தாங்கள் சொல்வது வாஸ்தவம் தான். அதோ கோழி கூவுகிறது. நான் முதலில் கோழிகூவுகிறதைக் கேட்டேன். நடுசியிலும் கூட கோழிகூவுவது வழக்கமாயிற்றேயென்று மிதமாகவிருந்தேன். பாருங்கள். அதற்குள்ளாக வெளிச்சமாகி விட்டதை. பொழுது விடிந்துவிட்டது என்பதற்குச் சந்தேகமில்லை.

ரத்னா:— உலகத்திற்கெல்லாம் பகல் ஆரம்பிக்கிறது. அப்பொழுது தான் எனக்கு இரவு ஆரம்பமாகிறது. எனக்கு நீதான் உற்சாகம் தருபவள். நான் உன்னைவிட்டுப்போவதென்பது எப்படி முடியும்? ஐயோ இந்தக் கஷ்டத்திற்கு நான் என்ன செய்வது? தெய்வமே! என்னை ஏன் இம்மாதிரிய துக்கத்திற்கு ஆளாயிருக்கின்றனை?

(அஞ்சனாவதி வருகிறாள்.)

அஞ்சனா:—சந்த்ரா!

சந்த்ரா:— அக்கா! என்ன சமாசாரம்?

அஞ்சனா:—உன் தாயார் இன்னும் சற்று நேரத்தில் இங்குவரப்போகிறாள். மற்ற விஷயங்களெல்லாம் ஜாக்கிரதை. உன்னை எச்சரிக்கை செய்யவே இங்குவந்தேன்.

சந்த்ர:— (சன்னலை திறந்து) நாதா—தங்களைப் புறப்படுங்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறதே! நான் எப்படித் தங்கள் பிறிவினையைச் சகிப்பேன்!

ரத்ன:— சந்த்ரா; இங்குவா. (ஒரு முத்தமிட்டு) இதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிரு. இதுதான் உனக்கு எப்பொழுதும் ஆறுதலைக்கொடுக்கக்கூடியது.

சந்த்ர:—நாதா! தாங்கள் தினந்தோறும் தங்களுடைய தேகஸ்திதிக்கு கடிதம் எழுதிக்கொண்டேயிருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் பகல் 10 மணிக்குள் தங்களிடமிருந்து லிகிதத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன். ஒரு நாள் கடிதம் குறிப்பிட்ட நேரத்தில் வாராவிட்டால் மறு நிமிஷமே எனது ஆவி எனதுடலைவிட்டுப் பிரிந்துவிடுமென்பதை மட்டும் நிச்சயமாக நம்புங்கள்.

ரத்ன:— அன்பே!—சந்த்ரா! உனக்கு எவ்விதத்திலெல்லாம் தேறுதல் செய்யக்கூடுமோ, அவ்விதம் எல்லாம் தேறுதல் செய்வேன் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ளாதே! உனக்கு கடிதம் தானே எழுதவேண்டுமென்கிறாய். நீ குறிப்பிட்டவேளையில் தினம் உனக்கு என்னிடமிருந்து கடிதம் கிடைக்கிரதா இல்லையாவென்று பாரேன்! நான் போய் வரவா! பிரியமான விடை கொடுத்து அனுப்பு பார்ப்போம்.

சந்த்ர:— நாதா? தாங்கள் கீழே இறங்க இறங்க என் மனக்கிலேசமும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. நாதா! ஒரு வார்த்தை. நாம் இனி கட்டாயம் சந்திக்கக்கூடுமோ? உங்களுக்கு என்ன தோன்றுகிறது? சொல்லுங்கள்.

ரத்ன:— அதற்கென்ன சந்தேகமிருக்கிறது? கட்டாயம் சந்திப்போம். தற்காலம் ஏதோ நம்முடைய க்ருஹசாரம் நம்மைச் சிறிதுகாலம் பிறித்து வைக்கின்றது. இதனால் நாம் மறுபடியும் சேரும்பொழுது இரட்டிப்பான சந்தோஷம் ஏற்படுமென்பதிற் சந்தேகமில்லை.

சந்த்ர:— அதெல்லாம் வாஸ்தவம்தான். இருந்தபொதிலும், நாதா!, எனக்கு என்னமோ கவலையாகவேயிருக்கின்றது. சில சமயங்களில் நாம் இருவரும் இனி ஒருவரையொருவர் பார்க்கமுடியாதென்றுகூடத் தோன்றுகிறது.

ரத்ன:— சந்த்ரா! வீணாக மனதைப் புண்படுத்திக்கொள்ளாதே. தெய்வம் ஒன்று இருக்கிறது. எல்லாம் சரிவர



நடக்கும். நான் போய் வருகிறேன். உனது தேகஸ்திதியை நன்றாக கவனித்துக்கொள். வீண் கவலைகள்கொண்டு ஏங்காதே. நான் போய் வரவா? ... ... ... ... (போகிறான்.)

சந்த்ர:— தெய்வமே! நீயல்லாது எனக்கு வேறு யார் ஆறுதல் செய்யக்கூடும்! அம்பிகா? நீதான் எனது நாதனை என்னிடம் கூடிய சீக்கிரம் சேர்ப்பிக்கும்படி அருள் புரியவேண்டும்.

(வெளியிலிருந்து சப்தம் கேட்கிறது.)

லீலா:— சந்த்ரா! தூங்குகிறாயா, என்ன? விடிந்து நாழிகை ஆகிவிட்டது. எழுந்திரு.

சந்த்ர:— யார் என்னை அழைத்தது? எனது தாயாருடைய சப்தம் மாதிரி கேட்கின்றதே. என்ன காரணம், இவ்வளவு அதிகாலையில் எனதறையைத் தேடி வரும்படியாக இருக்கக்கூடும்? சரி. இப்பொழுது தெரியும் பார்ப்போம்.

(லீலாவதி பிரவேசிக்கிறாள்.)

லீலா:—சந்த்ரா! என்ன உன்முகம் இவ்வளவு வாடியிருப்பானேன்!

சந்த்ரா:—அம்மா! உடம்பே சரியில்லை.

லீலா:—என்ன உடம்பு அடி உனக்கு? ருக்மாங்கதனை நினைத்து ஒருவேளை ரொம்பவும் வருத்தப்படுகிறாயா? அதற்கு நாம் என்ன செய்யலாம்? ஏதோ வரக்கூடாததெல்லாம் வந்துவிட்டது. இனிமேல் எப்படியாவது மனதைச் சமாதானப்படுத்திக் கொள்ளவேண்டுமே ஒழிய வருத்தப்பட்டுக்கொண்டேயிருப்பது புத்திஹீனமன்றோ! கவலையை விட்டொழி.

சந்த்ரா:—என் அம்மா, அவ்விதம் சொல்கிறாய்? ருக்மாங்கதன் இறந்து நாளாகி விட்டதா, என்ன? அதற்குள் கவலை நம்மை விட்டு எவ்விதம் போய்விடும்?

லீலா:—நாட்களாகிவிட்டதென்று சொல்லவில்லை. "ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ?" என்று சொல்வது போல, நாம் எவ்வளவு அழுதபோதிலும், இனிமேல் ருக்மாங்கதன் திரும்பவும் [illegible] [illegible] வரப்போகிறானா? ஒருக்காலுமில்லை [illegible]

அதிகமாகக் கவலைப்படுவதில் பிரயோஜனமில்லை யென்று சொன்னேன்.

சந்த்ர:—என்னமோ அம்மா! எனக்கு அவ்வளவு சீக்கிரம் துக்கம் போய்விடாது.

லீலா:—ஒரு வேளை ருக்மாங்கதனைக் கொன்றபாதகன் உயிருடன் இருக்கிறானே என்பதை நினைத்து வருந்துகிறாய் போலிருக்கிறது.

சந்த்ர:—எந்தப் பாதகன் அம்மா!

லீலா:—அவன்தானடி! அந்தச்சண்டாளன் ரத்னாகரன்.

சந்த்ரா:—ஏன் அம்மா இந்தமாதிரி மிகவும் கொடூரமான வார்த்தைகளைச் சிலவிடுகிறாய்? அவர் சண்டாளனுமில்லை; பாதகனுமில்லை. அவர்மட்டும் மிகவும் சுகத்தை யனுபவிக்கிறானென்று நினைக்கிறாயா, என்ன?

லீலா:— அவனுக்கு என்ன கேடு! அவன் கெட்ட கேட்டுக்கு சுகம் வேறு வேண்டுமோ? அவனைப் பழிக்குப்பழி வாங்க வேண்டாமா?

சந்த்ர:—ஆம் அம்மா! பழி வாங்கும்பொழுது சொல். அதை நானே என் கையால் செய்கிறேன். அவருடைய முகத்தில் உமியவேண்டும் போலிருக்கிறது.

லீலா:— அதற்கெல்லாம் சமயம் வரும். அப்பொழுது நீ செய்யலாம்.

சந்த்ர:—நான் அம்மாதிரி சமயத்திற்குத்தானே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். "ரத்னாகரன்" இல்லாத சமயத்தில் அவரைப்பற்றி அவதூறு பேசுவது நியாயமில்லை. அவரை எங்கிருந்தாவது பிடித்து வந்து என் முன் நிறுத்தி, எனது ஆத்திரத்தைத்தீர்த்து வைப்பவர்களுக்கு நான் என்ன ப்ரத்தியுபகாரம் வேண்டுமானாலும் செய்யத் தயாராகவிருக்கிறேன்.

லீலா:— குழந்தாய்! உனக்கு எப்பொழுதும் ருக்மாங்கதன் மீது அந்தரங்கப்ரீதி உண்டென்பது எங்கட்கெல்லாம் நன்றாகத்தெரியும். சரி. போனது போகட்டும். நான் உனக்கு வேறு நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேன்.



சந்த்ர:— அதென்னது அம்மா! சீக்கிரமாகச் சொல்.

லீலா:— உன்னுடைய அப்பாவுக்கு உன்பேரில் விசேஷப்ரீதி. குழந்தைக்கு எப்படியாவது சந்தோஷத்தையும், சுகத்தையும் கொடுக்கவேண்டுமென்று கருதி, அதி சீக்கிரமாகவே உன்னைப் பாக்யவதியாகச் செய்யப்போகிறார்.

சந்த்ர:— அதென்ன அம்மா! நீ சொல்வதெல்லாம் எனக்கு விந்தையாகவிருக்கின்றது. இதுவரை எனக்கு இல்லாத பாக்கிய மென்ன? இப்பொழுது என்ன பாக்கியம் அதிகமாக ஏற்படப்போகின்றது?

லீலா:— இதோபார். இன்றையதினம் செவ்வாய்க்கிழமையா! இன்னும் இரண்டு நாட்கள் கழிந்து வெள்ளிக்கிழமை வருகின்றதா? அன்று உன்னை நம்மூரில் கமலசேனன் என்று ஒரு பிரபு இருக்கிறார், பார்; அவருக்கு விவாஹம் செய்து வைப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்.

சந்த்ர:— என்ன? விவாஹமா? அம்மா! எனக்கா விவாஹம்? வருகிற வெள்ளிக்கிழமையன்றா! கமலசேனனுக்கா! எல்லாம் நன்றாகவிருக்கிறது. என்ன சொல்லப்போகிறாளென்று பார்த்தேன். ருக்மாங்கதன் இறந்து இரண்டு நாட்களாகவில்லை, கமலசேனன் யாரென்பதுகூட எனக்கு தெரியாது. இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு கலியாணமாமே! நல்ல வேடிக்கை. அம்மா! இந்தமாதிரிக் கலியாணம் பண்ணிக்கொள்வதைவிட கலியாணம்செய்து கொள்ளாமல் ஒரு கன்னியாகவே எனது வாழ்நாட்களைக்கழிப்பேன்! இல்லாவிட்டால் ரத்னாகரனையாவது மணம் புரிவேனே ஒழிய அந்தக் கமலசேனனை ஒருக்காலும் மணவேன்.

லீலா:— எனக்கென்னம்மா! இதோ உன் தகப்பனாரே நேரில் வருகிறார். அவரிடம் நீயே எல்லாம் தெரிவித்துக்கொள்.

(வீர்யவர்மனும், அஞ்சனனும் பிரவேசிக்கிறார்கள்)

வீர்ய:— சந்த்ரா! என்ன! நீ என்னமோ [illegible] பட்டுக்கொண்டே யிருப்பதாகத் [illegible]

எங்களுக்கில்லாதது உனக்குமட்டும் என்ன வந்துவிட்டது? பைத்தியமே. அழாதே, சந்தோஷமாகவிரு. நாங்களெல்லோரும் உன்னை எவ்விதத்திலாவது சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றிருக்க நீ இவ்வித பிடிவாதத்துடனிருப்பது நன்றாக வில்லை. (மனைவியைப்பார்த்து) ஏனடி! உன்னைத்தானே! குழந்தையிடம் நாம் உத்தேசித்திருக்கும் கார்யத்தைத் தெரிவித்தாயா?

லீலா:— எல்லாம் தெரிவித்தாய்விட்டது. இப்பொழுது நீங்கள்தான் வந்திருக்கிறீர்களே. நீங்கள் சொல்லுகிறது தானே.

வீர்ய:— என்னமோ நீ ஒருபக்கம் முகத்தைத் தொங்கப்போடுகிறாய். சந்த்ரா ஒருபக்கம் முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு நிற்கிறாள்! என்ன சமாசாரம்? நீ சொல்லியதற்கு என்ன பதில்சொன்னாள்? அவளுக்கு சம்மதம் தானே! ஒரு பெரிய பிரபுவிற்கு வாழ்க்கைப்படமாட்டேனென்று யார்தான் சொல்லுவார்கள்? அவளுடைய த்ருப்திக்கு ஒன்றும் குறைவிராதென்றே நினைக்கிறேன்.

சந்த்ர:— அம்மா! எதற்காக இம்மாதிரிப் பேசிக்கொண்டே போகிறீர்கள்? ஒரேவார்த்தை. எனக்கு இந்த விவாஹத்தில் கொஞ்சம்கூட சம்மதமில்லை.

வீர்ய:— என்னசொன்னாய்! சீ, முட்டாள்! இம்மாதிரித் தகப்பனாருக்கு எதிர்த்துப் பேசுவதற்காகவா நான் குழந்தையில்லையென்று தவித்து, உன்னை உன்தாயார் பெற்ற நிமிஷம் முதல் இதுகாறும் இவ்வளவு ஆதரவுடன் வளர்த்து வந்தேன்! பெண்களுக்கும் பேய்களுக்கும் வித்தியாசம் இல்லை யென்பார்கள். அது என் சம்பந்தப்பட்டமட்டில் வாஸ்தவமாக இருக்கிறது. அடி, நன்றிகெட்ட நீலி! குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்பே! நான் சொல்லும்படி நீ கேட்காமல் போகும் பக்ஷத்தில் இந்தக்ஷணமே இந்த வீட்டுவாயிலைவிட்டு நீ வெளியேபோய்விடு. இனி நான் உனக்குத் தகப்பனுமில்லை, நீ யெனக்குப் பெண்ணுமில்லை. தெரிகிறதா?.



லீலா:— அவளா! அவள் பெரிய ஸாகசக் காரியாயிற்றே!

சந்த்ர:— அப்பா! இதோ தயவாக ஒரு வார்த்தை சொல்லுகிறேன். அதைச் சற்று பொறுமையுடன் கேளுங்கள்.

வீர்ய:— சீ! போ! பிசாசே! நாளைக்கழிந்து வியாழக்கிழமைக்குள்ளாக கமலசேனனை மணம்புரிவதாக ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் என்னிடம் பேசு. இல்லாவிட்டால் என் முகத்தில் விழிக்கவேண்டாம். (தன்மனைவியைப் பார்த்து) இப்படி ஒரு கொடும்பாவி பிறக்கவில்லை யென்று கடும் தபஸ் செய்தாயே. உன் தவத்தின் மஹிமையைப் பார்த்தாயா? கடைசிவரை மலடாகத்தானே இருந்து தொலைக்கவேண்டும்! இந்தப் பாபியைப் பெற்றவயற்றில் பிரண்டையை அறைத்து கட்டிக்கொள்ளலாம்.

லீலா:— சரிதான். எல்லாம் கிடக்க என்மீது ஏன் கோபித்துக்கொள்ளுகிறீர்கள்?

அஞ்சனா:— நானும் அதைத்தான் சொல்லுகிறேன். நீங்கள் இவரும் குழந்தையை ஏன் இந்தமாதிரி அநியாயமாய்க் கோபிக்கிறீர்கள்?

வீர்ய:— சீ, கழுதை! நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நீ ஒன்றும் பேசாதே யென்று உனக்கு எத்தனை தடவை சொல்லுவது?

அஞ்சனா:— நல்லது. ஊரிலிருப்பவர் வாயையெல்லாமூட வேண்டுமென்று சொல்லமுடியுமா?

வீர்ய:— அதனப்பிரசங்கி! மேலும்மேலும் பேசிக்கொண்டே போகாதே. நிறுத்து.

லீலா:— இருந்தாலுமே உங்களுக்கு கோபம் வந்துவிட்டால் தலைகால் தெரிகிறதில்லை.

வீர்ய:— பின் என்ன! இவளை நாம் எவ்வளவு ஆதரவுடன் வளர்த்து வந்தோம். அப்படியிருக்க, நாம் சொல்வதைக் கேளாமலிருப்பது தானா அழகு? என்ன தைர்ய[illegible] பதில் சொல்கிறாள் பாரேன்? "தனக்கு வயதாக[illegible]

தான் முன்னதாகவே பிரியப்படவில்லையாம்; அப்படி பிரியப்படாத விஷயத்தில் தனக்கு ப்ரீதி ஏற்படாதாம்; தான் விவாஹம் செய்துகொள்ள மாட்டாளாம்" இப்படித்தானா சொல்வது? சீ! இம்மாதிரிக் குழந்தைகள் இருந்தாலென்ன, இறந்தாலென்ன? கழுதை கெட்டு எங்காவது தொலையட்டும். சோறற்றுத்திண்டாடி, வீடுவீடாகப் பிச்சையெடுத்து இரந்து குடிக்கட்டும். நான் இனிமேல் இவள் முகத்தில்கூட விழிக்கப்போகிறதில்லை.

(போகிறான்)

சந்த்ர:— தெய்வமே! என்னென்று சொல்வது உனது கொடுமையை! அம்மா! நீயாவது என்மீது சற்று இரங்கமாட்டாயா? இக்கல்யாணத்தைச் சிறிதுகாலம் நிறுத்தி வைக்கக்கூடாதா? ஒரு மாதம், இல்லாவிட்டால், ஒருவாரம் தள்ளிவையேன். அதுகூடவா முடியாது? அதுவும் முடியாவிட்டால், என்னையும் ருக்மாங்கதன் பக்கத்தில் குழிதோண்டி அங்கே தள்ளிப்புதைத்துவிடு.

லீலா:— எனக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் உன்பாடு, உன் தகப்பனார்பாடு. என்னை ஏன் தொந்திரவு செய்கிறாய்?

(போகிறாள்)

சந்த்ர:— கடவுளே! அக்கா அஞ்சனா! இந்தக்கொடுமைகளுக்கெல்லாம் ஒரு அளவில்லையா? எனக்கு கலியாணமாகி ட்டதே. என் பர்த்தா இப்பொழுதுதானே என்னைவிட்டுப் பிரிந்திருக்கிறார். நான் அவரை மறப்பதும் இன்னொருவரை விவாஹம் செய்துகொள்வதும் இனிமேல் இந்த ஜன்மத்திலா நடக்கப்போகிறது? அக்கா அஞ்சனா! நீ எப்பொழுதும் எனக்கு யுக்தியெல்லாம் சொல்வாயே! இப்பொழுது இந்தசந்தர்ப்பத்தில் எனக்குத் தப்பிப்பிழைப்பதற்கு ஒரு வழி சொல்லமாட்டாயா?

அஞ்சனா:— சந்த்ரா! இதோபார். ரத்னாகரனோ இங்கில்லை. அவரைக் கல்யாணம் செய்துகொண்டாலே வொழிய, அவருடன், வீடும், வாசலும், சொத்தும், சுகமும், வைத்து அனுபவிக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறாயா? எல்லாம் திருட்டுத்தனமாக அவரைப் பார்த்ததும், திருட்டுத்தனமாவே மணம் புரிந்ததையும் தவிர வேறு என்ன நடந்தது? ஆகையால் நான் சொல்வதைக்கேள். இந்தக் கமலாகரன் சாமான்யமானவனன்று. ரத்னாகரனையும்விட பலவிதங்களிலும் மேலானவன். ஆகையினால் கமலாகரனையே மணம் புரிந்துகொள். ரத்னாகரனைப்பற்றி நினைப்பதை விட்டுவிடு; அப்படி நினைப்பதிலும் பயனில்லை.



சந்த்ர:— என்ன அக்கா! நீ என்ன முழுமனத்தினால்தானா இவ்வார்த்தைகள் கூறுகின்றாய்?

அஞ்சனா:— அதற்கென்ன சந்தேகமிருக்கின்றது?

சந்த்ர:— இனி வேறென்ன கொடுமைவேண்டும்! நீ ஒருவள்தான் பாக்கி என்றிருந்தேன். நீயும் இந்தமாதிரிச் சொல்லிவிட்டாய். சரி. நான் யோகாநந்தர் ஆசிரமத்திற்குப் போகிறேன். அவரிடம் என்னுடைய குற்றங்களையும், நான் செய்திருக்கும் பாபங்களையும் சொல்லி ஒப்புக்கொண்டு, தெய்வத்தினுடைய மன்னிப்பையும், அவரது திருவருளையும்பெற்று, எனது வாழ்நாட்களை ஒரு துறவியாகவே கழிப்பதென்று தீர்மானித்துவிட்டேன்.

அஞ்சனா:— இப்பொழுது சொன்னதுதான் சரி. அதுவே நல்லயோசனை.

(போகிறாள்)

சந்த்ர:— இந்த அஞ்சனா முதல் எனது நிலைமையைப் பற்றியும், எனது பர்த்தாவைப்பற்றியும் இம்மாதிரி அலக்ஷ்யமாகப் பேசும்படி ஆகிவிட்டது பார்த்தாயா? இருக்கட்டும். இதெல்லாம் காலத்தின் கொடுமையேயன்றி வேறொன்றுமில்லை. எது எப்படியிருந்தபோதிலும் யோகாநந்தர் ஆசிரமத்திற்குப் போகிறேன். அவர் எப்படியிருந்தாலும் ஒரு யுக்திசொல்வார். அவராலும் ஒன்றும் செய்யமுடியாவிட்டால், தற்கொலையைத்தான் கடைசிமுறையாகக் கைகொள்ளவேண்டும். சரி. அவரைப்போய்ப் பார்க்கிறேன்.

(போகிறாள்)

## அங்கம் நான்கு — களம் 1

(யோகாநந்தர் ஆசிரமம்)

**யோகாநந்தர்:**— வெள்ளிக்கிழமையா, மிகவும் சீக்கிரமாயிற்றே.

**கமலசேனன்:**— வீர்யவர்மன் அவ்வளவு அவசரப்படுகிறார். நம்மால் அவருடைய ஏற்பாட்டிற்கு மாறாக ஒன்றும் செய்யமுடியவில்லை.

**யோகா:**— அந்தப்பெண்மணியினுடைய சம்மதத்தைப்பற்றி நீ கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை என்கிறாய். ஆனால் விவாஹதினமும் குறிப்பிட்டு விட்டதாகவும் தெரிவிக்கிறாய். என்ன இதெல்லாம் ரொம்பவும் ஆச்சரியமாகவிருக்கிறதே.

**கமல:**— அதெற்கென்ன செய்யலாம். ருக்மாங்கதனை நினைத்து நினைத்து அந்தப்பெண்மணி வருந்துகிறாள். ருக்மாங்கதன் இனிமேல் வரப்போகிறானா? இது விஷயத்தை எல்லாம் நம்மால் தெரியப்படுத்துவதற்கு சாவகாசம் ஏற்படவில்லை. மேலும் அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக விருக்கும்பொழுது அவளிடம் என்காதலைப்பற்றித் நான் எவ்விதம் தெரிவிப்பது?

**யோகா:**— சரி. சந்திராவே இதோ வருகிறாள். அவள் என்ன சொல்கிறாளென்று கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(சந்த்ரவதனி பிரவேசிக்கிறாள்)

**கமல:**— மிகவும் சந்தோஷமாயிற்று, உன்னை இவ்விடத்தி கண்டது.

**சந்த்ர:**— உங்களுக்கு சந்தோஷத்திற்கென்ன குறைவு?

**கமல:**— உன்னை விவாகம் செய்துகொள்வதென்றால் யாருக்குத்தான் சந்தோஷமிராது?

**சந்த்ர:**— எனக்கு இனிமேல் கலியாணம் ஒரே நாளில்தான்.

**கமல:**— ஏன்? உனக்கு என்னை கலியாணம்செய்துகொள்ள சம்மதம் தானே?



**சந்த்ர:**— என் சம்மதத்தை எல்லாம் இப்பொழுதே தெரிந்து என்ன செய்யப்போகிறீர்கள்?

**கமல:**— வீணாக எப்பொழுதும் அழுதுகொண்டிருந்து உன் முகத்தினுடைய அழகைக் கெடுத்துக்கொள்ளாதே.

**சந்த்ர:**— எனது அழகைப்பற்றிய கவலை தங்களுக்கு வேண்டியதில்லை.

**கமல:**— சரி. நாளைக்குள் மனதை உறுதிப்படுத்திக்கொள். நாளை கழிந்தால் நான் உன்னை இந்தமாதிரி கெஞ்ச வேண்டி ஏற்படாது. இங்கே என்னிடம் நேராக உன் பிரீதியைக் காட்டாவிட்டாலும், ஸ்வாமி மூலமாகவாவது தெரியப்படுத்து. (போகிறான்)

**சந்த்ர:**— ஸ்வாமீ! கதவைச்சாத்துங்கள். எனக்கு வந்திருக்கும் ஆபத்தை நான் என்னென்றுரைப்பது!

**யோகா:**— குழந்தாய்! எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டேன். என்னமோ உனக்கு வெள்ளிக்கிழமையன்று கலியாணமாமே! காரியங்களெல்லாம் நன்றாகவிருக்கிறது!

**சந்த்ர:**— ஸ்வாமி! நான் சொல்வதற்கு முன்னதாகவே தாங்கள் எல்லா சங்கதிகளையும் கேட்டுத் தெரிந்திருக்கிறீர்களென்பது நல்லதாகிவிட்டது. ஏனென்றால் தாங்கள் இது விஷயமாக ஏதாவது யோசனைகள் செய்திருக்கக்கூடும். எனக்கு இந்த ஆபத்தினின்றும் தப்பி வெளியேறுவதற்கு தாங்கள் ஏதாவது யோசனை சொல்லுங்கள். தாங்கள் எனக்கு இத்தருணத்தில் உதவிபுரியாவிட்டால் எனக்கு வேறு கதி ஒன்றுமில்லை. தாங்கள்தான் எனக்கும் ரத்னாகரனுக்கும் விவாகம் செய்து வைத்தீர்கள். ஆகவே, அந்தக் கைங்கர்யத்திற்கு விரோதமாக எதுவும் நடக்காதபடி யிருக்கவேண்டிய யோசனைகள் தாங்கள்தான் சொல்லவேண்டும். தங்களுக்கும் யாதொரு சூழ்ச்சியும் தோன்றாமற்போனால், இதோ பாருங்கள் என் கையில் வைத்திருக்கும் கத்தியை. இதனால் என்னைக் குத்திக்கொண்டு தங்கள் பாதத்திலேயே என் பிராணனைப்

போக்கிக்கொண்டு விடுவதான தீர்மானத்துடன் வந்திருக்கிறேன். ஆகையால் சீக்கிரமாகவே ஒரு யுக்திசொல்லுங்கள்.

**யோகா:—** குழந்தாய்! இப்பொழுது வந்திருக்கும் ஆபத்தினின்றும் உன்னை தப்புவிப்பதற்கு ஓரே ஒருவழிதானிருக்கிறது. ஆனால் அது மிகவும் கொடூரமான வழி என்பதைப்பற்றித்தான் யோசனை செய்தேன். நீயோவெனில் கமலாகரனுக்கு வாழ்க்கைப்படுவதைப் பார்க்கிலும் பிராணனையே போக்கிக்கொண்டு விடுவதாகச் சொல்லுகிறாய். அவ்வளவு திடபுத்தியிருக்கும் பக்ஷத்தில், இறப்பதற்கு கிஞ்சித்தும் அஞ்சாதவளாயின், நான் இப்பொழுது சொல்லப்போகும் முறையினும் பயப்படவேண்டியது ஒன்றுமில்லை. ஏனென்றால், நான் சொல்லும் முறைப்படி நீ சிறிதுகாலம் இறந்தவள்போல் நடிக்கவேண்டிவரும். அவ்வளவு மட்டுமேதான்.

**சந்த்ர:—** ஸ்வாமீ! அதோ அந்த மதில் சுவர் தெரிகிறதே அதினின்றும் அப்பால் தாண்டவேண்டுமென்றாலும் தயார். அல்லது ஒரு சர்ப்பத்தை குடத்தில் அடைத்து அக்குடத்தில் கையிடவேண்டுமென்றாலும் ஆக்ஷேபமில்லை. அல்லது சிங்கம், கரடி, புலிகள் வசிக்கும் குகைக்குள் புகுந்துவர வேண்டுமென்று சொன்னாலும் செய்கிறேன். கொடூரமான விஷத்தைப் பானம் செய்ய வேண்டுமென்றாலும் ஆக்ஷேபமில்லை. உயிருடன் குழிதோண்டி புதைக்கப்போவதாகச் சொன்னாலும், அவ்விதத் தண்டனைக்கும் தயார். எப்படியாவது கமலாகரனுக்கு என்னைக் கட்டாய விவாஹம் செய்விக்காமலும், எனது நாதனுடைய மனது புண்படும்படியான நடையில் யாதும் நடைபெறாமலுமிருக்கும்படி தாங்கள் யுக்தி ஒன்று சொன்னால் போதுமானது. தாங்கள் சொல்லியபடி அடியாள் நடக்க காத்துக் கொண்டிருக்கிறேன்.

**யோகா:—** சரி. அப்படியானால் நீ இந்தப் புட்டியை வாங்கிக் கொள். நேராக வீடுசென்று, கமலாகரனை விவாகம்



செய்துகொள்ள உனக்குச் சம்மதமென்று தெரிவி. கலியாணக் காரியங்களெல்லாம் நடக்கட்டும். ஆனால், நாளை வியாழக்கிழமையன்று இரவு உனது அறையில் ஒருவரும் வராமற் பார்த்துக்கொள். நீமட்டும் தனியாகப் படுத் தூங்கப்போவதாகச் சொல்லிவிடு. படுத்துக்கொள்ளு முன்பாக அந்தப் புட்டியிலிருக்கப்பட்ட மருந்து பூராவையும் பானம் செய்துவிடு. அது விஷமில்லை. நீ பயப்படாதே. ஆனால் நாறு நாழிகை நேரம்வரை உன்னுடைய நாடிகளை வெளிக்காட்டாமல் உள்ளடக்கிக்கொண்டு பார்ப்பவருக்கு நீ இறந்ததுபோலவே தோன்றும்படி செய்யும். தேகமெல்லாம் ஜில்லென்று குளிர்ந்துபோய்விடும். மறுநாட்காலையில் உன்னைத் தேடிக்கொண்டு வரும்பொழுது அம்மாதிரியான கோலத்தில் காண்பார்கள். இனிமேல் மேற்கொண்டு சொல்லவா வேண்டும்? அவ்வளவுதான். உன்னை இறந்த தாகவே நினைத்து நமது தேசத்து ஆசாரப்படி பிரேதத்தை நன்றாக அலங்கரித்து, முகத்தை மூடாமல், ஒரு சப்பரத்தில் வைத்து, உன் முன்னோர்களை அடக்கம் செய்திருக்கிற கல்லறைகளடங்கிய தோட்டத்தில் நடு மண்டபத்தில் உன்னைக் கொண்டுசேர்த்து அடைத்துவிட்டுப் போய் விடுவார்கள். நான் இதன் மத்தியில் ரத்னாகரனுக்கு கடிதம் எழுதி, இங்கு நம்முடைய யோசனையின்பேரில் நடந்திருக்கும் விஷயங்களை எல்லாம் தெரியப்படுத்துவேன். அவனும் நேராக அந்தப் பூந்தோட்டத்திற்கு வந்து மண்டபத்தைத்திறந்து, உன்னை அழைத்துக்கொண்டு, புஷ்பபுரியைவிட்டு வெளியேறிவிடுவான். இவையெல்லாம் நடக்க வேண்டுமென்றால், பார், நீ முதலில் என்னை நம்பவேண்டும்; அதற்குப்பிறகு, நான் சொல்லியபடியெல்லாம் நடந்து, இந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டும். என்ன சொல்லுகிறாய் இப்பொழுது?

**சந்த்ர:—** ஸ்வாமீ! நானா இதற்கெல்லாம் பயப்படுகிறவள்? தங்கள்பேரில் நம்பிக்கை வைக்காமற்போனால், பின் எவரை நான் நம்புவது? அம்மாதிரி அவநம்பிக்கைகொண்டால்

அதனால் ஏற்படும் பாபத்தைத்தான் எங்கு தொலைப்பேன்? ஸ்வாமீ! தாங்கள் என்னை இம்மாதிரி வருத்தப்படும்படியான கேள்விகளைக் கேட்கலாமா? எவ்விதத்திலாவது எனக்கு சம்பவிக்கவிருக்கும் அவமானத்திலிருந்து என்னைத் தப்பிவைக்கவேண்டியது தங்கள் பொறுப்பில்லையா? தாங்கள் சொல்லிய ஔஷதத்தை இப்பொழுதே தாருங்கள். நான் அதைப் பெற்றுக்கொண்டு எனது வீடுபோய்ச் சேருகிறேன்.

**யோகா:—** குழந்தாய்! இந்தா; இந்தப்புட்டியை எடுத்துக்கொள். தைரியமாகவிரு. தெய்வத்தின்பேரில் பாரத்தைப்போட்டுவிட்டு, உன்வேலையைச்செய்ய ஆரம்பிப்பாய்.

**சந்த்ர:—** அப்படியே ஆகட்டும்! தங்களிடம் அடியாள் விடைபெற்றுக் கொள்கிறேன். தங்களுடைய அனுக்ரகம் பூர்ணமாக எனக்கு இருக்குமாக! (போகிறாள்)

## களம் 2.

### வீர்யவர்மன் மாளிகை.

(வீர்யவர்மன், லீலாவதி. அஞ்சனா, இன்னும் சில வேலைக்காரர்கள் பிரவேசிக்கிறார்கள்)

**வீர்ய:—** யாரடா அது? சேவகா! இங்கேவா. இன்னும் ஒரு நாள் தானிருக்கிறது கலியாணத்திற்கு. விசேஷமான ஆடம்பரங்கள் வேண்டியதில்லை என்றாலும் சில முக்கியமான அம்சங்கள் வேண்டியது அவசியம். ஒரு சிறு கொட்டகை நாளை சாயங்காலத்திற்குள் போட்டுவைக்க வேண்டும்.

**வேலையாள்:—** அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்

**வீர்ய:—** அதுமட்டுமில்லை. சுமாராக வாசிக்கக்கூடிய ஒரு நாதஸ்வர வித்வானைச்சட்டம் செய்யவேண்டும்.

**வேலை:—** நம்மவீட்டிற்கு வழக்கம்போல் ஸேவிக்கப்பட்ட பக்கிரிசாமியைத்தான் திட்டம் செய்யவேண்டும்.



**வீர்ய:—** சரி. நல்ல நளபாகமாகச் சமையல் செய்யக்கூடியவர்களாய் இருபது சமையற்காரர்களை ஏற்பாடு செய்யவேண்டும். மற்ற எந்தவித ஆடம்பரமில்லாவிட்டாலும், விருந்து அயிட்டத்தில் குறைவே வைக்கக்கூடாது. விருந்திலும் யாவரும் குறைகூறாமலிருக்கும்படி பாகம் செய்யவேண்டும்.

**வேலை:—** ஸ்வாமீ! தாங்கள்சொல்லியவற்றை எல்லாம் நான் இதோமுடித்துவிட்டு வருகிறேன். (போகிறான்)

**வீர்ய:—** என்னமோ! எல்லாம் ரொம்பவும் அவசரமாக நடத்த வேண்டியதாகிவிட்டது. இருக்கட்டும். குழந்தை சந்த்ரா எங்கே! ஓகோ! யோகாநந்தர் ஆசிரமத்திற்குப் போயிருப்பதாக அஞ்சனா சொன்னாளே. எப்படியாவது ஸ்வாமி அவளுக்கு நல்ல புத்திமதி சொல்லியனுப்புவார் என்பதிற் சந்தேகமில்லை.

**அஞ்சனா:—** ஸ்வாமீ! சந்த்ரா அதோ வருகிறாள்.

(சந்த்ரவதனி பிரவேசிக்கிறாள்)

**வீர்ய:—** சந்த்ரா! எங்கேபோயிருந்தாய்? வெகுநேரமாக உன்னைக் காணவில்லையே.

**சந்த்ர:—** அப்பா! யோகாநந்தருடைய ஆசிரமத்திற்குப்போயிருந்தேன். அவர் இங்கே நடந்த சமாசாரத்தை எல்லாம் கேட்டு அறிந்தார். அதன்பேரில் என்னை ரொம்பவும் கண்டித்து, நான் செய்ததெல்லாம் தவறு என்றும், உடனே உங்கள் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும், தாங்கள் சொல்லுகிறபடியேதான் நடக்கவேண்டுமென்றும், போதித்தார். அதன்பேரில் உடனே திரும்பிவந்து விட்டேன். இதோ தங்களை நமஸ்கரிக்கிறேன். (பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கிறாள்) அடியாள் சிறுதனமாகச் சொல்லியதைத் தாங்கள் மன்னிக்கவேண்டும்.

**வீர்ய:—** குழந்தாய்! எழுந்திரு. உனக்கு இந்த மட்டிலும் புத்திவந்ததைப் பற்றி ரொம்பவும் சந்தோஷமடைந்.

தேன். அஞ்சனா! நீபோய் பிரபு கமலாகரனை இங்கு அழைத்துவா. சந்திராவினுடைய வாயிலிருந்து அவரைக் கலியாணம் செய்துகொள்ள இஷ்டமென்பதை அவர் கேட்டு ஆனந்திக்கட்டும்.

**சந்த்ர:**— அப்பா! பிரபு கமலாகரரும், யோகாநந்தர் ஆசிரமத்திற்கு வந்திருந்தார். அங்கு நாங்களிருவரும் சந்தித்தோம். சாதாரணமாக ஒரு ஸ்திரீ தன்னுடையகாதலனிடம் தனக்குள்ள காதலை மற்றவர்கள் முன்னிலையில் எம்மட்டிற்குத் தெரியப்படுத்தலாமோ, அந்த அளவிற்கு நானும் எனது காதலை அவரிடம் தெரியப்படுத்திவிட்டேன்.

**வீர்ய:**— அப்படியா! ரொம்ப சந்தோஷம். லீலா! பார்த்தாயா அந்தமஹான் யோகாநந்தருடைய சாமர்த்தியத்தை! எவ்வளவோ பிடிவாதமாகவிருந்த நமது சந்திராவினுடைய மனதை ஒரு நொடிப்பொழுதில் மாற்றிவிட்டார். பார்! அதல்லவோ தபசின் மகிமை!

**சந்த்ர:**— அஞ்சனா! நீ என்னுடன்வா. எனதறைக்குப்போய் எனக்குவேண்டிய ஆடையாபரணங்களை யெல்லாம் எடுத்துத் தந்து எனக்கு வேண்டிய சிங்காரங்களெல்லாம் செய்யவேண்டும்.

**லீலா:**— என்டீ! அதற்கென்ன இப்பொழுதே அவசரம்? எல்லாம் வெள்ளிக்கிழமையன்றுதானே வேண்டும்.

**வீர்ய:**— உனக்கென்ன இதைப்பற்றிக் கவலை? நீ சும்மாவிரு. அஞ்சனா! நீபோய் அவளுக்குவேண்டிய உதவிகளைச்செய்.

(அஞ்சனாவும், சந்த்ராவும் போகிறார்கள்)

**லீலா:**— நடுராத்திரி ஆகிவிட்டது. இன்னும் ஒரே நாள் தானிருக்கிறது. அதற்குள் நாம் எல்லா சங்கதிகளையும் எவ்வாறு செய்யப்போகிறோமோ?

**வீர்ய:**— நீ ஒன்றும் கவலைப்படாதே. இன்று ஒரு நாளும் நான் விழித்துத்தான் தீரவேண்டும். நான் போனால்தான் எல்லாக்காரியங்களும் சரிவர நடக்கும். நானே



போய் பிரபு கமலாகரனையும் கண்டு எல்லாச்சங்கதிகளையும் தெரிவிக்கிறேன். எப்படியிருந்தபோதிலும் இம்மட்டிலாவது சந்த்ராவினுடைய பிடிவாதகுணம் மாறிற்றே. அது ஒன்றே போதும். நீ போய் படுத்துறங்கு. நான் வெளியிற்சென்று வருகிறேன்.

(போகிறான்)

## களம் 3

### சந்த்ரவதனியின் அறை.

(சந்த்ரவதனியும் அஞ்சனாவதியும் பிரவேசிக்கிறார்கள்)

**சந்த்ர:**— அக்கா! அஞ்சனா! இப்பொழுது நீ எடுத்துத் தந்திருக்கிறாய் பார். இவைகள் மிகவும் நன்றாயிருக்கின்றன. இவ் ஆடைகளைத்தான் நாளை நான் தரித்துக்கொள்ளப் போகிறேன். அக்கா! இன்று இரவு நான் தனியாகத்தான் என் அறையில் படுத்துக்கொள்ளப்போகிறேன். நீகூட இருக்கக்கூடாது. ஏனென்றால் நான் எந்தவிதமாக ஆடையாபரணங்களை தரித்துக்கொண்டால் நாளை மிகவும் சௌந்தரியவதியாகக் காணப்படுவேனென்பதை இப்பொழுது தனிமையாகப் பார்த்துக்கொள்ளப்போகிறேன். ஆகையால் நீ போகலாம்.

(லீலாவதி வருகிறாள்)

**லீலா:**— சந்த்ரா! என்ன! ரொம்ப ரொம்ப அழகுபடுத்திக் கொள்ளுகிறாயே!

**சந்த்ர:**— அப்படி ஒன்றுமில்லை அம்மா. நாளை எனக்குவேண்டிய ஆடையாபரணங்களை எடுத்துக்கொண்டுவிட்டேன். இன்றையதினம் அஞ்சனாவையும் நீ கூட்டிக்கொண்டுபோ. ஏனென்றால் நாளை கலியாணமாகையால் வேலை மிகவும் அதிகமிருக்கும். உனக்கு ஒத்தாசையாகவிருப்பாள்.

**லீலா:**— ஆமாம், ஆமாம். நீ சொல்லுவது நியாயம்தான். அஞ்சனா! வா நாம் போவோம், நமக்கு வேலை மிகவும் அதிகமிருக்கிறது. குழந்தை சந்த்ராவும் தூங்கட்டும்.

(லீலாவதியும், அஞ்சனாவதியும் போகிறார்கள்)

சந்த்ரா:— அப்பா! ஒருவிதமாக் எல்லாம் ஆகிவிட்டது. யோகாநந்தர் சொல்லியபடி நான் தனிமையாகவிருக்கிறேன். இப்பொழுது அவர் கொடுத்த ஔஷதத்தை உட்கொள்ள வேண்டியதுதான் பாக்கி. என்னமோ எனக்கு அதை நினைத்துமே என்னைத் தெரியாமலே ஒருவித அச்சம் உண்டாகிறது; மயிர்க்கூச்சல் ஏற்படுகிறது; என்ன கெடுதி சம்பவிக்குமோவென்றே தோன்றுகிறது. சரி. மருந்துப் புட்டியைக் கையில் எடுப்போம். (புட்டியை விளக்குக்கு நேராகப் பிடித்துக்கொண்டு) ஒருவேளை இந்த மருந்து யோகாநந்தர் சொல்லியபடி மயக்கத்தை உண்டுபண்ணாமற் போனால் நாளை காலை என்கதி என்னவாகும்? எனக்குச் சம்மதமில்லாத விவாகத்திற்கு மறுபடியும் உள்பட நேரிடுமோ? சீ! அப்படியானால் என் மடியிலிருக்கப்பட்ட இந்தக்கத்தியினுடைய பிரயோஜனந்தான்யாது, என் மானத்தைக் காப்பாற்றாவிட்டால்? ஆனால் இப்பொழுது இதற்குத் தேவையில்லை. (கத்தியை உறையிற்போட்டு கீழேவைக்கிறாள்.) ஒருவேளை, யோகாநந்தர், தான்என்னை முன்னதாக ரத்னாகரனுக்கு விவாகத்தைச் செய்து வைத்ததினால், இப்பொழுது மற்றெவருக்கும் நான் வாழ்க்கைப் படும்படியாக அவர் முன்னிலையிலேயே நேர்ந்தால், தன்னுடைய செய்கைக்கும் பங்கம் வரக்கூடுமே என்பதை நினைத்து, என் உயிரையே போக்கக்கூடியதாயுள்ள விஷம் ஏதாவது தந்திருக்கக்கூடுமோ? எனக்கு அதை நினைத்தாலும் நடுக்கம் ஏற்படுகிறதே! சீ! இதென்ன பாழும் நினைவு. யோகாநந்தரைப்பற்றியா இவ்வாறு கேவலமாக சிந்திப்பது! அவர் அப்பொழுதே தன்னிடம் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று சொல்லியதற்கு நான் எவ்வளவு கோபித்துக்கொண்டு அவருடைய குணங்களைச் சிலாகித்துக் கூறினேன்! அப்படிப்பட்ட நானோ மறுபடியும் அவரைப்பற்றி இழிவாக நினைப்பது! ஒருக்காலும் கூடாது. ஆனால் ஒருவேளை ரத்னாகரன் என்னை அழைத்துக்கொண்டு போகுமுன்னதாகவே எனக்கு மயக்கம் தெளிந்து நான் எழுந்திருந்துவிட்டால் என்கதி என்ன? ஐயோ! பூந்தோட்டத்தில் மையமண்டபத்தில் தனியாக ஒரு பெண், எங்கு



பார்த்தாலும் கல்லறைகள்சூழ ஏகாங்கியாகவிருப்பது கூடுமோ! பகற்பொழுதை தனிமையாக அவ்விடத்தில் கழிப்பதே சிரமமாகும்; அப்படியிருக்க இரவும் தங்கும்படி நேரிட்டால்; சரிதான் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. அந்த ருக்மாங்கதனுடைய ஆவி, ரத்னாகரன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து அவன் வந்ததும் ஒரு எலும்பினால் அவன் மண்டையை அடித்து உடைத்துவிட்டால்! சீ! சீ!! கேவலம் ஸ்திரீ என்பதை இம்மாதிரியான கோழை எண்ணங்களால் வெளிப்படுத்திவிட்டேன். நாழிகையோ ஆகிவிட்டது. எனது எண்ணமோ ஒன்றுதான். எப்படியாவது நாளை நடக்கவிருக்கும் விவாகத்தை நடவாமற்செய்து எனது நாயகன் ரத்னாகரனை அடையவேண்டுமென்பதே, அதற்கு யோகாநந்தர் சொல்லிய வழி ஒன்றுதானிருக்கிறது. ஆகையால் இந்த மருந்தை உட்கொண்டுதான் தீரவேண்டும். சரி. உட்கொள்ளுகிறேன். (சாப்பிடுகிறாள்) ஸ்வாமீ! நான் நினைத்ததற்கு மாறாக ஒருவிதமான மயக்கம் மேலிடுகிறதே! ஏதோ தலை சுழலுகின்றது. நான் என் படுக்கையில்தானே இருக்கிறேன்? ஐயோ! என்நாதா! ரத்னாகரா! என் ஆருயிர் நாயகா! (படுக்கையில் விழுகிறாள்)

## களம் 4

வீர்யவர்மனின் வீட்டில் ஒரு அறை.

(லீலாவதியும், அஞ்சனாவதியும் பிரவேசிக்கிறார்கள்)

லீலா:— அஞ்சனா! சந்த்ராவுக்கு ஸ்நானம் செய்வதற்கு எல்லாம் தயாராக வைத்திருக்கின்றாயா?

அஞ்சனா:— ஆம் அம்மணீ! தாங்கள் ஒன்று சொல்லுகிறீர்கள். பரிசாரகன் ஒன்று கேட்கிறான். வாத்தியக்காரன் ஒன்று சொல்லுகிறான். நான் ஒருவள் எல்லோருக்கும் எப்படி பதில் சொல்லுவது. வாய் ஒன்றுதானே இருக்கிறது. எனது சரீரத்தைப் பார்த்தால் நான்கு வாய்களிருக்கலாம். ஆனால் இல்லையே!

(வீர்யவர்மன் பிரவேசிக்கிறான்)

வீர்ய:— என்னது? இல்லையென்ற வார்த்தை கேட்கிறது. இன்று ஒருநாளும் நமது வீட்டில் 'நாஸ்தி' என்ற வசனமே உச்சரிக்கக்கூடாது. நாழிகை அநேகமாக விடிந்துவிட்டது. இன்னும் பரிசாரகர்களெல்லோரும் வந்தபாட்டைக் காணோம். அஞ்சனா! வீட்டிலிருக்கும் மற்ற வேலைக்காரர்களையும் எழுப்பு பார்ப்போம். விடிந்தால் கலியாணம். இந்தமாதிரி குறட்டைபோட்டுத் தூங்கினால் மங்களமாகத்தானிருக்கும்.

லீலா:— உங்களுக்கு இரண்டு நாட்களாகத் தூக்கமே இல்லையே. சற்றுபடுத்து உறங்குங்கள். நான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்கிறேன். விடியற்காலம் 4 மணிக்கு உங்களை எழுப்புகின்றேன். நீங்களும் தூக்கவிழுப்பினால் ஜ்வரமாகப் படுத்துக்கொண்டுவிட்டால் நான் என்ன செய்கிறது?

வீர்ய:— எனக்கு ஒன்றும் வராது. நான் என்பாட்டைப் பார்த்துக்கொள்கிறேன். தூக்கம்தானா பெரிது? இன்று ஒரு நாள் பொழுதும் கழிந்துவிட்டால் நாளைமுதல் நன்றாகத் தூங்கேன். உன்னை யார் என்ன கேட்கப் போகிறார்கள்?

(சில வேலையாட்கள் கரிகாய்களுடன் உள்ளே நுழைகிறார்கள்)

யாரடா அது? கையில் என்னது?

வேலை:— சமையலுக்கு வேண்டிய காய்கறி இதரபதார்த்தங்களைச் சமையலறைக்குக் கொண்டுபோகின்றோம்.

வீர்ய:— சரி. நீபோ. உன்தம்பி எங்கேயடா? அவனைக் கூப்பிட்டு நல்ல காய்ந்த விறகுகளாகப் பொறுக்கிச் சமையற்காரனிடம் கொடுக்கச்சொல். ஈரமாகவிருந்தால் மிகவும் புகை ஏற்படும்.

வேலை:— அப்படியே.

வீர்ய:— அதோ வாத்தியம் கேட்கிறதே! கமலசேனன் வந்துவிட்டாற்போலிருக்கிறது. வாத்தியத்துடன் வருவதாகத்தான் சொன்னான். அஞ்சனா! லீலா! அஞ்சனா! எங்கே இந்தக்கழுதைகள் ஒருவரையும் காணோம். (அஞ்சனா வருகிறாள்) இந்தா; நீபோய் சந்த்ராவை எழுப்பி நன்றாக



அலங்காரம்செய். நான் அதற்குள்ளாக கமலசேனனை வரவேற்புச்செய்து அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யப் போகிறேன். (போகிறார்கள்)

## களம் 5.

### சந்த்ரவதனியின் அறை.

(அஞ்சனா பிரவேசிக்கிறாள்)

அஞ்சனா:— சந்த்ரா! சந்த்ரா! உனக்கு எப்பொழுதுமே இந்த விளையாட்டுத்தான். கூப்பிட்டதும் எழுந்திருக்கமாட்டாய். அப்புறம் என்னை ஏன் எழுப்பவில்லை என்று சண்டைசெய்வாய். உன்னைத்தொட்டும் எழுப்பக்கூடாது. நான்தான் என்ன செய்வது? உண்மையில் தூங்குகிறவளை எழுப்பலாம். விழித்துக்கொண்டு தூங்குவது போல் பாசாங்கு செய்பவளை யாரால் எழுப்பமுடியும்! அடி! சந்த்ரா! பிரபு கமல சேனன் வந்தாய்விட்டது. உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். சீக்கிரம் எழுந்திரு. ஸ்நானம் செய்துவிட்டுச் சிங்காரித்துக்கொள். எழுந்திரு பார்க்கலாம். என்ன! இன்னும் எழுந்திருக்கவில்லை. சரி. இன்றையத்தினம் தொட்டுத்தான் எழுப்பவேண்டும் (தொடுகிறாள்) என்ன இது! உடம்பெல்லாம் பனிக்கட்டி போல் ஜில்லென்று இருக்கிறது! கட்டைமாதிரி போட்டது போட்டபடி கிடக்கிறாள்! ஐயோ! மூச்சைக்காணோமே! இதென்னகாலமடி! சந்த்ரா! போய்விட்டாயே!

(லீலா பிரவேசிக்கிறாள்)

லீலா:— என்ன இரைச்சல் இங்கே!

அஞ்சனா:— அம்மணீ! இதென்னகாலம்!

லீலா:— என்ன சமாசாரம்?

அஞ்சனா:— இதோபாருங்கள் கொடுமையை.

லீலா:— ஐயையோ! இதென்ன கோலம்! மூச்சு இருக்கிறதா இல்லையா? அடிபாவி! என் வயிற்றெரிச்[illegible] வரை கொட்டிக்கொண்டு தீர்த்தாயா?

(வீர்யவர்மன் பிரவேசிக்கிறார்)

**வீர்ய:**— என்ன இது! எல்லோரும் கும்மாளி போடுகிறீர்களே யொழிய குழந்தையை எழுப்பி அலங்கரித்ததாகக் காணவில்லை. கமலசேனன் வந்து நாழிகை இரண்டு ஆகி விட்டது.

**அஞ்சனு:**— குழந்தையை வந்து பாருங்கள்.

**லீலா:**— நாதா! இந்தக்கொடுமையைப் பார்த்தீர்களா!

**வீர்ய:**— என்ன! உடம்பெல்லாம் குளிர்ந்திருக்கிறது! ஐயோ! ஸ்வாஸத்தைக்கூடக் காணுமே! இதென்ன இது இன்று பொழுது விடிந்ததவேளை. நான் இனி எப்படி அயலார் முகத்தில் விழிப்பது? சந்த்ரா இந்தக்கொடுமை செய்து விதிடாளே! சந்த்ரா! சந்த்ரா! கண்ணைத்திறக்க மாட்டாயா! வாய்திறந்து ஒரு வார்த்தைகூடப்பேச மாட்டாயா!

(யோகாநந்தரும் கமலசேனனும் வாத்தியங்களுடன் உள்ளே பிரவேசிக்கிறார்கள்)

**யோகா:**— ஏன் தாமதிக்கிறீர்கள்? பெண்ணை அலங்காரம் செய்தாய் விட்டதா என்ன?

**வீர்ய:**— அலங்காரமெல்லாம் ஆகிவிட்டது. இனி அவளை எங்குகொண்டு போவதென்பதுதான் தெரியவில்லை.

**யோகா:**— என்ன சமாசாரம்?

**வீர்ய:**— ஸ்வாமீ! சந்த்ராவினுடைய பூலோக வாழ்க்கை நேற்று ராத்திரியோடு தீர்ந்துவிட்டது. அதோபாருங்கள் அவள் மூச்சில்லாமல் கிடப்பதை.

**கமல:**— நான் இதுகாறும் பொருத்து கடைசியாகக் கலியாணம் வந்துவிட்டதென்று சந்தோஷப்படுவதற்கு முன்னதாக இப்பெரும் துக்கம் வந்துவிட்டதே. நான் இனி எப்படி இதாஜனங்களின் மத்தியில் ஒரு மனிதனைக விளங்கப்போகிறேன்.

**லீலா:**— இந்தமாதிரி அநியாயம் எங்கேதான் நடக்கும்? ஜன்மாந்திரத்தில் என்ன பாபம் செய்திருந்தேனே இம்மாதிரி



கஷ்டங்களை இப்பொழுது அனுபவிக்கும்படி நேரிட்டிருக்கிறது.

**வீர்ய.**— இதென்ன கொடுமையோ! ஏதோ ஒரு குழந்தைதான் பிறந்திருக்கிறது. அதாவது நோகா கலியாணமாகி நல்ல சந்ததிகளுடன் க்ஷேமமாக இருப்பாளென்று நினைத்தேன். தெய்வசம்மதமில்லை. என்னுடைய பிராணனும் இப்பொழுது போய்விட்டால் எனக்கு யாதொரு கவலையுமிராது. இனிமேல் நான் பூலோகத்திலிருப்பதில் பயனையும் காணேமே. என்னசெய்வேன்! தெய்வமே!

**யோகா:**— சிநேகிதர்களே! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கிறது. அரைக்ஷணத்திற்கப்பால் இன்னது வரப்போகிறதென்று நமக்கு தெரியக்கூடுமாயின் நாம் ஏன் இம்மாதிரி மனுஷ்ய ஜன்மம் எடுத்து அவஸ்தைப்பட வேண்டும்? நடந்ததோ நடந்தாகிவிட்டது. இனி நாம் எவ்வளவுதான் அழுதபோதிலும் குழந்தை எழுந்திருக்கக்கூடிய மார்க்கமிருக்கிறதா? இல்லையே. பூலோகத்தில் நடக்கிறதையெல்லாம் நல்லதுதான் என்று நினைக்கவேண்டும். எல்லோரும் கண்ணைத் துடையுங்கள். சந்த்ராவை உங்கள் குல ஆசாரப்படி இதே ஆடையாபரணங்களுடன் கல்லறைக்குக் கொண்டுபோக வேண்டியதுதான். தாமதிப்பதில் பயனில்லை.

**வீர்ய:**— "மணக்கோலம் பிணக்கோலமாயிற்று" என்று ஓர் கதை என் தகப்பனார் எனக்குச்சொல்லியிருக்கிறார். அது என் அனுபோகத்திலேயே ஏற்பட்டுவிட்டது. சந்த்ராவை மணக்கோலத்துடன் கோயிலுக்கு அழைத்துச்செல்வதற்குப்பதிலாக, பிணக்கோலத்துடன் கல்லறைக்குச் செல்வதை நான் எங்ஙனம் பார்த்து சகிப்பேன்! ஸ்வாமீ! தாங்கள்தான் மேல் நடக்கவேண்டிய காரியங்களை கவனிக்கவேண்டும். இனிமேல் என்னை ஒன்றிற்கும் எதிர்பார்க்க வேண்டாம். (போகிறார்கள்)

## அங்கம் 5 களம் 1

(புஷ்பபுரிக்கு அருகாமையில் ஓர் கிராமம்)

(ரத்னாகரன் பிரவேசிக்கிறான்)

**ரத்னா:—** என்ன! நான் கண்டதெல்லாம் கனவா அல்லது நினைவா? ஒன்றும் புலப்படவில்லையே! (கண்ணைத் துடைத்துக்கொண்டு) ஆம்! இப்பொழுது நினைவுவருகிறது. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தேன். அப்படியே சிறிதுநேரம் அயர்ந்து நித்திரைசெய்தேன். தூக்கத்தில் ஏதோ கனவு கண்டேனே! அதுவும்கூட இன்னதென்று இப்பொழுது சரியாகத் தெரியவில்லை. நான் இறந்து போய்விட்டதாகவும், சந்த்ராவந்து என்னைப் பார்த்து தூங்குகிறேனென்று நினைத்து ஓர் முத்தம் தந்தது போலவும் உடனே எனக்கும் மறுபடியும் ஜீவன் வந்துவிட்டாற் போலவும் தோன்றியது. ஆஹா! சந்த்ரா எங்கே? எங்கும் காணவில்லையே. அவளை எங்குதேடியும் காணாமலிருப்பதினால்தான் நான் கண்டது கனவு என்று தோன்றிற்று. காதலின் பாக்கியத்தைத்தான் என்னென்றுரைப்பது! (மித்திரகுப்தன் பிரவேசிக்கிறான்) மித்ரகுப்தா! புஷ்பபுரியிலிருந்து தானா வருகிறாய்? அங்கே எல்லோரும் சௌக்கியமா? யோகாநந்தரிடமிருந்து ஏதாவது கடிதம் கொண்டுவந்திருக்கிறாயா? எனது நாயகி சந்த்ரவதனி சௌக்கியமாயிருக்கிறாளா? என்ன? எல்லாவற்றிற்கும் பதிலுரையாமல் மௌனமாகவிருக்கிறாய்?

**மித்ரகுப்தன்:—** (கண்ணீர் உதிர்த்துக்கொண்டே) ஸ்வாமீ! தங்களிடம் நான் எவ்வாறு சமாசாரத்தைத் தெரிவிக்கப் போகிறேன்?

**ரத்னா:—** என்னடா சமாசாரம்? விம்மி விம்மி அழுகிறாய்! சந்த்ராவுக்கு ஒன்றும் இல்லையே? முதலில் இதற்கு பதில் சொல்.

**மித்ர:—** ஸ்வாமீ! சந்த்ரவதனி அம்மணி நேற்று ராத்திரி—



**ரத்னா:—** என்னடா தயங்குகிறாய்? சொல்லித்தொலையேன்!

**மித்ர:—** உயிர்துறந்தாள்.........

**ரத்னா:—** என்ன? சந்த்ராவா? உயிர் துறந்தனளா? நீ சொல்வது உண்மைதானா?

**மித்ர:—** ஆம். நேற்று இரவு இறந்துபோய் விட்டாள். அவளை அப்படியே செப்பரத்தில் அலங்காரம் செய்வித்து அவர்கள் முன்னோர்களை அடக்கம் செய்திருக்கும் கல்லறைப் பூந்தோட்டத்தில் மய்ய மண்டபத்தில் இன்றையதினம் வைத்திருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் நான் என் கண்ணாலேயே பார்த்துக்கொண்டிருந்தேன்.

**ரத்னா:—** ஆ தெய்வமே! (மூர்ச்சையற்றுக் கீழே விழுகிறான். மித்ரகுப்தன் சற்று ஆசுவாஸப் படுத்தியதின்பேரில் மூர்ச்சை தெளிந்து) ஐயோ! சற்று முன்புதானே சந்த்ராவை ஸ்வப்நத்தில் கண்டதாக நினைத்துச் சந்தோஷித்திருந்தேன்! அதற்குள் இந்தமாதிரி ஏற்பட்டுவிட்டதே. ஐயோ! நான் இறந்துபோய் அவள் என்னைப் பார்த்து தூங்குகிறவனென்று எண்ணினதாகக் கனவுகண்டதற்கு அவள் இறந்துபோய், நான் அவளைப்பார்க்கும்படி நேரிட்டு விட்டதே! ஈச்வரா! ஜகதீசா! இனி சந்த்ரா உயிர் துறந்த பின்னும் நானும் மூச்சுடனிருப்பதா? ஒருக்காலுமில்லை. கடைசிமுறையாக அவளுடைய திருமேனியையும் அழகிய வதனத்தையும் ஒருமுறை பார்த்துவிட்டு எனது பிராணனையும் போக்கிக்கொள்ள வேண்டியது தான். மித்ரகுப்தா! இரண்டு குதிரைகளைச் சவாரிக்காக திட்டம் செய்துவை. நான் சற்றுநேரத்தில் இங்குவருகிறேன். அதற்கப்பால் நீயும் நானும் புஷ்பபுரி போகலாம். (மித்ரகுப்தன் போகிறான்) சந்த்ரா! இன்றாத்திரி உன்னை வந்து பார்க்கிறேன். உன்னுடைய ஆவி உன்னைச் சுற்றித்திரிந்து கொண்டிருக்கும். அதற்குள்ளாக என்னுடைய ஆவியையும்போக்கிக்கொண்டுவிட்டால் இரண்டும் ஒன்றாக வெளியேறட்டும். சரி, எனதுயிரைப் போக்கிக்

கிக்கொள்வதற்கு என்ன உபாய மிருக்கிறது? (சற்று யோசித்து, பிறகு) சரி. இங்கிருந்து சற்று தூரத்திற் கப்பால் ஓர் வைத்தியர் இருக்கிறார். அவர் மிகவும் தாரித்திரிய திசையிலிருக்கிறார். அவரிடம் இந்தப் பணப்பையைக் கொடுத்து, அதற்குப் பதிலாக சிறிது பாஷாணம் வாங்கிவருகிறேன். வேறு உபாயம் ஒன்றும் தெரியவில்லை. (நடந்து போய்க்கொண்டே) இங்கேதானே வைத்தியருடைய வீடு இருக்கவேண்டும். ஆம். அதோ ஒரு பலகை தொங்கவிட்டிருக்கிறதே. அதில் என்ன எழுதியிருக்கிறதென்று பார்க்கிறேன். "சகலவிதமான ரோக நிவாரணத்திற்கும் ஔஷதம் சரஸமான விலைக்கு கிடைக்கும்". நமக்கோ விலையைப்பற்றி அக்கறையில்லை. ஆனால் வியாதி ஒன்றையும்தான் காணவில்லை. மனோவியாதிக்கு மருந்து எங்கே கிடைக்கும்? சரி, கேட்டுப் பார்ப்போம். கதவு தாளிடப்பட்டிருக்கிறதே. (கதவைத்தட்டி) ஐயா, வைத்தியரே! வைத்தியரைய்யா! கதவைத்திறவுங்கள்!

**வைத்தியர்:**— யாரது, இம்மாதிரி கதவைத்தட்டுவது?

**ரத்ன:**— வைத்தியரே! இங்கேவாருங்கள். தங்களிடம் வெகு நாட்களாகப் பேசவேண்டுமென்ற ஆசை எனக்கிருந்தது. அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதிகமான வார்த்தை பேசவும் இடமில்லாமல் இருக்கிறது. இதோ பாருங்கள் இந்தப் பணப்பையை. இதைத் தாங்கள் எடுத்து அதிலுள்ள பணத்தை உபயோகப் படுத்திக் கொள்ளுங்கள். தாங்கள் வறுமையினால் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருப்பது எனக்கு நன்றாகத்தெரியும். ஆனால் தாங்கள் எனக்கு சிறிது பாஷாணம் பதிலுக்குத் தரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**வைத்தியர்:**— (பணப்பையைக் கையிலெடுத்துப் பார்த்தவண்ணமாய்) ஐயா! நீர் யார்? எனக்கு உம்மை இதற்கு முன்னதாகத்தெரியாதே! திடீரென்று என்னிடம் வந்து பாஷாணம் விலைக்குக் கேட்கிறீரே. பாஷாணம் என்னிடம் கிடைக்கவும் கிடையாது. மேலும், சர்க்கார் அனுமதியின்றி பாஷாணம் விற்போர் தண்டிக்கப்படுவார்கள் என்பதும் தமக்குத் தெரியாதோ!



**ரத்ன:**— வைத்தியர் ஐயா! இந்தக் கதையெல்லாம் எனக்கு தேவையில்லை. உங்களிடம் பாஷாணமிருக்கிறதென்பதும் எனக்கு நன்றாகத்தெரியும். உங்களுக்குப்பணம் தேவை. எனக்குப் பாஷாணம் தேவை. ஆகையால் ஒன்றைப் பெற்றுக்கொண்டு மற்றொன்றைக் கொடுங்கள். இது விஷயம் வெளியில் ஒருவருக்கும் தெரியப்படுத்த மாட்டேன் என்பதை சத்தியமாகச் சொல்கிறேன்.

**வைத்தியர்:**— சரி. இங்கேயே இரு. நான் இதோ வருகிறேன். (உள்ளேசென்று ஒரு புட்டியுடன் திரும்பிவருகிறார்) இதோபார். இந்தப்புட்டியில் 6 துளி மருந்து இருக்கின்றது. அதனுடைய வாசனையே அநேகமாக ஆட்களைப் பருவம் பார்த்துவிடும். இதைப்பத்திரமாகக் கொண்டுபோய் உபயோகப்படுத்து. என்னமோ. நீ என்ன உபயோகத்திற்கு வாங்கிப்போகிறாய் என்பது எனக்குத் தெரியவில்லை. எனக்கு மனப்பூர்வமாக பாஷாணத்தை உன்னிடம் கொடுப்பதில் சம்மதமே இல்லை. ஆனால் தாரித்திரியதசை ஒன்று, இந்தப் பாழும் வயிற்றினுடைய தொந்திரவு மற்றொன்று, இவ்விரண்டிற்காகத்தான் நான் இக்காரியத்தைச்செய்கிறேன்.

**ரத்ன:**— வைத்தியர் ஐயா, உங்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுடைய வறுமையை உத்தேசித்துத்தான் நான் பணம் கொடுத்தேனே யொழிய உங்களுடைய மனத்தைப்பரீக்ஷிக்கவன்று. நான் போய்வருகிறேன். (போகிறான்)

## களம் 2

யோகானந்தர் ஆசிரமம்.

(சுகுணசீலர் பிரவேசிக்கிறார்.)

**சுகுணசீலர்:**— ஸ்வாமீ! யோகானந்த பரப்ரம்மம்!

(யோகாநந்தர் வருகிறார்)

**யோகா:**— நமோநம: நமோநம:, ஸ்வாமீ இப்பொழுதுதான் திரும்பி வாராற்போலும். சரி. ரத்னாகரனை சந்தித்தீர்களா? என்னபதில் சொல்லியனுப்பினான்? அல்லது தங்களிடம் ஏதாவது கடிதம் கொடுத்திருக்கிறானா?

**சுகுண:**— ஸ்வாமீ! அடியேன்கூட துணையாக நமது சிஷ்ய கோடியில் ஒருவரான "க்ருபாநிதி"யைக்கூட்டிப்போகலாமென்று அவரைத் தேடிப்பார்த்து, ஒரு வியாதியஸ்தர் வீட்டிற்குள்ளிருந்து க்ருபாநிதி வெளிவருவதைக்கண்டேன். அதற்குள் நமது ஊர்ஜனங்கள் ஒன்றுகூடி ஏதோ தொத்துவியாதி உள்ள இடத்திற்குப் போய்விட்டு வருகிறோம் என்று சந்தேகப்பட்டு எங்களை வைத்திய இலாகா தலைவரிடம் கூட்டிப்போய் பரிசோதனை செய்யச்செய்தார்கள். ஆகவே அடியேன் புறப்பட்டுப்போகும் விஷயம் சிறிது தாமதப்பட்டு விட்டது.

**யோகா:**— தாமதப்பட்டால் என்ன! தாங்கள்தான் கொண்டு போயிருக்கவேண்டுமென்ற அவசியமில்லையே. பின் என்னுடைய கடிதத்தை வேறு எவரிடம் கொடுத்தனுப்பினீர்கள்?

**சுகுண:**— அடியேன் அதைத்தான் தெரிவிக்க வாயெடுத்தேன். வேறு நம்பிக்கையான புள்ளி ஒருவருமில்லாததினால் கடிதத்தை அனுப்பவே முடியவில்லை. இதோ என்னிடம் தானிருக்கிறது.

**யோகா:**— ஆஹா! என்னகாரியம் செய்துவிட்டீர்கள்! குடிகெட்டுப்போய் விட்டதே! அந்தக் காகிதத்தில் மிகவும் முக்கியமான விஷயங்கள் எழுதியிருக்கிறேனே. இனிநான் என்னசெய்வது? சரி. தாங்கள் உள்ளேபோய் என்னுடைய கட்டாரியை எடுத்து வாருங்கள். (உள்ளே போகிறார்) என்ன சங்கடங்களெல்லாம்இழுத்துக்கொண்டு விட்டேன். இன்னும் 3 மணி நேரத்திற்குள்ளாக சந்த்ரா எழுந்திருந்துவிடுவாள். "ரத்னாகரா!" என்று சொல்லிக்கொண்டே எழுந்திருப்பாள். ரத்னாகரனை எங்கே என்று என்னைக் கேட்டால் நான் என்ன உத்திரம் சொல்வது? சரி. நான் முன்னதாக அங்கேபோய், அவள் எழுந்திருந்ததும் என்னுடன் கூட்டிக்கொண்டு எனது ஆசிரமத்திற்கு அழைத்துவந்து விடுகிறேன். அதற்கப்புறம் ரத்னாகரனுக்கு தகவல் தெரியப்படுத்தி எனது ஆசிரமத்திலிருந்து சந்த்ராவை கூட்டிப்போகச்செய்யலாம். ஆம் இதுவே நல்ல யோசனை. (போகிறார்)



## களம் 3

### கல்லறைப் பூந்தோட்டம்.

(கமலசேனன் பிரவேசிக்கிறார். அவர் பின்னால் ஓர் வேலைக்காரன் ஒரு கூடையில் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு வருகிறான்)

**கமல:**— அந்ததீவட்டியை எடுத்துக்கொண்டு, நீ சற்று தூரத்திற்கப்பால் உட்கார்ந்திரு. நான் உள்ளேபோய் என் வேலைகளை முடித்துவிட்டு வருகிறேன். அந்தப் புஷ்பக் குடலையைக்கொண்டுவா. யாராவது இங்கே வருகிற சப்தம் கேட்டால் அங்கிருந்து 'உஷார்' என்று ஒரு இறைச்சல் போடு. அதிலிருந்து நான் யாரோ வருகிறார்களென்பதைத்தெரிந்துகொண்டு திரும்பிவிடுகிறேன். தெரிகிறதா?

**வேலை:**— ஆகட்டும் ஸ்வாமீ. தாங்கள் சொல்லியபடி உஷாராகவிருக்கிறேன் (போகிறான்.) என்னமோ, எனக்கு இந்த நடுநிசியில் இங்கு தனியாக நிற்பது பயமாகவிருக்கிறது. நான் என்ன செய்வது?

**கமல:**— (புஷ்பங்களை எடுத்து சந்த்ராவின் பிரேதத்தின்பேரில் அர்ச்சனை செய்துகொண்டே) ஆ தெய்வமே! இந்தப் புஷ்பங்கள் செய்திருக்கக்கூடிய பாக்கியத்தைக்கூட நான் பெறவில்லையே. அவளுடைய தேகத்தைத் தொடுகின்ற பாக்கியம் புஷ்பங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நான்செய்த துர்ப்பாக்கியத்தினால் அவளுடைய மிருதுவான கையைக்

கூட ஒருதரம் எடுத்து முத்தமிட முடியாமற்போய்விட்டது. (தூரத்தில் உஷார் என்ற சப்தம் கேட்கிறது) 'உஷார்' என்ற சப்தம் கேட்டதே! யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. நான் சற்று தூரத்திற்கப்பாலிருந்து யார் வருகிறார்களென்பதைக் கவனிக்கிறேன். (ஒளிந்து கொள்கிறான்.) (ரத்னாகரன் மித்திரகுப்தனுடன் ஒரு பக்கம் வருகிறான்)

ரத்னா:— மித்ரகுப்தா! நான் இப்பொழுது உன்னிடம் சொல்லப்போவது மிகவும் முக்கியமான விஷயம். இந்தா ஒரு கடிதம். (கடிதத்தைக் கொடுக்கிறான்.) இதை நாளைக்காலையில் என் தாய் தந்தையரில் எவரிடமாவது கொடுக்கவேண்டும். வேறு ஒருவரிடமும் கொடுக்கக்கூடாது. மேலும் நீ இங்கேயே தனிமையாக விருக்கவேண்டும். அக்கட்டிடத்திற்கு நான் தனிமையாகப் போகப்போகிறேன். அங்கேபோய் என்னசெய்யப் போகிறேன் என்பதைப்பற்றி நீ கவலை கொள்ள வேண்டாம். நீ அங்கு வரவும் கூடாது. எனது அன்பான சந்த்ராவினுடைய கைவிரலில் நான் அவளுக்குக்கொடுத்த மோதிரமிருக்கவேண்டும். அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை எனக்கு மிக்க இருக்கிறது. அத்துடன் வேறு சில ரகசியங்களுமிருக்கின்றன. தெரிகிறதா?

மித்ர:— ஸ்வாமீ! தாங்கள் இவ்வளவு சொல்லுகிறமட்டிலும் நான் இந்த இடத்தைவிட்டே வெளியிற் போய்விடலாமென்று யோசிக்கிறேன்.

ரத்னா:— மெத்தவும் சந்தோஷம். அவ்விதமே செய். நீ போய் வா. நானும் உன்னிடம் விடைபெற்றுக்கொள்கிறேன். ஒருவேளை இனி உன்னைச் சந்திக்கக் கூடுமோ என்னமோ—

(உள்ளே போகிறான்)

மித்ர:— (தனக்குள்ளாக) என்னமோ எனது எஜமானனுடைய பேச்செல்லாம் ஒருவிதமாக விருக்கிறது. இங்கே ஒரு பக்கத்தில் ஒளிந்துகொண்டிருந்து என்ன நடக்கிறதென்று கவனிக்கிறேன். (ஒளிந்து கொள்கிறான்)



ரத்னா:— சந்த்ரா! சந்த்ரா! கடைசியாக இந்த இளம் பிராயத்திலேயே உன்னை இங்கு கொண்டுவந்து மண்ணிற்கு இரையாகச்செய்யும்படி நேரிட்டிருக்கிறதே! என்ன கொடுமை!

கமல:—(தனக்குள்) சரிதான். ருக்மாங்கதனைக்கொன்ற பாதகன் தான் இவன். அவனைக்கொன்றது போதாதென்று இங்கு வந்து அவனுடைய பிரேதத்தைச்சின்னப்படுத்த வேண்டுமென்ற கெட்டஎண்ணத்துடன் இங்கு வந்திருக்கிறான் போலிருக்கிறது. இருக்கட்டும். நான் இவனுடன் ஒரு கைபார்க்கிறேன். புஷ்பபுரியில் இவனை யார் பார்த்தாலும் இவனுடைய சிரசைச் சேதித்துவிடலாமென்று மகாராஜாவினுடைய ஆக்ஞையுமிருக்கிறது. ஆகவே எனக்கு என்ன பயம்? (வெளியில் வருகிறான்) அடே ரத்னாகரா! என்னகாரியம் செய்யத்துணிகிறாய்? ருக்மாங்கதனைக் கொன்றது ஒன்று போதாதா? அதே துக்கத்தினால் இதோ கிடக்கிற சந்த்ரவதனியினுடைய உயிரைப்போக்கினது போதாதா? இவையெல்லாம் போக இன்னும் வேறு என்ன ஹீனத்தொழில் செய்யத்துணிந்து இங்கு வந்திருக்கிறாய்? வா இங்கே என்னுடன் சண்டைக்கு. உன் உயிரை வாங்கி விடுகிறேன்.

ரத்னா:— எனது உயிரைக் கொடுப்பதற்காகவே இங்கு வந்திருக்கிறேன். ஆனால் உன் கையாலாவது, வேறு எவர் கையாலாவது நான் சாகமாட்டேன். தயவுசெய்து சற்று விலகி எட்டிப்போய்விடு. நான் இங்கு ஒருவருக்கும் ஒரு தீங்குமிழைக்கவரவில்லை. ஆனால் அனாவசியமான கேள்விகளைக் கேட்டுக்கொண்டிராது, என் நேரத்தையும் வீணாக்கி என் கோபத்தையும் கிளப்பாதே. தயவுசெய்து ஒதுங்கிப்போய்விடு.

கமல:— சரிதாண்டா. இந்தக்கதையெல்லாம் என்னிடம் பேசாதே. வா என்னுடன் சண்டைக்கு.

ரத்னா:— அவ்வளவு முரண்டு செய்தால் உன்னிடம் சண்டை செய்துதான் தீரவேண்டும். இல்லாவிட்டால் என்னுடைய

வேலைகளையும் சௌகர்யமாய்ச்செய்ய விடமாட்டாய் போலிருக்கிறது. (இருவரும் சண்டை செய்கிறார்கள்)

**வேலை:—** ஐயையோ! உள்ளே யாரோ சண்டை செய்கிறார்கள். நான் வெளியில் போய் காவற்காரர்களைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். (போகிறான்)

**கமல:—** (கீழே விழுந்தவனாய்) அடா பாபி! இரண்டு பேர்களைக்கொன்றது போதாதென்று மூன்றாவதாக என்னையும் கொன்றாய்? உனக்கு அணுவாகிலும் அனுதாபம் இருக்கும் பக்ஷத்தில் அதோ ஒரு ஸ்திரீயினுடைய பிரேதம் கிடக்கிறது, பார். அதன் பக்கத்தில் நான் இறந்ததும் என்னுடைய பிரேதத்தையும் வைத்துப் புதைத்துவிடு.

(சொல்லிமுடித்து இறக்கிறான்)

**ரத்ன:—** எல்லாம் பார்க்கலாம்—யாரது? இம்மாதிரி வேண்டிக்கொண்டது? முகத்தைப்பார்ப்போம்—சரி. இது மஹாராஜாவினுடைய உறவினர் கமலசேனனன்றோ. நான் புஷ்பபுரிக்கு குதிரையின்பேரில் வந்துகொண்டிருக்கும் பொழுது மித்திரகுப்தன் என்னென்னமோ சொல்லிக்கொண்டே வந்தானே. ஏதோ என் மனவருத்தத்தில் அவைகளைச் சரிவர நான் கவனிக்கவில்லை. அரைகுறையாகக் காதில் விழுந்தது. என்ன சொன்னான்? என்னமோ சந்த்ராவைக் கமலசேனனுக்குக் கல்யாணம் செய்வதாக அவளுடைய தாய் தந்தையர் நிச்சயித்ததாகவும் என்னென்னமோசொன்னான். இருக்கட்டும். அவன் சொல்லியபடி அவளுடைய பிரேதத்தின் பக்கத்திலாவது இவனை இழுத்துக்கொண்டு சேர்ப்போம் (அவ்விதமேசெய்கிறான்) சந்த்ரா! கடைசியாக உன்வதனத்தைப்பார்த்து விட்டு இறக்கவேண்டிய பாக்கியம் பெற்றேனே என்பதுதான் எனக்கு இப்பொழுது திருப்தி. ஆஹா! இதென்ன! இந்த முகத்தின் அழகு சிறிதும் குன்றவில்லையே! தூங்குகிறவள் போலல்லவா தோன்றுகிறாள்! உயிருடனிருந்த சௌந்தரியத்தைப்பார்க்கிலும் இப்பொழுது அதிகமாகவிருக்கிறது. முகத்திலும் பிரகாசம் அதிகம்! தெய்வமே இந்தக்



கொடுமை யெல்லாம் ஏற்படாதபடி, ருக்மாங்கதன் கையால் அன்றையதினமே நான் மடிந்திருக்கும்படி என் தலையில் எழுதியிருக்கக்கூடாதா? இவளுடைய அழகைப் பார்க்கப் பார்க்கச் சலிப்புத்தோன்றவில்லையே!(ஒருசப்தம் கேட்கிறது.) யாரோவருகிற சப்தம் கேட்கிறது. இனிதாமதித்தால் நம் காரியம் தவறிப்போய்விடும். உன்வதனத்தில் கடைசியாக ஒரு முத்தமாவது தருகிறேன். (முத்தமிடுகிறான்) சந்த்ரா! முன்காலத்தில் கணவன் இறந்துவிட்டால் ஸ்திரீகளும் உடன்கட்டை ஏறுவதென்றிருந்ததாகச் சொல்கிறார்கள். ஸ்திரீகள் எல்லோரும் அவ்விஷயத்தில் மனக்கிலேசமில்லாமல் ஈடுபட்டார்களோ என்னமோ, ஈசன்தான் அறிவார். ஆனால் உண்மையான காதலுடனிருக்கும் தம்பதிகளில் ஒருவர் மறித்தால் மற்றவரும் தன் பிராணனைப்போக்கிக்கொள்வதில் யோசனைசெய்யமாட்டார்களென்பதை நான் என் செய்கையின் மூலமாக வெளிப்படுத்துகிறேன். (பாஷாணத்தைக்குடிக்கிறான்) வைத்தியரே! தாங்கள் சொல்லியது சரிதான். இப்பொழுதே மேகமண்டலத்தைத் தாண்டி எனது ஆவிபோய்விட்டதாகத் தோன்றுகிறது! சந்த்ரா! உனது அருகில் வீழ்ந்தே மடிகிறேன். (கீழேவிழுந்து இறந்து போகிறான்)

(பூந்தோட்டத்தின் பின் பக்கம் வழியாக யோகானந்தர் கட்டாரி சகிதம் பிரவேசிக்கிறார்.)

**யோகா:—** ஜகதீசன் தான் நம்மைக்காப்பாற்றவேண்டும்! ஏதோ உண்மையான காதலர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று நினைத்ததற்கு ஏற்பட்டபயனைப் பார்த்தாயா? அதுயார், அங்கே நிற்பது?

**மித்ர:—** ஸ்வாமி! தங்கள் அடியன் மித்ரகுப்தன் ரத்னாகரனுடைய வேலையாள்.

**யோகா:—** அப்பா! அங்கே நீட்டி எதிர்த்துகொண்டிருக்கிறதே! அங்கே யாரிருக்கிறார்களென்று உனக்குத் தெரியுமா?

**மித்ர:—** ஸ்வாமி. எனது எஜமானன் ரத்னாகர் அங்கு போயிருக்கிறார்.

**யோகா:**—யார்? ரத்னாகரனா? எவ்வளவு நேரம் ஆயிற்று, அவன் உள்ளே போய்?

**மித்ர:**—சுமார் அரைமணி நேரமிருக்கலாம்.

**யோகா:**—அவ்வளவு நேரமா ஆகிவிட்டது. வா என்னுடன். இருவருமாக உள்ளே போகலாம்.

**மித்ர:**—நான் வரக்கூடாது ஸ்வாமீ. என்னை உள்ளேவரவேகூடாதென்றும், அவர்சொல்லைமீறி உள்ளே வந்தால் கொன்றுவிடுவதாகவும் பயமுறுத்தினார். அவருடைய அபிப்பிராயத்திற்குமாறாக நான் இதுகாறும் நடந்தவனில்லை ஆகையால் நான் இதைவிட்டே வெளியில் போய்விடுகிறேனென்று சொன்னேன். அவர், சரி அப்படியேசெய் என்று சொல்லிவிட்டு தான் மட்டும் உள்ளே போனார். ஆனால் எனக்கு அவரை உள்ளே தனிமையாக விட்டு விட்டு வெளியில் போக மனமில்லாதவனாக அப்பொழுது முதல் அவர் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு இங்கேயே நிற்கிறேன்.

**யோகா:**—சரி அப்படியானால் நீ இங்கேயே இரு. நான் போய் பார்த்து விட்டு, உன் எஜமானனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்.

**மித்ர:**—ஸ்வாமீ! இன்னுமொருசங்கதி. என் எஜமானனும் வேறு யாருமோ உள்ளே சண்டை செய்தார்கள். அப்பொழுது எனது எஜமானன் அவருடன் சண்டை செய்தவனைக் குத்திக்கொன்று விட்டதாகத் தெரிகிறது.

**யோகா:**— அதெல்லாம் சரி. நான் போய்ப் பார்க்கிறேன். (உள்ளே போகிறார்.) ரத்னாகரா! ரத்னாகரா! என்ன! சப்தமொன்றும் காணவில்லை? இதென்ன கீழே ரத்தக்கறை. எங்குபார்த்தாலும் ரத்தச்சுவடுதெரிகிறது? இந்தஇடத்தில் ரக்தம் வெள்ளமாகப் பெருகியிருக்கிறது. (சந்த்ராவிற்கருகாமையிற் போய்) என்ன ஆச்சரியம்! ரத்னாகரன் கீழேவிழுந்து கிடக்கிறான்! மூச்சுப் பேச்சைக்காணோம். உடம்பு கதகதவென்றிருக்கிறது. இப்பொழுது சற்று

600 008.



நேரத்திற்கு முன்பாகத்தான் இறந்திருப்பவன் போல் தெரிகிறது. இதென்னது? என்ன? கமலசேனன் குத்திக் காயப்படுத்திக் கொல்லப்பட்டிருக்கிறான்! எந்த வேளையில் நான் சந்த்ராவுக்கு மருந்தைக்கொடுத்தேனோ? அதுதான் இந்ததுரிதமான சாவுகளுக்குக்காரணமாகவிருக்கவேண்டுமென்று எனக்குத்தோன்றுகிறது. இதோபார், சந்த்ரா சற்று அசைகின்றாள். எழுந்திருக்கும் நேரமாகிவிட்டதே! நான் என்ன செய்வேன்! (சந்த்ரவதனிவிழிக்கிறாள்)

**சந்த்ர:**—யாரது? ஸ்வாமியா? நான் எங்கிருக்கிறேன்? (கண்ணைத் துடைத்துக்கொண்டு) ஓகோ! நான் எங்கிருக்கவேண்டுமென்று முன்னதாக தீர்மானம் செய்தேனோ அங்குதானிருக்கின்றேன். ஸ்வாமீ! எனது நாதன் எங்கே?

(சப்தம் கேட்கிறது.)

**யோகா:**—சந்த்ரா! குழந்தாய்! அங்கு எங்கேயோ சப்தம் கேட்கிறது. நீ தயவுசெய்து என்னை இப்பொழுது ஒரு கேள்வியும் கேட்காமல் என்னுடன் வா. நாம் என்ன விருந்தபோதிலும் மனிதர்கள் தானே. பின்வரப்போகிறது இன்னதென்பதை அறியக்கூடிய சக்தியில்லாதவர்கள்தானே. நாம் ஒன்று நினைத்தோம்; தெய்வம் நேர்விரோதமாக நினைத்திருக்கிறது. அதோபார், உனது புருஷனை; உனக்கருகாமையில் வீழ்ந்து இறந்து கிடப்பதை. நீ தயவுசெய்து சப்தம் செய்யாமல் என்னுடன் வந்துவிடு. உனக்கு இனிமேல் என்ன வேண்டுமோ அதைச்செய்கிறேன். அதோபார், காவல் காற்போர் வருகிறார்கள் போலிருக்கிறது.

**சந்த்ர:**—ஸ்வாமீ! நான் இனி ஒரு இடத்திற்கும் வரமாட்டேன். தாங்கள் போகலாம். (யோகாநந்தர் வெளியில் போகிறார்) என்ன ஆச்சரியம் இது! என் பிராணநாதன் உயிர்துறக்க வேண்டிய காரணமென்ன? ஏதாவது விஷஜந்துவின் கடியினால் மரித்தனரா? (சுற்றுமுற்றும் பார்த்து இதென்ன, கையில் ஓர் புட்டியை வைத்திருக்கின்றாரே! ஆகா! இப்பொழுது தெரிகின்றது. தானுமே விஷத்தை அருந்தி

யிருக்கிறார். இனிமேல் அவர் ஏன் அவ்விதம் செய்தாரென்பதை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. நாதா! இதென்ன? உங்களுக்கு என்மீதில் அந்தரங்க ப்ரீதியிருந்தால் எனக்கு ஒரு துளிகூட இந்த விஷத்தில் பாக்கிவைக்காமல் தாங்கள் பூராவையும் அருந்தியிருப்பீர்களா? ஒரு வேளை உங்கள் வாயில் ஏதாவது சிறிது விஷம் ஒட்டிக்கொண்டிருக்கும். அதையாவது சாப்பிடுகிறேன். (அவன் உதட்டில் முத்தமிடுகிறாள்) நாதா! உங்கள் உதடுகள் இன்னும் அதிமதுரமாக விருக்கின்றனவே! விஷம் அருந்தியிருந்தால் கசப்பாயல்லவோ விருக்கவேண்டும்? (மறுபடியும் முத்தமிடுகிறாள்.)

**முதல்காப்போன்:**—எங்கெடா? எந்தப் பக்கம் போனாங்கடா?

**சந்த்ர:**—ஐயையோ? சப்தம் கேட்கிறது. நான் என் காரியத்தை விரைவில் முடிக்கின்றேன். (ரத்னாகரனுடைய உடைவாளை எடுத்து) இந்தக்கத்திக்கு மாட்டுத்தோல் உறையைப்பார்க்கிலும் என் சரீர உறையே மேலானது. (அப்படியே மார்பில் குத்திக்கொள்கிறாள்) நாதா! உங்கள்பேரில் விழுந்து பிராணனை விடக்கூடிய பாக்கியம் பெற்றேனே! எனக்கு இனி என்ன குறைவு? (ரத்னாகரன்மேல் விழுந்து இறக்கிறாள்)

(காவல்காரப்போர் கமலசேனனுடைய வேலையாளைக்கூட்டிக் கொண்டு உள்ளே வருகிறார்கள்)

**வேலையாள்:**— அதோ தீவட்டி எரிகிறதே! அங்கேதான் இருப்பாங்கோ.

**மு. கா:**— அடே! எங்கே பார்த்தாலும் ரத்தம்டா, இதோ பாரு. நீங்கள் ரெண்டுபேரு இப்படிச் சுத்தித் தேடிப் பாருங்க. யாரானும் ஆப்டுக்கின்னா அவனை அப்படியே கொண்ணாந்திருங்க. தெரியுதா? (இரண்டு காப்போர் போகிறார்கள்) ஐயையோ! சந்த்ரம்மா கீழேவிழுந்து கிடக்கிறாங்க! அதாரு! கமலசேனன் போலிருக்கே! இதென்ன அநியாயம்! (காப்போரில் ஒருவன் மித்ரகுப்தனைக் கண்டு பிடித்து அழைத்து வருகிறான்)



**இ. கா:**— அந்தோ பார். ரத்னாகரனுடைய ஆளு. இவன் அந்த மரத்துப்பக்கத்தில் ஒளிஞ்சுகின்னு இருந்தான். நான் கண்டுபிடிச்சுப்போட்டேன்.

**முதல் ஆள்:**— அடே! அவனை இங்கே கட்டிப்போட்டுவிட்டு, நீ ஓடிப்போய் தெருவிலே சத்தம்போட்டு எல்லாரையும் கிளப்பிவிடு. இதோ பாரு. வீர்யவர்ம ஐயாவீட்டு ஆளு, விசித்ர வீர்ய ஐயாவீட்டு ஆளு, எல்லாத்தையும் கிளப்பிவிடு. நம்ப ராசாவும் சத்தத்தைக் கேட்டுட்டு இப்படி வருவாரு. நீ போ. (இரண்டாம் ஆள் போகிறான்)

(மூன்றாவது ஆள் யோகாநந்தருடன் வருகிறான்)

**மூ. ஆள்:**— இதோ பாரு இந்தச்சாமியாரை. இவரு கையிலே கட்டாறி, விளக்கு எல்லாம் வெச்சுக்கிட்டு இருந்தாரு. நான் அவரை அப்படியே கூட்டிக்கினு வந்தேன். ஏன் ஐயா! இந்தச்சாகசம் பண்ணரே.

**மு. ஆள்:**— சரிதான்! எல்லாம் ரொம்ப நல்லாருக்கு. அவரையும் இங்கே பிடிச்சுவை பார்ப்போம்.

(மஹாராஜா பரிவாரங்களுடன் வருகிறார்)

**மகாராஜா:**— என்ன சமாசாரம்டா இது? தெருவில் எங்கு பார்த்தாலும் அழுகை சப்தமும் இரைச்சலுமாக விருக்கிறது? என்ன விசேஷம்?

(வீர்யவர்மன் லீலாவதி எல்லோரும் வருகிறார்கள்)

**வீர்ய:**— என்ன சமாசாரம்? எங்கு பார்த்தாலும் அழுகைக் குரலாக விருக்கிறதே! என்ன சங்கதி?

**லீலா:**— ஊர்பூராவாக அல்லோல கல்லோலப்படுகிறது. என்னமோ சிலர் "ஐயோ! ரத்னாகரா" என்கிறார்கள்; சிலர் "பாபம், சந்த்ரா" என்கிறார்கள்; மற்றும் சிலர் "என்ன! கமலசேனன் கொலையுண்டார்!" என்கிறார்கள். எல்லோரும் கல்லரைப்பூந்தோட்டம் பக்கம் ஓடுகிறார்களே!

**மகா:**— என்னம்மா அது? தாங்கள் என்னமோ புதிராகச் சொல்லுகிறீர்கள். எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே.

**மு. ஆள்:**— மகாராஜா! இந்தோ பாருங்கள், கமலசேனனைக் கொன்னுப்போட்டிருக்கு. ரத்னாகரன் செத்துப்போயிருக்காரு. சந்த்ரா அம்மா செத்துப்போனான்னு [illegible]

அவளைக்குத்தியிருக்கு. பார்க்கறதற்கு இப்போதான் செத்துப்போனாப்பிலே தெரியுது. உடம்பிலே அவ்வளவு ஜூடு இருக்குது.

**மகா:**— இவையெல்லாம் எவ்விதம் நடைபெற்றதென்பதை நீ ஒன்றும் அறியாயா?

**முதல் ஆள்:**—மகாராசா! இதோ ஒரு சாமியாரு இருக்காரு. அதோ ரத்னாகரன் ஆளு இருக்காரு. அவங்களைக்கேட்டாத்தான் தெரியுங்க.

**வீர்ய:**— இதென்ன அநியாயம். நான் அவள் இறந்து போய் இரண்டு நாள் ஆகப்போகிறதென்றல்லவோ நினைத்தேன். அப்படியிருக்க இப்பொழுதுதான் உயிர் துறந்தாளென்றால் என்ன ஆச்சர்யம்! மேலும், ரத்னாகரனுடைய உடைவாள் இவளுடைய மார்பிலிருப்பானேன்!

**லீலா:**— ஐயோ! என்னை யாராவது தாங்கிக்கொள்ளுங்கள். என் தலைகிறுக்கி கீழேவிருக்கிறேனே!

(விசித்ரவீர்யனும் மற்றவர்களும் வருகிறார்கள்.)

**மகா:**—விசித்ரவீர்யா! என்ன கஷ்டகாலம் நம்மை எல்லாம் பீடிக்கிறது பார்த்தாயா? உனது வயது காலத்தில் உன்னுடைய ஏக புத்திரனாகிய ரத்னாகரனையும் பரிகொடுத்துவிட்டால் இனி உமக்கு வாழ்நாளில் என்ன சுகமிருக்கப் போகிறது?

**விசித்ர:**— மஹாராஜா! அதுமட்டுமல்ல. ரத்னாகரனுடைய தாயார் தன்புத்திரனுடைய மரணத்தைக் கேட்டதுதான்; உடனே கீழேமூர்ச்சையாய் விழுந்து விட்டாள். வைத்தியரை வரவழைத்துப்பார்த்தேன். இனிமேல் அவளைப் பார்த்துப் பிழைக்கவழியில்லையென்று சொல்லிவிட்டார். நான் அவளை வீட்டில் விட்டு விட்டு இங்கேவந்துவிட்டேன்.

**மகா:**— எல்லாமாயிற்று. இருந்தபோதிலும் இம்மாதிரியான சம்பவங்கள் நடக்கவேண்டிய காரணம் என்ன? உங்கள் இருவருக்கும் ஒருவருக்கொருவர் விரோதமாக விருந்தாலும் உங்களுடன் கலகம் தீரவேண்டியிருக்க, அது நம்மையுமன்றோ பாதித்துவிட்டது. சற்றுவிலகியிருங்கள். இந்த



சங்கதிகளெல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிந்தவர் யாராகிலும் சரி. முன் வாருங்கள்.

**யோகா:**— ஸ்வாமீ! அடியேனுக்குச் சிலவிஷயங்கள் தெரியும். அவற்றைச் சொல்லிவிடுகிறேன். அதற்கு மேல் நான் யதார்த்தமாக குற்றவாளியா, என்பதைத் தாங்களே தீர்மானம் செய்யுங்கள்.

**மகா:**— சரி. தமக்குத்தெரிந்தவற்றைச் சொல்லுங்கள்; கேட்போம்.

**யோகா:**— ஸ்வாமீ! சுருக்கமாகச் சொல்கிறேன், கேளுங்கள். முதல் முதலாக ரத்னாகரனுக்கும், சந்த்ரவதனிக்கும் நாளடைவில் காதல் ஏற்பட்டு, ஓர் தினம் என்னுடைய ஆசிரமத்திற்குவந்து, தங்களுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று பிரார்த்தித்ததின் பேரில், நான் விவாகம் செய்துவைத்தேன். அதே தினத்தில்தான் ரத்னாகரனுக்கும் ருக்மாங்கதனுக்கும் சண்டை நடந்து, ருக்மாங்கதன் மடியவும், தாங்கள் ரத்னாகரனுக்கு தீபாந்திரசிக்ஷை விதிக்கவும் ஏற்பட்டது. தன் பர்த்தாவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் சிக்ஷையைக்கேட்கவே சந்த்ரா கதிகலங்கி ஏக்கமுற்றிருந்தனள். ஆனால் மற்றவர்கள் ஏதோ ருக்மாங்கதனுக்காக வருத்தப்படுகிறாள் போலிருக்கிறதென்று நினைத்துச்சும்மாவிருந்தனர். அத்துடனிராமல், சந்த்ராவின் தாய்தந்தையர் அவளுடைய சம்மதத்திற்கும், அந்தரங்க ப்ரீதிக்கும் மாறாக, அவளை கமலாகரனுக்கு விவாகம்செய்து வைக்கப் போவதாகப் பிடிவாதமாகச் சொல்லிவிட்டு, சமீபத்தில் ஓர் நாளையும் குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே சந்த்ரா என்னிடம் ஓடிவந்து "ஸ்வாமீ! தாங்கள்தான் என்னை ரத்னாகரனுக்கு விவாகம் செய்தீர்கள். இப்பொழுது எனக்கு வந்திருக்கும் ஆபத்தினின்றும் என்னைத் தப்புவிக்கத் தாங்கள் ஏதும் உபாயம் தெரிவிக்காமற்போனால் நான் உங்கள் பாதத்திலேயே எனது பிராணனைப்போக்கிக்கொள்வேன்", என்றுசொல்லிக் கதறினாள். அதன் பேரில் நான்தான் அவளுக்கு ஒரு ஔஷதம் கொடுத்து, அவளை விவாகத்திற்கு முதல் நாள் இரவு சாப்பிடச்சொன்னேன்;

அந்த மருந்தினுடைய குணம் என்னவென்றால், அதை உட்கொண்டவர்களை 100 நாழிகை சுமாருக்கு இறந்தவர் போல் காணச்செய்யும். மற்ற சங்கதிளெல்லாம் நான் நினைத்தபடியே நடந்தது. இது விஷயங்களை யெல்லாம் ஓர் கடிதத்தில் எழுதி ரத்னாகரனுக்கு ஓர் ஆள் மூலம் அனுப்பினேன். ஆனால் தெய்வசம்மதம் வேறுவிதமாகவிருந்ததால், நான் அனுப்பின ஆள் சில அசந்தர்ப்பங்களால் போகவேயில்லை; காகிதத்தையும் கொடுக்கவில்லை.

மகா.— ஐயோ! பாபம்! இதனால்தான் இந்த தீங்குகள் எல்லாம் வந்திருக்கின்றனபோலும்.

யோகா:— அதைக்கேட்டு திடுக்கிட்டவனாய் நானாவது கல்லரைக்குவந்து சந்த்ரா எழுந்திருந்ததும் அவளைக்கூட்டிக் கொண்டு எனது ஆசிரமத்தில் வைத்துக்கொண்டிருந்து சாவகாசமாக ரத்னாகரனுக்குத் தகவல்படுத்தி, அவனிடம் அவளை ஒப்புவிக்கலாமென்று எண்ணி இவிடம் இந்தக் கட்டாறி, விளக்கு சகிதம் வந்தேன். ஆனால் நான் வரும் பொழுதே ரத்னாகரனும், கமலசேனனும் இறந்து கிடந்தார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் சந்த்ராவும் மயக்கம் தெளிந்து எழுந்திருந்தாள். என்னுடன் வரும்படி நான் எவ்வளவோ மன்றாடினேன். என்னுடைய வேண்டுதலுக்குச் சிறிதும் செவிசாய்க்காமல் தன் நாதனுடைய உடைவாளால் தன்னைத்தானே குத்திக்கொண்டு அவன்பேரில் விழுந்து உயிர்துறந்தாள். இவ்வளவுதான் ஸ்வாமீ எனக்குத்தெரியும். நான் இந்தப் பாபங்களில் எம்மட்டில் சம்மந்தப்பட்டிருக்கிறேனென்பதைத் தாங்களே நிதானித்துத் தீர்மானியுங்கள்.

மகா:— தாங்கள் பெரிய யோகீசுவரர் என்பது எல்லாருக்கும் நன்றாகத்தெரியும். தாங்கள் ஏதோ நல்லதுசெய்ய வேண்டுமென்றுதான் செய்திருக்கிறீர்கள். அது தெய்வத்திற்கு உகப்பாக விருந்தாலல்லவோ எல்லாம் நன்றாக நடந்திருக்கும். சரி. ரத்னாகரனுடைய வேலையாளெங்கே? அவனுக்குத் தெரிந்தவற்றைச் சொல்லச்சொல்.

மித்ர:— மகாராஜா! சந்த்ரா இறந்துவிட்டாளென்ற செய்தி நான்தான் என் எஜமானுக்குத் தெரியப்படுத்தினேன்.

டனே இரண்டு குதிரைகளின் மீதேறி, நானும் அவரு மாக மிகவும் அவசரத்துடன் இங்கு வந்தோம். உடனே அவர் என் கையில் இந்தக் கடிதத்தைக்கொடுத்து அதைத் தன் தாய்தந்தையரிடம் கொடுக்கும்படி உத்திர விட்டுத் தான்மட்டும் உள்ளே போய்விட்டார். என்னை அங்கேவரக்கூடாதென்றும், அப்படி மீறி உள்ளே வந்தால் என்னைக்கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினர். அதன் பேரில் நான் இங்கேயே நின்றுவிட்டேன்.

மஹா:— அந்தக்காகிதம் எங்கே? அதில் என்ன எழுதியிருக் கிறதென்று நாமே வாசித்துத் தெரிந்துகொள்வோம். கமலசேனனுடைய வேலைக்காரனெங்கே? அவனுக்கு என்ன தெரியுமென்பதையும் கேட்போம்.

வேலையாள்:— மகாராஜா! என் எஜமானும், நானும் பூக்குடலை யுடன் வந்தோம். இங்கு வந்ததும் என்னை இங்கேயே நிறுத்திவிட்டு தான்மட்டும் பூக்குடலையை எடுத்துக் கொண்டு உள்ளேபோனர். சற்றுநேரத்திற்கெல்லாம் மற் றொரு ஆள் விளக்கு சகிதம் உள்ளே வந்தான். உடனே இருவருக்கும் சண்டை ஆரம்பமாயிற்று. நான் வெளியில் ஓடிவந்து காவற்காரர்களை எழுப்பிக் கூட்டிக்கொண்டு போகலாமென்று ஓடிவந்தேன். காவற்காரர்களுடன், உள்ளேபோகும் பொழுது, என் எஜமான், ரத்னகரன், சந்த்ரா அம்மா, எல்லோரும் இறந்து கீழேவிழுந்துகிடந் தார்கள். எனக்கு இவ்வளவுதான் தெரியும் மகாராஜா!

மகா:—கேளுங்கள் பிரபுக்காள்! இந்தக் காகிதத்தில் ரத்னகரன் தெரிவிப்பது யாதெனில், தான் சந்த்ராவின் பேரில் வைத் திருந்த காதலுக்கு அளவில்லாமையாலும் அவளை மணந் தாலும், அவளுடன் வாழ்வதற்குள்ள பாக்கியத்தைப் பெறாமையாலும். தனக்குச் சாவேமேலென்று நினைத்து, வைத்தியனிடம் விஷத்தை விலைக்கு வாங்கி கொண்டு அதைச்சாப்பிடுவதாகத்தீர்மானம் செய்திருப்ப தாகத்தெரிகிறது. விசித்ரவீர்யா! வீர்யவர்மா! பார்த்தீர் களா! உங்களிருவருடைய பகையினால் ஒவ்வொருவருக் கும் நேரிட்ட தீங்குகளை! அதுடன் போதாமல்

இந்த நாட்டிற்கு அரசனு 'யிருந்து, உங்களிருவருக்கு முள்ள பகையை தீர்க்கவேண்டிய வழிகளைத்தேடு... அசட்டையாக விருந்ததைத் தெய்வமே ... ம... கதனையும், கமலசேனனையும் கொன்றாவித்தது. ஆகவே நம்முள் எல்லோரும் தீவிரமாகசிக்ஷிக்கப்பட்டு விட்டோம்.

**வீர்ய:—** விசித்ரவீர்யரே! நமக்கு நம் வாழ்நாட்களில் எந்தப் பொருளைவைத்து சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தோமோ அது நம்மிடமிருந்து அபகரிக்கப்பட்டுவிட்டது. இனி நம்முள் விரோதமெதற்கு? நாமோ தௌர்பாக்கியத்திற்கு ஒருவருக்கொருவர் தாழ்வில்லை. இனிமேலாவது பகை ஒன்றுமில்லாமலிருப்போம். (அவர் கையைப்பிடித்துச் செல்லுகிறான்)

**விசித்ர:—** பிரபு! தாங்கள் என்னிலும் வயதானவர்கள். தங்களுக்கு இம்மாதிரி ஆபத்து நேர்ந்திருக்கக்கூடாது. ஆனால் இவைகளுக்கெல்லாம் காரணம் நாமிருவருமே. இனிமேல் நம்முடைய உயிரே நம்மைவிட்டுப்போனபிறகு நமக்கு என் விரோதம்! நமது விரோதத்தைதான் இன்றைய தினம் அடக்கம் செய்யப் போகிறோமே!

**மகா:—** இன்று பொழுது விடிந்த வேளையைச் சொல்லவேண்டும். இரண்டு குடும்பங்களுக்குள் இந்தமாதிரி விரோதத்தையும் பார்த்ததில்லை. இம்மாதிரிய விரோதிகளின் வம்சத்தில் இருவருக்கு இம்மாதிரிய அன்பு ஏற்பட்டிருந்ததாகவும் கேள்விப்பட்டிருக்க மாட்டோம். பகைக்கு மருந்து ப்ரீதிபோலும்! தெய்வத்தின் வல்லமையைத்தான் என்னென்று போற்றுவது! சரி. மேல்காரியங்களை ஒழுங்காகச் செய்து முடியுங்கள். இத்துடனாவது நம்முடையநாட்டைச் சேர்ந்த துரதிர்ஷ்டம் எல்லாம் போய்விடட்டும். இனிமேல் க்ஷேமகாலம் பிறந்துவிட்ட தென்பதற்குத் தடையில்லை' எல்லோரும் போய்வாருங்கள். (போகிறார்கள்)

சுபம்!! சுபம்!!!

முற்றிற்று

22/12/10